**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing: Buying and Selling Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING: 10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG. Tel: 020 8772 4900
COLLIERS WOOD: 2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ. Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்
# ORU PAPER

FREE

PAPER - 08 ♦ ISSUE - 165 ♦ FRIDAY 09 MARCH 2012

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சம்பவித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- தசைநார் அசைவுக் நஷ்ட ஈடு (Neck, Back & Shoulder Pain)
- Terms & Conditions Apply)
- புனர் நிர்மாணம் அல்லது வாகன திருப்புகளுக்கான பூரண நஷ்ட ஈட்டுத்தொகை முதலில்

NO WIN NO FEE
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**nathan & co**
Pawnbrokers, Jewellers & Goldsmiths
HALF PRICE PAWN LOANS, HIGH VALUES, LOW RATES
BORROW £100
Nathan & Co charge £4.00 per month APR 52.7%
H&T Pawnbrokers charge £8.00 per month
Albermarle Bond charge £7.99 per month
Prices correct at 01.03.2012
61 Peckham High Street, Peckham, SE15 5EB Tel: 020 7701 7827
6 Tooting High Street, Tooting, SW17 0RG Tel: 020 3441 2202
www.nathan-co.co.uk

SPEAK TO OUR FRIENDLY TAMIL TRAVEL EXPERTS on 020 8866 3311
**Flyplaces** Worldwide Travel & Tours

| | |
|---|---|
| COLOMBO | from £169 |
| CHENNAI | from £189 |
| TIRUCHI | from £299 |
| TORONTO | from £199 |
| SINGAPORE | from £249 |

Email: info@flyplaces.co.uk
PRICE MATCH GUARANTEE
FOR BOOKING: 020 8866 3311
EMERGENCY No: 07904 000 037
We accept all major debit & credit cards
BRITISH AIRWAYS
Note: All fares mention are low season, excluding taxes/terms and condition apply.

குறைந்த வீத வட்டியில் அடைவு
அழையுங்கள்
020 8682 2233
Rathy Jewellers Tooting
209 Upper Tooting Road, Tooting SW17 7TG

**Keyboard, Violin & Guitar**
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன
அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது
OEBL Syllabus, Trinity college Syllabus க்கு ஏற்ப கற்பிக்கப்படுகிறது.
New malden, Morden, Sutton
Contact : 07917 128 581

**AKILAN ENTERPRISES**
உங்களுக்குத் தேவையான
- இசைக்கருவிகள்
- தெய்வீக வழிபாட்டுப் பொருட்கள்
- அழகுப் பொருட்கள்
- புத்தம் புதிய மதுரை மல்லிகைப்பூ
- கல்யாண மாலைகள்

அத்துடன்
Video & Photography
போன்றவற்றை பெற்றுக்கொள்ள உடன் அழையுங்கள்
274 High Street North, Manor Park, London E12 6SA
Tel : 020 8548 0033/ FAX 020 8548 0300

**PAWNBROKERS**
தங்கம், நகைகள், கைக்கடிகாரம், கார்கள் மற்றும் பெறுமதியான பொருட்களுக்கு ஈடாகக் கடன் வழங்கப்படும்.
- தாராளமான கடன் தொகை
- தனிப்பட்ட ரீதியான சேவை
- மிகச் சிறந்த வீதம்!
- இந்த விளம்பரத்தைக் கையளிப்போருக்கு 10%கழிவு

Est. 1976
www.maxcroft.co.uk
Maxcroft Tel 020 8518 1828
632 Eastern Ave, Ilford, Essex IG2 6PG (Near Gants Hill Tube)

Running **Restaurant For SALE!!**
15 years Lease!!
Located on a busy main road, with Leading schools and Bus stop nearby
- Very spacious Restaurant
- Rate: £7500
- Rent: £16,000 Per annum
- Turn Over:150K to 200K per annum
- Renewable every 5 years
- Canopy one is in the front and one is in the back
- Granted Alcohol Delivery Licence

மேலதிக விபரங்களுக்கு
Contact no: 07737 169 030

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Prime Training College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

**Our services:**

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு £ 190 .00 மட்டுமே (பரீட்சைக் கட்டணம் உட்பட)

You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

Tel: 020 8150 9953 | Mob: 075 3893 3261

இங்கே ஞாயிறு 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு.

**Branches**
- Wembley
- Tottenham
- Hendon
- Manchester
- Coventry
- Birmingham
- Bradford

**Head Office**
14 Lombard Business Park,
2 Purley Way, Croydon
CR0 3JP.

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

www.primetrainingcollege.co.uk

## Global fresh fish



**Billings gate market (Main branch)**
**Global fresh fish (Branch office in south Harrow)**

அனைத்து வகையான தரமான கடலுணவு வகைகளை மலிவாக நீங்கள் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள். உங்களின் எண்ணம் போல் வெட்டி சுத்தம் செய்தும் தரப்படும்.

Contact : Seenu

230 B, NorthHolt Road, South Harrow, Middlesex , HA2 8DU

Contact Tel : 020 8423 9938 ,07574 094 924

பிரியமானவர்களே...
**"உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்"**

இந்த தேசத்தில் உன் உள்ளம் எதை குறித்து கலங்குகிறது?

- கணவனின் குடி பழக்கத்தினால் நோகடிக்கப்படுகிறாயா?
- குழந்தையின் உடல் உள நிலையை குறித்து கலங்குகிறாயா?
- மரணத்திற்கேதுவான நோயா?
- கடன் தொல்லையா?
- பில்லி சூனியமா?
- பிள்ளைகளை குறித்து பாரமா?
- மன அழுத்தமா?
- கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனையா?
- திருமணமாகி குழந்தைகள் இல்லை என்று கலங்குகிறாயா?

*அருள்நாதர் இயேசு சொல்கிறார்:*
*"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் (இயேசு) எல்லோரும் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."*
*வாருங்கள் ஜெபிப்போம் இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெறுவோம்*

**ஞாயிறு ஆராதனை நடை பெறும் இடம்:**
19-21 Bellingham Estate, Bellingham,
Catford, Lewisham. SE6 3BX
**நேரம் 2.30 pm**
[Near **Bellingham station**]
[Bus Stop **Catford Bus Garage**]
**[Bus route no: 47,54,136, 171 ,199, 208, 320]**

தொடர்புகளுக்கு: **நல்ல சமாரியன் தேவ சபை**
**Bro. Edmond**
**Mob: 07877 977 086 Tel: 020 8691 2705**

## KALVIKOODAM TUITION CENTRE

லண்டன் வாழ் இலங்கைத் தமிழருக்கு ஓர் இனியசெய்தி.....!!!

FREE Basic Tamil Lessons

Tamil Lessons: Beginners, Intermediate, Advanced £5/hr

Maths, English, Science £10/hr per subject

தமிழ்மொழியை கற்க ஓர் சிறந்த இடத்தினை தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்காக ஓர் **கல்விக்கூடம்.**

தமிழ்மொழி மட்டுமின்றி கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற இன்னும் பல பாடங்களை ஒரே கூரையில் கற்க நாடவேண்டிய ஒரே இடம்.

**'கல்விக்கூடம்'**

edexcel
advancing learning, changing lives

IGCSE தமிழ்மொழிப் பரீட்சையை மாது அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தினூடாக வெளிவாரியாகத் தோற்றுதல் முறையும்

பிரதி ஞாயிறு தோறும்
10.00 மணிமுதல் - மாலை 08.00 மணிவரை நடைபெறும்

- தொடர்புகளுக்கு -
020 8090 3366
07738 056 950
www.kalvikoodam.co.uk

Harrow Branch
167, Imperial Drive
Harrow, HA2 7HD

Wembley Branch
24-28, London Road,
Wembley, HA9 7EX

Edgware Branch
2, Turner Road,
Edgware HA8 6BJ

## UK COOL AND SHOP FITTING

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

## SPIRITUAL HEALING & ASTROLOGY

FREE ABSOLUTELY FREE FREE

**உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார். இவரை ஒருமுறைசந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி,வியாபாரம், திருமணம், குழந்தை பாக்கியம், கணவன், மனைவி ஒற்றுமையின்மை, காதல் கலியாணம் மற்றும் விசா தொடர்பான விடயங்கள் பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம், அதிஸ்ட நம்பர்கள், கோர்ட் வழக்குகள், கண்திருட்டி பரிகாரம் செய்வார். சாந்தி செய்து தரப்படும்.**

**உடன் சந்தியுங்கள்.....**

People ask as to how he got such spiritual powers at such a young age. It is just one of God's miracles.

Please Take Prior Appointment

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

**GURU JI** [Spiritual Healer & Astrologer]

**07965 559 918 | Hounslow, Middlesex**

All matters will be kept confidently.



## ஆழ்ந்த அனுதாபங்கள்

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

ஈழத் தமிழ் மக்களின் விடிவுக்காக, உலக அரங்கில் குரல் எழுப்பும் சக்திகள் துர் அதிஷ்டவசமாக ஒடுங்கிப் போவது, தமிழர்களின் சாபக்கேடோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த வரிசையில் மேரி கொல்வின் அவர்களுக்கு நிகழ்ந்த அகால மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அவருடையநினைவாக ஒரு பேப்பர் ல் வெளியாகிய குறிப்பு மனதை நெகிழ்த்தியது. வாசகர்கள் சார்பாக அவரது குடும்பத்திற்குஎமது ஆழ்ந்த அனுதாபங்கள்

*அன்புடன் உமாமகாலிங்கம்*

## இவ்வளவு ஏமாற்றுகிறார்களா சட்டத்தரணிகள்...

நானும் இவர்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். சுகி சொல்வதைப் பார்த்தால் நான் கேள்விப் பட்டதிலும் பார்க்கக் கேவலமாக உள்ளதே. பல தஞ்சம் கோரியோர் திருப்பி அனுப்பப்படுவதற்கு இவர்கள் காசைத் தவிர வழக்கில் காட்டாத அக்கறை தான் காரணம் என்பதை அறிவேன். பாவம் உண்மையில் அக்கறையுடன் செயற்படுபவர்களுக்கும் மாசு கற்பிக்கிறார்களே இந்த வெறி பிடித்த கயவர்கள்....! இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

*கரிகாலன்*

## ஊடகங்களில் குழப்பம்

ஒரு பேப்பர் அண்ணன்மார் அக்காமார் அனைவருக்கும் வணக்கம்...

நானும் இந்தநாட்டில் பல வருடங்களாக வாழ்ந்து வருகின்றேன். இந்த நாட்டில் (லண்டன்) பல இலவச பத்திரிகைகள் வருகின்றன. ஆனாலும் (ஒரு பேப்பர்) மாதிரி ஒரு விடயத்தை பகிர்ந்து கொள்கிறேன். லண்டனில் பல ரேடியோக்கள், தொலைக் காட்சிகள் சேவை செய்கின்றன. இருப்பினும் அவைகள் மக்களை குழப்பி ஒருவருக்கு ஒருவர் குத்துப் படுகின்றனர். இதனால் மக்கள் குழப்பம் அடைந்த நிலையில் உள்ளனர். இதனால் இலங்கை அரசாங்கம் தான் நினைத்ததை தமிழனைக் கொண்டு (எதிரி) செய்ய செயற்படுகின்றனர். இதனால் எதிரி தான் நினைத்த விடயத்தை தமிழனை வைத்து நடத்தி முடிக்கின்றான். அதிலும் அவன்தான் வெற்றி பெறுகின்றான்

நான் பெரிது நீ பெரிது என்று என்று போட்டி போடாது எமது நாடு பெரிது என நினைத்தால் வாழ்வும் நாடும் செழிமையாகும்...

*என்றும் அன்புடன் ராம்ஸ்*

## சிறப்பான பயணம்...

சாஸ்திரி எழுதிய பயணம் 13 பாகங்களும் மிகச்சிறப்பாக கதை சொல்லும் பாணியில் அவருடைய போராட்டப்பயணத்தில் பல அனுபவங்களை, மனச்சாட்சிப் பதிவுகளைத் துல்லியமாகப் படம்பிடித்தது. விறுவிறுப்பாகச் சென்ற இந்தத் தொடர் நிறைவடைகின்றது என்கிற போது ஒரு வெறுமை தெரிகின்றது மனங்களிலே. நிச்சயமாக சாஸ்திரிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

*ஜெயபாலன்*

## களவு கூடிப்போச்சு..

நாட்டுப் பிரச்சனைபற்றி கவனத்தில் எடுத்து செயற்பட அமைப்புகள் இருக்கின்றன. உள்நாட்டுபிரச்சனையளை ஆர் ஐயா தீரக்கிறது? லண்டனிலை வர வர களவு கூடிக் கொண்டு போகிறது. இரண்டொரு கிழமைக்குள் ரூற்றிங் பகுதியில் ஐந்து தமிழர்களின் வீடுகளில் களவு போயிருக்கிறது. இதில் எங்கடையாட்கள் கைகளும்சேரந்திருக்கிறதாககதையடிபடுகிறது. என்ன செய்வது என்று தெரியவில்லை.

*நாரயணசாமி*

## தமிழுக்கு இரண்டாம் இடம்

Vanakkam,

I am very disappointed to see the news about Tamil teachers' Workshop It was a very popular work shop attended by 30 Tamil teachers. Your paper did not give much importance for such a workshop run by Cambridge University ASSET examination board with Goldsmiths University of London. Among 26 languages in UK number of students attend ASSET examination (>6000) stutents. Tamil is in the 2nd place in the ASSET table in UK.

*Siva Pillai, London SE14*

## கெட்ட கனவுகள் வருகுது..

ஒரு பேப்பர் 163 இல் பிரசுரமான கோத்தபாயவும் நானும் பார்த்தனான். வாத்தியாருக்கு நல்ல நல்ல கனவுகள் வருகுது. எங்களுக்கு அப்பிடி வரேல்லை கெட்ட கெட்ட கனவாகத் தான் வருகுது. உலகத் தெருக்கள் எல்லாம் நாங்கள் அலைந்திருந்த போதுபார்த்துக் கொண்டிருந்த பான். கி மூனுக்கு பாடை கட்டிறமாதிரி, ஒரு லட்சத்தி நாற்பதாயிரம் மக்களை இழந்தபோது, அறுபதாயிரம் மக்கள் தான் வன்னியில் சிக்குப்பட்டுக் கொண்டிருப்பதாக பொய்யுரைத்த பிராணம் முகர்ஜியின் மூக்கறுபடுவதுபோல், போர்நிறுத்தம் வந்தது என்று சொல்லி ஏமாற்றிய கருணாநிதி, காதல் படத்தில் வந்த கதாநாயகன் போல் விசர்பிடித்து திரிகிற மாதிரிஎல்லாம் கனவு வருகுது. உங்களுக்கு நல்ல கனவு வருகுது வாழ்த்துக்கள்

*இரத்தினகுமார்*

## அருமையான கட்டுரை

தம்பி என்.கணேசன்,

கடந்த இதழுக்கும் வழமை போல் அருமையான கட்டுரை தந்தீர்கள். நன்றி.. உங்கள் பணி எனது தொடர வாழ்த்துக்கள்.

மரணம் தவிர்க்க முடியாதது தான் அதற்காக 'மரண காலத்தை தீர்மானிக்கும் சக்தி நம்மிடம் இல்லை' என்பது எனக்குப் புரியவில்லை இயமதூதர்கள் பாசக் கயிற்றுடன் நொடி கூடத் தவறாது வந்து விடுவார்கள் என்ற பத்தாம்பசலிநம்பிக்கையா?முள்ளிவாய்க்காலில் நடந்தது அப்படித்தானா?

*தருமன்*

## Missing the teen paper

I was wondering what is happening with the youth section in Oru paper? The section has completely vanished, which is very disappointing as young teens use to enjoy reading that section and I really miss writing articles. Is there still an opportunity available?

*Flora S*

## நக்குறதுக்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன ?

இங்கிருந்து நாம் பணம் அனுப்பி கொழும்பு கூட்டணி அலுவலகத்தை நடத்துவதில் என்ன தவறு? அதற்கு விரும்பித்தானே நாமெல்லாம் பணம் கொடுத்தோம்? அதுபற்றிதேவையில்லாமல் எழுதுற ஆக்களுக்கு செக்கென்றாலும் ஒன்று தான் வேறு என்றாலும் ஒன்று தான்.

*சி.நாதன்*

ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு....
Tel : 020 7043 4314
www.facebook.com/orupaper
Email: editorial@orupaper.com

# ஈழப்பெண்கள் அவலம் போக்கிட உலகப் பெண்கள் நாளில் அணிதிரள்வோம்.

*மார்ச் 8 - அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பெண்கள், சிறுவர், முதியோர் விவகார அமைச்சர் பாலாம்பிகை முருகதாஸ் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் முழுவிபரம்:*

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பெண்கள், சிறுவர், முதியோர் விவகார அமைச்சர் என்ற வகையில், உலகில் எங்கெல்லாம் பெண்களுக்கான நீதி, சமத்துவம், சுதந்திரம் மறுக்கப்படுகிறதோ அப் பெண்கள் சமூகத்தின் விடிவிற்காகாக மனஉறுதியோடு திடசங்கற்பம்கொண்டு போராடும் பெண்களுடன், இன்றைய இப்பெண்கள் தினத்தில் கரம்கோர்த்துக் கொள்வதில் பெருமையும் உவகையும் அடைகின்றேன்.

சர்வதேச பெண்கள் தினமான இன்று தமிழீழப் பெண்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பற்ற நிலை பற்றி உலகுக்கு எடுத்துரைப்பதை என் தலையாய கடமையாகக் கருதுகிறேன். உலகின் மனிதநேய நிறுவனங்களில் ஒன்றான சர்வ தேச நெருக்கடிக்குழு 20.12.2011 அன்று வெளியிட்ட ஆசிய அறிக்கை இல.217, சிறிலங்காவின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ்ப் பெண்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்கள் மற்றும் சிறிலங்கா அரசாங்கம் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தனது சிங்கள இராணுவத்தை குவித்துள்ள காரணத்தால் குறிப்பாக தமிழ் பெண்கள் முகம்கொடுக்கும் பாதுகாப்பற்ற சூழல், பாலியல் துஸ்பிரயோகம், விபச்சார நிர்ப்பந்தம், சிறுமிகள் கற்பம் தரிக்கும் சம்பவங்கள், பாதிப்புற்ற பெண்கள் நீதி கேட்கவோ அன்றி சட்ட பரிகாரம் தேடிக்கொள்ளவோ, சிகிச்சை பெற்றுக்கொள்ளவோ முடியாத சூழ்நிலை போன்ற கொடுமைகளை உலக சமூகத்திற்கு அம்பலப்படுத்தியுள்ளது. சிறிலங்கா அரசாங்கமானது தன்து இராணுவம் புரியும் பாலியல் கொடுமைகளை, அத்துமீறல்களை தொடர்ச்சியாக மறுத்து வருவது மிகவும் கவலைக்குரியதும் ஏமாற்றம் அளிப்பதுமாகும். பாதிப்புற்ற சமூகம் சார்பில் குரல்கொடுத்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் சர்வதேச சமூகத்தை, இது தனது உள்நாட்டு விவகாரம், தனது மக்களை தானே பாதுகாத்துக்கொள்ள முடியுமென்ற காரணங்களைக்கூறி தடுத்து வருவது, உண்மையில் தனது இராணுவம் புரியும் அத்துமீறல்கள், பாலியல் கொடுமைகளுக்கு திரைமறைவில் தூபமிடும் செயலாகும். போருக்கு முன்னரான இராணுவ நடமாட்டம் குறைந்த காலப்பகுதியில், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இரவு பகல் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் பெண்கள் எவ்வித அச்சமுமின்றி பாதுபாப்புணர்வுடன் நடமாடக்கூடிய சூழ்நிலை நிலவியுள்ளது என்பதை சர்வதேச நெருக்கடிக்குழு தனது அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், யுத்தத்தின் கோர முடிவின் பின் பெண்களுக்கெதிரான பாலியல் பலாத்காரம், துஸ்பிரயோகம் என்பன முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மோசமடைந்து அதிகரித்துள்ளது. 2011 ஆண்டுப் பகுதியில்மட்டும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறுமிகள் கர்ப்பம் தரித்தல் கணிசமான அளவு கூடியுள்ளதாக யாழ்ப்பாணப் பிரதேசஅரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கூறியுள்ளார். சிறிலங்கா அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட 'கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு' அறிக்கையை பல நிறுவனங்கள் விமர்சித்துள்ளன. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, தமிழர் தேசிய மக்கள் முன்னணி, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், பிரதான கட்சிகளைச் சேர்ந்த பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள், சர்வதேச நெருக்கடிக் குழு, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வ தேச மன்னிப்புச் சபை ஆகியன அறிக்கையை விமர்சித்த நிறுவனங்களில் சிலவாகும். ஆனால், உள்நாட்டுத் தமிழ் மக்கள் இவ்வறிக்கை பற்றி வாய்திறக்க முடியாத அளவுக்கு அவர்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. இராணுவ பயமுறுத்தல் மூலம் அடிபணிய வைக்கப்படுகிறார்கள். சிறீலங்கா அரசாங்கத்தின் இத்தகைய கொடூர நடவடிக்கைகளினால், அதேசமயம் இவற்றை எல்லாம் கண்டும் காணாதது போல் நடந்துகொள்ளும் சர்வதேச சமூகத்தின் பாராமுகத்தால், தமிழ் மக்களின் இன்னல்கள் தொடர்கதையாவது கவலைக்குரியது

எனவே, இன்றைய இம்மேலான சர்வதேச பெண்கள் தினத்தில் நாம் சர்வதேசத்திடம் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், உரிமைகள் மறுக்கப்பட்டு நீதிக்காக ஏங்கும் ஈழத்தமிழர் சார்பில் தர்மத்தின் பேரால் தலையிட்டு சின்னாபின்னமாகும் தமிழர் சமுதாயம் உரிமைகள் பெற்று தலைநமிர்ந்து வாழ ஆவன செய்யுங்கள் என்பதே. உலகில் வாழும் ஒவ்வொரு பெண்ணும் நசுக்கப்படும் பெண்களுக்காக குரல் கொடுக்கவேண்டும், ஈழத்திலும் சரி உலகின் எந்த மூலையிலும் சரி பெண்களுக்கெதிரான அநீதிகளைச் சாடும் வகையில் திரண்டெழுந்து, அவர்களின் அவலநிலை போக்க அணிதிரள்வோம்.

*திருமதி பாலாம்பிகை முருகதாஸ்*
*பெண்கள், சிறுவர்கள் முதியோர் விவகார அமைச்சர் (நா.க.த.அ)*

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400



- ESOL with Citizenship
  - British Passport/ Naturalisation
  - Indefinite Leave to Remain
- International ESOL Diploma
  - Student Visa / Extension Test
  - Spouse Visa / Extension Test
  - Work Permit / Extension Test

- Courses from £200
- Successfully trained over 35,000 students
- Certificates within 20 days
- Multilingual staff
- City & Guilds approved centre

National Centres

| | | |
|---|---|---|
| BIRMINGHAM<br>7 Washington Street<br>Birmingham<br>B1 1JR<br>01216339919 | SHEFFIELD<br>Sorby House<br>42 Spital Hill, Sheffield<br>S4 7LG<br>01143034303 | LEICESTER<br>Imperial House<br>St Nicholas Circle, Leicester<br>LE1 4LF<br>01163260248 |
| LUTON<br>169 A, Dunstable Road<br>Luton.<br>Beds – LU1 1BW<br>01582723123 | SLOUGH<br>18-24 Stoke Road<br>Slough, Berkshire<br>SL2 5AG<br>01753722056 | NEWCASTLE<br>51-52 Victoria Avenue<br>Whitley Bay, Tyne & Wear<br>Newcastle Upon Tyne – NE26 2BA<br>01912525265 |

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, MARCH 09, 2012, ISSUE 165

## சிறிலங்காவை தம்வழிக்கு கொண்டுவர ஒரு தீர்மானம்

ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் வடஅமெரிக்கா கொண்டுவரவுள்ள தீரமானத்தின் முன்வரைபு வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கனவே எதிர்பார்த்தது போன்று, சிறிலங்கா அரசாங்கத்தின் 'நல்லிணக்க' ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு சிறிலங்கா அரசை வேண்டுவதாக இத்தீர்மானம் அமையவுள்ளது. இந்த வரைபானது மற்றய நாடுகளுக்கு ஏற்புடையதாக இருப்பதற்காக மேலும் வலுக் குறைக்கப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இலங்கைத்தீவில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றினை ஏற்படுத்துவதற்கான தீர்மானம் ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் நிறைவேற்றப்படும் அல்லது பொதுவில் சர்வதேசம் இப்பொழுது தமிழர்களின் பக்கமிருக்கிறது என்ற எதிர்பார்ப்புடன் இருந்தவர்களுக்கு இத்தீர்மானம் ஏமாற்றத்தையளிப்பதாக அமையக் கூடும். ஆனால் வட அமெரிக்காவின் தீர்மானமும், அதனை எதிர்க்கும் நாடுகளின் நடவடிக்கைகளும், ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் இருப்பையே கேள்விக்குறியாக ஆக்குகின்றது என்பதனை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ் மக்களுடானான யுத்தத்தில், சிறிலங்கா அரசினால் மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மேற்கொண்டு இவ்விடயம் தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற பரிந்துரையையும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இவற்றையெல்லாம் புறந்தள்ளவிட்டு, சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளால் நிராகரிக்கப்பட்ட சிறிலங்காவின் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு கோருவது தனித்து வட அமெரிக்கா - சிறிலங்கா ஆகிய இருநாட்டு உறவுகள் தொடர்பான ஒரு நடவடிக்கையாகவே தெரிகிறது.

தென்னாசியப்பிராந்தியத்தில் தமது புவிசார் நலன்களுக்கு விரோதமாக, அப்பிராந்தியத்தில் உள்ள வல்லரசுகளுடன் சிறிலங்கா கூட்டுச் சேர்வதனை எச்சரிக்கும் ஒரு வழிமுறையாக இந்தத்தீர்மானம் பயன்படுத்தப்படுகிறதே தவிர, மனிதவுரிமைகள் விடயம் இங்கு கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது புலனாகிறது.

இவ்விடயத்தில்ஒரு அமைதியான இராசதந்திரம் ஒளிந்திருப்பதாக தமிழ்தேசியக் கூட்டமைப்பும் அதன் தோழமை அமைப்பான உலகத்தமிழர் பேரவையும் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. மாறாக வடஅமெரிக்காவின் தீர்மானம் தொடர்பான தமது விளக்கத்தினை மக்கள் மத்தியில் வெளிப்படுத்த வேண்டியது இவர்களின் கடமையாகும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*நாங்கள் வெளியிடுகிற ஆக்கங்கள் நல்லதோ கெட்டதோ அதுகளைப் பற்றின உங்கடை அபிப்பிராயங்களை எங்களுக்கு அனுப்புங்கோ எண்டு நாங்கள் உங்களை அடிக்கடி கேட்கிறம். நீங்களோ அக்கறை காட்டுறதாய் தெரியவில்லை. ஆக்கங்களை எழுதிற ஆக்கள் அதுபற்றின பின்னூட்டங்கள் கிடைக்காட்டி கிணத்திலை போட்ட கல்லு மாதிரி என்ன நடக்குது எண்டு தெரியாமல் எழுதவே பஞ்சிப்படியினம். சரி இதுகளை ஒருதரும் வாசிக்கிறதில்லையாக்கும் எண்டால், வழி தெருவிலை காணுகிற ஆக்கள், அந்தக்கட்டுரை இப்பிடி இருந்தது ..இது இப்பிடி இருந்தது எண்டு ஒரு முறையான திறனாய்வே செய்கிறார்கள். இன்னும் சிலர் எங்களைப்பார்த்து முறைக்கிறார்கள், அப்ப விளங்குது இவையளுக்கு நாங்கள் எழுதினதிலை என்னவோ பிடிக்கேல்லை எண்டு.*

*போனவருசம் கோடைகாலத்திலை வந்த ஒரு பேப்பரிலை என்ரை படம் வந்தது அதுக்கு நீங்கள் எழுதின கொமன்ற் எனக்கு கொஞ்சமும் பிடிக்கேல்லை எண்டு போன கிழமை கண்ட இடத்திலை ஒரு அக்கா குறைப்பட்டா. அவா சொல்லும்வரைக்கும் அது அவவுக்கு பிடிச்சுதோ இல்லையோ எண்டு எங்களுக்கு தெரியாது. தெரிஞ்சிருந்தால் மேற்கொண்டு இப்பிடியான விசயங்களைச் செய்யமாட்டம். எங்களைத் தொடர்பு கொள்ள எல்லா தகவல் பரிவர்த்தனை வழிமுறைகளையும் ஏற்படுத்தித்தந்தாலும் அதுகளை பாவிக்க மாட்டியளாம் எண்டதுதான் எங்கடை குறை.*

*உடப்பிடித்தான், உமா மகாலிங்கம் ஐயா எழுதிற தகவல் களஞ்சியம் நல்ல பயனுள்ள விசயங்களைக் கொண்டிருக்கு எண்டு கன ஆட்கள் சொல்லியிருக்கினம். அட இதுகளை எங்களுக்கு எழுதி வைச்சால், அல்லது போனடிச்சு மெசேஜ் விட்டால்தானே அவருக்கு நாங்கள் சொல்லலாம்.*

*சயந்தனின் 'ஆறா வடு' மற்றது இரவி அண்ணை எழுதின இரண்டு புத்தங்கள் ஆகிய மூண்டையும் லண்டனிலை வெளியிட்டு வைக்க இருக்கிறம். வெளியீட்டுவிழா எண்டால் பொன்னாடை போத்திற விளையாட்டுகள் ஒண்டும் இல்லை ஒரு கலந்துரையாடல் மாதிரி இருக்கும். எல்லாருக்கும் கதைக்கிற சந்தர்ப்பம் கொடுப்பம். எப்ப இந்த விழா எண்டு அடுத்தடுத்த பேப்பரிலை அறிவிக்கிறம். அநேகமாக ஏப்பிரல் நடுப்பகுதியிலைதான வைக்கிறதாய் யோசிச்சிருக்கிறம்.*

*மறக்கிறதுக்கு முன்னம் இன்னொண்டையும் சொல்லோணும், **ஒரு பேப்பர்** கிடைக்கவில்லை என்று கவலப்படுகிற ஆக்கள் தயவு செய்து சந்தாதாரர்களாக சேர்நது கொள்ளுங்கோ, உலகத்திலை எந்தப்பகுதியிலை இருந்தாலும், பேப்பர் வீடு தேடிவரும். இல்லையெண்டால் இணையத்திலை முழுமையாக வருகிறது. என்ன ஒண்டு இணையப்பதிப்பை கழிப்றைக்குள்ளே கொண்டுபோய் வாசிக்கேலாது, (நீங்கள் மடிக்கணணி அல்லது ஐபாட் உடன்தான் கழிப்பறைக்கு போகிற ஆள் ஆக இருந்தால் இணையப் பதிப்பை அங்கேயிருந்தும் வாசிக்கலாம்)*

*அப்ப சந்திப்பம் என்ன....*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# With media gagged or threatened, no progress for freedom of information



**Reporters Without Borders**

Reporters Without Borders calls on all members of the Geneva-based United Nations Human Rights Council, which began its 19th session yesterday, to pass a resolution condemning the Sri Lankan government's violations of freedom of information and to demand an end to threats and violence against news media and human rights defenders in Sri Lanka.

"For more than a year we have been seeing new forms of censorship and a deterioration in journalists' ability to work although the war with the Liberation Tigers of Tamil Eelam (LTTE) officially ended in 2009," Reporters Without Borders said. "Rather than wait until the Universal Periodic Review to make recommendations, the Human Rights Council's members should adopt a resolution now urging the government to take measures to improve freedom of information.

"The number of cases of physical attacks, death threats and imprisonment may have fallen in 2010 and 2011, but the authorities continue to prevent the media from enjoying real editorial freedom and many journalists are still in exile. Sri Lankan and foreign media are still unable to cover the issue of war crimes, which will be at the centre of the Human Rights Council's discussions during the 19th session.

"An immediate reaction is needed to the obstruction of journalists who want to cover the activities of the Lessons Learned and Reconciliation Commission (LLRC) and to self-censorship on this subject for fear of reprisals. The Human Rights Council must remind the Sri Lankan government of the importance of the media's role as a critic and urge it to respect freedom of information. We call on the government to accept constructive questions from civil society and to stop branding its critics as 'conspirators' and 'LTTE accomplices'."

**January - February 2012 timeline**

Journalists and media defenders have been the constant targets of violence, threats and propaganda. The censorship of websites, especially those based abroad, has increased since the beginning of 2011. The events of the past two months amply illustrate the way the government is treating journalists.

Since 25 February: Distributed Denial-of-Service Attacks (DDoS) have been disrupting web traffic of TamilNet.com. The service provider is struggling to keep the website online.

23 February: The supreme court held its third hearing on the blocking of news websites. Access to four leading independent news websites – SriLankaMirror, SriLankaGuardian, Paparacigossip9 and LankaWayNews – has been blocked since 6 November on the orders of the information ministry, which announced on 5 November that all news websites with "any content relating to Sri Lanka" needed to register with the ministry.

16 February: The defence ministry posted an article on its website accusing Journalists for Democracy in Sri Lanka (JDS), an exile organization, of "treachery and conspiracy" against the government and security forces on the eve of the Human Rights Council's 19th session.

15 February: Prasad Purnimal Jayamanne, a freelance journalist working for the BBC's Sinhalese service and a member of the South Asian Free Media Association (SAFMA), was attacked and badly beaten while filming a demonstration by fishermen in Chilaw, 100 km north of Colombo, in protest against the death of a fisherman at the hands of the police and the injuries sustained by others. Jayamanne had to be hospitalized.

8 February: The state-owned daily Dinamina accused the Free Media Movement of obstructing democracy and freedom in Sri Lanka, giving the country a bad image, and inciting separatism and terrorism.

26-27 January: Media minister Keheliya Rambukwella accused journalists of collaborating with the LTTE and with foreign media and NGOs in order to smear Sri Lanka's image. He said he had a list of journalists working against the government, including the organisers of the "Black January" campaign, which was based on the fact that there were major press freedom violations every January during the past three years. They included Sunday Leader editor Lasantha Wickrematunge's murder in January 2009 and political cartoonist Prageeth Ekneligoda's disappearance in January 2010, which have become symbols of violence against the media and the impunity enjoyed by those responsible.

25 January (and following days): After the Alliance of Media Organizations in Sri Lanka held a "Black January" demonstration (which had to be moved to a different location because of a counter-demonstration by government supporters), some of the demonstration's organizers were followed by unidentified individuals for several days.

10 January: The government accused the Free Media Movement of collaborating with the political opposition and organizing a campaign to get the European Union to suspend Sri Lanka's preferential trade status under the GSP+ accord.

5 January: The start of the trial of a man accused of the April 2005 murder of journalist Dharmeratnam Sivaram was postponed by Colombo high court judge P. Surasena after the prosecutor said he was unable to proceed because six prosecution witnesses, including two policemen, had failed to show up. The judge also dissolved the jury. Sivaram was kidnapped in Colombo and his body was found near the parliament building the next day.

January (start of the month): When state-controlled Independent Television Network (ITN) broadcast footage of media freedom activists demonstrating during the September 2011 session of the UN Human Rights Council, it accused them of being LTTE members.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், கற்பனையில் கட்டும் MP பதவியும்!

ஜெனீவாவின் ஐ.நா முன்றலில் கூடிநின்று தமிழர்கள் நடாத்தும் சாத்வீகப் போராட்டமும், ஐ.நாவின் உள் அறைகளில் இருந்து கொண்டு நடந்து முடிந்த வரலாற்றுப் பின்னடைவுகளிற்கு உயிர் கொடுத்தும் - சாயம் பூசியும் தப்பித்துக்கொள்ள முயலும் கூட்டத்திற்கும் இடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் தர்ம யுத்தம் உலகளாவிய ரீதியாக தமிழரின் வாழ்வியல் இருத்தல்களை அசைவு காண வைத்திருக்கப் போகின்றது என்பது பலரின் எதிர்பார்ப்புக்கள். இதனிடையே 'சண்டைக்குள் சாக்குவிரிக்கும்' நிலையைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 'நாணொருபக்கம் நீயொரு பக்கம்' மாக நின்று கைறிழுக்கும் போட்டியை தனக்கு சாதகமாக மாற்றிக்கொள்ள இலங்கை அரசின் கழுகுப் போக்கு மிகப் பெரிய அதிர்வலையையும், மாற்றத்தையும் உண்டு பண்ணலாம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் 'மிட்டாய் வாங்கப் போகும் குழந்தை அடம்பிடிப்பது' போன்று ஐ.நா கூட்டத்தொடருக்கு வரமாட்டேன் என்றொரு பக்கம், போகவேண்டும் என்பவர் இன்னொரு பக்கமாகவும் வெட்டவெளிச்சமாய் சமர் புரிந்துவிட்டு, 'இன்னமும் நாங்கள் ஒற்றுமையாய்த்தான் முடிவெடுக்கின்றோம்' என ஊடகங்களுக்கு கருத்து வழங்கும் மேதாவித் தன்மையை எண்ணும்போது தமிழர் காதுகளில் இன்னமும் பூ சுற்றலாம் என இவர்கள் நினைப்பது இன்றைய நகைச்சுவையின் உச்சம்.

தமிழ்த்தேசியக் கூட்டமமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் தன்னிச்சையான முடிவு என ஏனையோர் தப்பித்துக் கொள்ள முயல்வது சுயநலமாகும். இலங்கை ஜனாதிபதியை இரா சம்பந்தன் தனியே சந்தித்ததற்கும், ஜெனீவா பயணம் இரத்தானதற்கும் தொடர்புகள் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். இது ஒரு பெரிய விடயமல்ல. கூட்டமைப்பு பாராளுமன்ற அங்கத்தவர்களின் ஏகோபித்த முடிவு எதுவாயினும் அதுவே அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனின் தனிப்பட்ட ஒவ்வாத முடிவை மாற்றுவதற்கு அல்லது நடைமுறைப் படுத்துவதற்கு ஏனைய உறுப்பினர்களுக்கு திராணி இல்லாமல் போய்விட்டதென்றால் இவர்களின் முதுகெலும்பின் பலத்தையும், அடுத்ததாகத் தலைமை தாங்கக் கூடிய இயல்பையும் கூடவே இவர்களது சுயநலத்தையும் பகுத்தாய்ந்து முடிவெடுப்பதற்கு தமிழ்மக்களினால் முடியாததொரு காரியமல்ல.

தமிழ்த்தேசியத்தில் பற்றுறுதி இருப்பின் செயற்பாட்டிலும் ஓர்மம் இருக்கும். தனியவே பாராளுமன்ற கதிரைகளை நம்புபவர்களுக்கு ஓர்மத்தை விட சுயநலமே மிகுதியாக இருக்கும்.

கடந்தகால சில நிகழ்வுகளை புரட்டும் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், கிஷோர், தங்கேஸ்வரி, கஜேந்திரன், சிறீகாந்தா போன்றவர்களின் நிலைகள் நினைவுக்கு வருகிறது. இரா. சம்பந்தன் அவர்களோடு பகைத்துக்கொண்டால் அல்லது முரண்பட்டுக் கொண்டால் எதிர்கால பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோய்விடுமோ என்ற பயம் தற்போதைய உறுப்பினர்களுக்கு மிதமிஞ்சி நிற்பதைக் காணலாம். தமிழ்த்தேசியம் பெரிதா? அல்லது நிலையற்ற சிங்கள அரசுக்குள் போலி மேட்டுமை நிலையோடு வாழும் பாராளுமன்ற கதிரை அவசியமா? இது தான் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தமிழ்மக்களின் பகுப்பாய்வுத் தன்மை எனலாம்.

இது ஒருபுறமிருக்க, தமிழ்மக்களின் வாக்குகள் 'கதிரைக்காக விழுந்தவைகள் அல்ல' அவை தேசியத்தைப் பெறுவதற்காகவே கிடைத்தவை என உணர்த்துதலுமாகும். அடுத்த தேர்தலுக்கு போட்டியிடும் வாய்ப்பை இழந்தாலும் அல்லது இரா சம்பந்தன் அதற்கான வாய்ப்பை வழங்காமல் இருந்தாலும் இவை எவற்றையும் பொருட்படுத்தாது தமிழ்த்தேசிய நலன் கருதி ஜெனீவா மாநாட்டில் தற்போதைய MPக்கள் கலந்துகொண்டிருக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜெனீவா பயணம் பற்றி நோக்கின் இரா. சம்பந்தனின் முடிவை மீறி, தமிழ்த்தேசியத்தின் அடைவை இலக்காகக் கொண்டு இப்போதைய உறுப்பினர்கள் இயங்கி இருப்பார்கள் எனின் பிரச்சனைகள் பூதாகரமாக வெடித்திருக்கவும் மாட்டாது - சிங்கள ஊடகங்கள் 'கூட்டமைப்புக்குள் குத்து வெட்டு' என்று பாடித்திரிந்திருக்கவும் மாட்டார்கள்.

உண்மையான தமிழ்த்தேசியத்தை எவர் நெஞ்சில் பதித்துள்ளார்களோ அதுவே அவர்களின் கொள்கையாக இருக்கும். சுயநலம் என்பதற்கு இடமிருக்காது. எதில் பிறழ்வு ஏற்படுகிறதோ அதில் தெளிவு இருக்காது. ஆக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் தேசியம் சார்ந்த உறுதி குன்றியதே இந்நிலைக்கு காரணமென கருத இடமுண்டு.

இன்னமும் பிந்தவில்லை. ஜெனீவா மாநாட்டுடன் தமிழ்த்தேசிய வரலாறு முற்றுப்பெறப் போவதில்லை. தொடரப் போகும் சாத்வீகப் போராட்டங்களில் தமிழருக்கான நிலை எடுப்புக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேசியம் சார்ந்ததாக எடுத்தாக வேண்டும்.

தேசியத்தின்பால் எதையும் தூக்கி வீசலாம். சம்பந்தர் போன்ற எத்தனையோ தலைவர்களின் வரலாறுகளை கடந்தகாலம் கற்பித்துச் சென்றுவிட்டது. தேசியக் கடமைப்பாட்டிலிருந்து இதுவரை தமிழ்மக்கள் விலகவில்லை. உறுப்பினர்களும், அமைப்புக்களும் தடம் மாறிவிட்டன. எதிர்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தனியொரு சம்பந்தன் போன்ற தலைவர்களை வைத்தோ, கட்சியை வைத்தோ முடிவெடுக்காமல் தமிழ்த்தேசியத்தை வைத்து முடிவெடுக்க வேண்டும் என்பதே உணர்வுகளுடன் கொப்பளித்துக் கொண்டிருக்கும் தமிழ்மக்களின் உள்ளக் குமுறல்கள் ஆகும்.

*மலையூர் பண்ணாகத்தான்*
*(தணல்.கொம்)*

# "Bring Independence to Tamil Eelam – The only Justice to Tamil Genocide Victims!"

**By: Nadarajah Balasubramaniam (PFLT-UK)**

Frequent reminders by Colombo's ruling elite that the ethnic minority would have to accept the country as Sinhalese land only confirmed that the genocidal war was not really about defeating the LTTE, but part of a larger strategy to Sinhalicise the entire island.

The exercise of the Sri Lankan government's efforts to alter the demographic character of traditional Tamil areas, by settling Sinhalese peasants, Sinhalese military and creating high-security zones, are mainly to weaken the Tamil resolve. Since the LTTE remained the only hindrance to this Sinhalese agenda, its military defeat ultimately resulted in the political, social and psychological subjugation of Tamils living on the island. The Sri Lankan state had already achieved this objective in most areas not under LTTE control, well before the war, a conspiracy well orchestrated and well executed by the major powers India, The UK and The USA.

The genocide of Tamils was a long process and the George Bush's "war on terror" policy, well supported by Tony Blair, was been exploited in an unjustifiable way to quench the thirst of the national extremism of the Sinhala majority in Sri Lanka. Sonia's Congress government of India in actual sense did in effect underwrite and completed the annihilation of the LTTE and the Tamils who happily lived for the first time during the ceasefire period in the Northern and the Eastern parts of the country, the traditional homeland of Tamils. There the territorial sovereignty of the sorts that the LTTE had effectively enforced and in a way accepted, appreciated and encouraged by the fair international communities and non-governmental organizations at large.

On 26th of November 2003, Chris Patten met with the Tamils leader Prabhakaran.

*"Hundreds of members and supporters of the radical Patriotic National Movement took to the streets today and protested against the visiting European Union Commissioner for External Relations, ChristopherPatten and his scheduled meeting with LTTE leader Velupillai Prabhakaran in Wanni tomorrow". (26 th November,2003)* Colombo, November 25 (Colombo press)

Anyway during this period, there was consensus in world opinion for a political solution based on the UN accepted; 'traditional homelands of Ethnic minorities principle'.

Then it was the Case of evil force raising their heads.But spontaneously there was the talk of ' Project Beacon'. The plan code-named 'Project Beacon' was first presented to the Co-Chairs to the peace process in Sri Lanka, namely United States European Union Norway and Japan, during December 2005 in the Norwegian capital Oslo.

The Modus operandi of Project Beacon was to divided LTTE administered areas as at December 2005 into three coastal sections. The basic plan was to 'softening up' of sections by means of air raids and multi-barrel rockets diversionary 'mini-offensives' in parts of other sections, and virtual siege of the area concerned for up to twelve months if necessary.

The U.N. political chief B. Lynn Pascoe said recently that, "Unfortunately, the international community has also failed in its duty to stop the carnage, and actions and inactions to date have seemed to encourage the regime in its belief that it has impunity to carry out the wanton destruction of its own civilians."

Don't get it wrong. This was said, when members of the Geneva-based council were expected to pass a resolution condemning 'widespread and systematic violations of human rights and fundamental freedoms by the Syrian authorities. Where were this so called international community when 40,000 innocents were butchered in Vanni in May 2009 by Barbarians of this Planet, the Sonia congress government and the government of Sri Lanka.! Is it hypocrisy, double standard or both, possibly.

.Instances of genocide have taken place throughout history. With the 1878 suspension of the Ottoman Constitution, reform-minded Ottomans resorted to organizing overseas or underground. The back bone of the movement was formed by young military officers who were especially disturbed by the continuing decline of Ottoman power and attributed the crisis to the absence of an environment for change and progress.

Thus the horrible crime first happened to the Armenians then after the Armenians, Hitler took action.

A legal definition of genocide is found in the 1948 United Nations Convention on the Prevention and punishment of the Crime of Genocide (CPPCG)

It is by now well recognized that genocide requires the active participation of many members of a society and the passive acquiescence of many more. It is a crime of the many, rather than of the few.

In that sense, the genocide against the Eelam Tamils is unique, here the participation of the perpetrators are not individuals, not monsters or psychopaths but different governments in power and against these the United Nations is just a poodle.

The Indian government, oh no, the Sonia Congress government of India even overcompensated by shielding Sri Lanka from international criticism – solely on the strength of the promise of a political settlement to devolve power. They provided intelligence, naval support , infantry and satellite monitoring and much more. As a direct result of this it became clear and established that India lost its leverage with Colombo.

Now Sonia Congress is like the naked Emperor, who wore the special cloths that is invisible to those unfit for their positions.

The Obama administration is Just pushing the resolution as a means of pressuring the Rajapakse government to accommodate US interests, UK interests and those of India, the joint perpetrators of genocide of Tamils.

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: ORU PAPER
Bank: HSBC
A/C: 61429035
S/C: 40-33-09

# ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com


*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# ரோகோ நாட்டில் துன்புறுத்தல்களுக்கு உள்ளான இலங்கைத் தமிழ் அகதிகள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படும் சாத்தியம்.



சென்ற நவம்பரில் (2011) ரோகோ நாட்டின் லோம் நகரில் கைதான இலங்கைத் தமிழ் அகதிகளும் தஞ்சம் கோருபவர்களுமான 203 பேர்களும் திருப்பி அனுப்பப்படும் சாத்தியம் நிலவுவதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின், அகதிகள், உள்ளூர் இடம்பெயர்ந்தோர், போர்க் கைதிகள் ஆகிய துறைகளின் அமைச்சு கூறுகின்றது. தேசிய ஜென்டமாரிக் காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர்களுள் 6 பிள்ளைகளும் நான்கு குழந்தைகளும் அடங்குவர். பிபிசியின் தகவல்படி அவர்கள் வள்ளத்தில் கானாவிலிருந்து இந்தியா எதியோப்பியா ஊடாக கனடா செல்ல இருந்தவர்களாம். ரோகோவில் உள்ள யு.என்.எச்.சி.ஆர் பாதுகாப்பு அலுவலர் Stephanie Woldenberg அம்மையாருக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சு இதுபற்றி அறிவித்திருந்தது. மேலும் தடுப்பு முகாம் தரம் குறைந்ததாகவும் போதிய இடவசதி அற்றதாகவும் உடல்நலன் குன்றியோருக்குத் தேவையான மருத்துவ வசதி அற்றதென்றும் அமைச்சு கூறுகின்றது. இதைவிட பெண்கைதிகள் குளிக்கும்போது ரோகோ அலுவலர்கள் புகைப்படம் வேறு எடுக்கிறார்களாம்.

அவர்களை ரோகோ செஞ்சிலுவையினருடன் சென்று பார்வையிட Woldenberg அம்மையார் பொறுப்பானவர்களிடம் அனுமதி கோரினார். அச்சூழலில் போதிய உணவு, மருந்து நுளம்பு வலை ஆகியன வழங்கப்பட்டன. அம்மையாரும் அவர்கள் யு.என்.எச்.சி.ஆர் கட்டாயத் திட்டத்துள் பாதுகாக்கப்பட்டவர்களென்றும் தங்களால் இயன்ற உதவி செய்வதாகவும் உறுதி மொழி வழங்கியிருந்தார்.

ஆனால் டிசெம்பர் 25க்கு பின் ரோகோ அலுவலர்கள் யு.என்.எச்.சிஆருக்கு அகதிகளுடன் தொடர்பு கொள்ள அனுமதி வழங்கவில்லை. அதன் விளைவு யு.என்.எச்.சி.ஆர் அவர்களுடன் தொடர்பைத் துண்டித்தது.

நாடுகடந்த அமைச்சுக்கு கசிந்த தகவற்படி தங்களை இனங்காட்டாத முகவர்களின் சித்திரவதையாலும் வற்புறுத்தலாலும் அங்கிருந்த அகதிகள் நாடு திரும்பச் சம்மதம் தெரிவிக்கும் அனைத்துலக குடிபெயர்வு நிறுவனத்தின் ஆவணங்களில் கையெழுத்திட்டதாகத் தெரிகிறது. அவர்களில் 20 பேர் பெப்ரவரி 3ல் அனுப்பப்பட இருந்தார்கள். எஞ்சியோர் தங்களுக்கு என்ன நடக்கும் என்று ஏதும் அறியா நிலையில் இருந்தார்கள்.

இந்த கட்டாய நாடுகடத்தலை தடுக்க நாடு கடந்த தமிழீழ அரச அமைச்சு உடன் முயற்சியாக கனடாவின் மனித உரிமைச் சட்டத்தரணி Winnipegக்குடனும் ரோகோவின் உள்ளூர் சட்டத்தரணியுடனும் 2009ல் 40,000 அப்பாவித் தமிழர் படுகொலை அனைத்துலக மன்னிப்புச் சபை அறிக்கையின்படி அரச விடுதலைப் புலிகள் போரின் கொடூர முடிவு, சனல் 4ல் காட்டப்பட்ட இலங்கையின் கொலைக்களம் ஆகிய விபரங்களுடன் தொடர்பு கொண்டார்கள்.

**நாடுகடந்த அமைச்சுக்கு கசிந்த தகவற்படி தங்களை இனங்காட்டாத முகவர்களின் சித்திரவதையாலும் வற்புறுத்தலாலும் அங்கிருந்த அகதிகள் நாடு திரும்பச் சம்மதம் தெரிவிக்கும் அனைத்துலக குடிபெயர்வு நிறுவனத்தின் ஆவணங்களில் கையெழுத்திட்டதாக தெரிகிறது.**

1951ன் ஜெனிவா அகதிகள் பாரம்பரிய ஒழுங்கில் கையெழுத்திட்ட நாடுகளில் ஒன்றுதான் ரோகோ. இதனால் இச்செயல்களுக்குப் பதில் சொல்லவேண்டும்.

தொடர்புகளுக்கு

Minister Muthukumarasamy Ratna

m.ratna@tgte.org Deputy Minister Alex Doss: alexdoss@tgte.org

Visit at http;//www.tgte-us.org and contact at

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## எல்லாம் ஒரு நாள் முடியும்!

இது வரை படித்த பாடங்கள் எல்லாம் வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் வாழ வழிகாட்டுபவை. நிறைவாகவும், மகிழ்ச்சியாகவும் வாழக் கற்றுக் கொடுப்பவை. இந்த பாடங்களைப் புரிந்து கொள்வது சுலபம். ஆனால் இவற்றை வாழ்ந்து காட்டுவது சுலபமல்ல. பெரும்பாலானோரும் சில பாடங்களில் தேர்ச்சி பெற்று விடுகிறோம். சிலவற்றிலோ பற்பல முறைகள் சறுக்கி விடுகிறோம்.

எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்று சிறப்பு பெறுவது யதார்த்த உலகில் அவ்வளவு எளிதான விஷயமல்ல என்பதை வாழ்ந்து பார்க்கும் போது தான் நமக்குப் புரிகிறது. எல்லாப் பாடங்களையும்கற்று கடைபிடிக்க ஒரு வாழ்நாள் போதுமானதாக இருப்பதில்லை என்பதையும் பலர் உணர்கிறார்கள்.

மஹாராஸ்டிர மாநிலத்தில் ஏகநாதர் என்ற ஞானி வாழ்ந்து வந்தார். அவர் முகத்தில் எப்போதும் அமைதியும், புன்னகையும் தவழும். அவரை நீண்ட நாட்களாகக் கவனித்து வந்த ஒரு மனிதருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் பல ஆன்மிகவாதிகளைப் பார்த்திருக்கிறார். ஆனால் இந்த அளவு தொடர்ந்து அமைதியாக இருக்க முடிந்த ஆட்களைப் பார்த்ததில்லை. ஒரு முறை அமைதியாக இருக்க முடிந்த நபர் இன்னொரு முறை அமைதியாக இருப்பதில்லை. இப்படி எதிலேயும் பாதிக்கப்படாமல் தொடர்ந்து அமைதியாக இருக்க முடிவது என்றால் அதில் ஏதோ ரகசியம் அல்லது சூட்சுமம் இருக்க வேண்டும் என்று நினைத்தார்.

ஒரு நாள் அதை அவர் ஏகநாதரிடம் சென்று கேட்டே விட்டார். 'சுவாமி உங்களால் எப்படி இப்படி அமைதியாக, இருக்க முடிகிறது? இப்படி முடிவதன் ரகசியம் என்ன?'

ஏகநாதர் அவரையே உற்றுப் பார்த்து விட்டு 'நீ உன் கையைக் காட்டு' என்றார். அந்த மனிதரும் தன் கையை நீட்டினார். அவரது ரேகைகளை ஆராய்ந்த ஏகநாதர் 'உனக்கு இன்னும் ஏழு நாட்கள் ஆயுள் தான் பாக்கி இருக்கிறது'

அந்த மனிதருக்கு அதிர்ச்சி. ஏதோ கேட்க வந்து ஏதோ கேட்க நேர்ந்ததே என்று மனம் நொந்தார். ஏகநாதரின் அமைதியின் ரகசியம் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை விட அதிகமாய் சுயபச்சாதாபம் அவருக்குள் வந்தது. ஞானிகள் எக்காலத்தையும் அறிய வல்லவர்கள் என்பதால் அவருக்கு ஏகநாதர் சொன்னதில் எந்த சந்தேகமும் இல்லை. அவசரமாக வீட்டுக்குச் சென்றார். மனைவி மக்களிடம் தகவலைச் சொன்னார். குடும்பம் அழுதது. அவரும் வருத்தத்தில் ஆழ்ந்தார். ஆனால் அழுது புலம்பி எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்ந்த அந்த மனிதர் வருத்தத்தை எல்லாம் சீக்கிரமே மூட்டை கட்டி வைத்து விட்டு சாவதற்குள் செய்து முடிக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய ஆரம்பித்தார். ஏகநாதர் சரியாக ஒரு வாரம் கழித்து அந்த மனிதரை அவர் வீட்டில் சந்தித்தார். அந்த மனிதர் மிகுந்த அமைதியுடன் இருந்தார். 'நான் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து விட்டு மரணத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.'

ஏகநாதர் சொன்னார். 'நீ இப்போது எந்த மனநிலையில் இருக்கிறாயோ அதே மனநிலையில் நான் என்றும் இருக்கிறேன் மகனே. மரணம் வரும், எல்லாம் முடிந்து போகும் என்ற உண்மையை உணர்வதால் கிடைக்கும் அமைதியே அலாதியானது. அதற்குப் பிறகு எதுவும் பெரிய விஷயமாகத் தோன்றுவதில்லை. எதுவும் அதிகமாக பாதிப்பதில்லை. இதைச் சொன்னால் புரியாது, அனுபவத்தில் மட்டுமே உணர முடியும் என்பதற்காகத் தான் நான் உன் கேள்விக்குப் பதிலாக உன்னிடம் ஏழு நாட்கள் மட்டுமே ஆயுள் பாக்கி உள்ளது என்றேன். உண்மையில் உனக்கு தீர்க்காயுள் இருக்கிறது. நீ நீண்ட காலம் வாழ்வாய்' என்று சொல்லி விட்டு வாழ்த்தி விட்டு சென்றார்.

ஏகநாதர் சொன்னது உண்மையே. மரணம் என்னேரமும் வரலாம் என்று தத்துவம் பேசுகிறோமே ஒழிய, அந்த உண்மை நம் அறிவிற்கு எட்டுகிறதே ஒழிய, அது நம் ஆழ்மனதிற்கு எட்டுவதில்லை. வாழ்ந்த காலத்தில் எப்படி உயர்ந்தோமோ, எப்படி தாழ்ந்தோமோ அதெல்லாம் மரணத்தின் கணக்கில் இல்லை. மரணம் போன்ற சமத்துவவாதியை யாராலும் காண்பதரிது. இருப்பவன்-இல்லாதவன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், ஆள்பவன்-ஆண்டி போன்ற பேதங்கள் எல்லாம் மரணத்திடம் இல்லை. எல்லோரையும் அது பேதமின்றி அது கண்டிப்பாக அணுகுகிறது. அதுபோல மரணத்தைப்போல மிகப் பெரிய நண்பனையும் காணமுடியாது. நம் தீராத பிரச்னைகள் எல்லாவற்றையும் ஒரே கணத்தில் தீர்த்து விடுகிறது.

ஆதி அந்தம் இல்லாத காலவிஸ்தீரணத்தில் நாம் வாழும் காலம் ஒரு புள்ளியளவும் இல்லை. நம் காலமே ஒரு புள்ளியளவும் இல்லை என்கிற போது அந்தக் காலத்தில் வாழும் உயிரினங்கள் அடையாளமென்ன, அந்த கோடானு கோடி உயிரினங்களில் ஒரு இனமான மனித இனத்தின் அடையாளமென்ன, அந்த பலகோடி மனிதர்களில் ஒரு தனி மனிதனின் அடையாளம் என்ன?

இப்படி இருக்கையில் வெற்றி என்ன, தோல்வி என்ன? சாதனை என்ன? வேதனை என்ன? எல்லாம் முடிந்து போய் மிஞ்சுவதென்ன? எதுவும் எத்தனை நாள் நீடிக்க முடியும்? இதில் சாதித்தோம் என்று பெருமைப்பட என்ன இருக்கிறது? நினைத்ததெதுவும் நடக்கவில்லை என்று வேதனைப்பட என்ன இருக்கிறது?

இதை வேதாந்தம், தத்துவம் என்று பெயரிட்டு அலட்சியப்படுத்த வேண்டாம். இது பாடங்களிலேயே மிகப்பெரிய பாடம்.

வாழ்க்கையில் உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தை சிறப்பாக வாழுங்கள். செய்வதை எல்லாம் கச்சிதமாகச் செய்யுங்கள். ஆனால் அந்த பாத்திரமாகவே மாறி என்றைக்கும் நிரந்தரமாக இருப்பது போல பாவித்து விடாதீர்கள். நீங்களே நிரந்தரமல்ல என்கிற போது உங்கள் பிரச்சினைகளும் நிரந்தரமல்ல அல்லவா? இருந்த சுவடே இல்லாமல் போகப்போகும் வாழ்க்கையில் வருத்தத்திற்கு என்ன அர்த்தம் இருக்கிறது? வெறுப்பிற்கும், கோபத்திற்கும், பேராசைக்கும், சண்டைகளுக்கும் என்ன அர்த்தம் இருக்கிறது?

நாம் வழிப்போக்கர்கள். அவ்வளவே. வந்தது போலவே இங்கிருந்து ஒருநாள் சென்றும் விடுவோம். அதனால் இங்கு இருக்கும் வரை, முடிந்த வரை எல்லாவற்றையும் முழு மனதோடு செய்யுங்கள். இது வரை சொன்ன பாடங்களைப் படித்துணர்ந்து சரியாகவும் முறையாகவும் வாழும் போது வாழ்க்கை சுலபமாகும், நாமாக விரித்துக் கொண்ட வலைகளில் சிக்கித் தவிக்க நேராது.

அது முடிகிறதோ, இல்லையோ அதற்குப்பின் வருவதில் பெரிதாக மன அமைதியிழந்து விடாதீர்கள். ஏனென்றால் எல்லாம் ஒரு நாள் முடியும்

*- என்.கணேசன்*

# ஐ.நா.வை மையப்படுத்திய தமிழர் அரசியல்



கோபி
ஒரு பேப்பர்

ஒரு புறம் 'ஜெனிவாவில் திறக்கப்பட்டிருக்கும் களமுனை', 'ஜெனிவாவை உலுப்பிய உரிமை முழக்கம்' போன்ற தலைப்புகளில் தமிழ் ஊடகங்களில் கட்டுரைகளும், கருத்துப்பரிமாற்றங்களும் நடைபெற்று வருகின்றன. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினை தீர்மானிக்கும் சக்தியாக ஐநா சபையே அமைந்திருப்பது போன்று, அவ்வமைப்பை மையப்படுத்தியே செயற்பாடுகள் அமையவேண்டும் என்ற கருத்துகள் வெளியிடப்படுகின்றன. இன்னொருபுறத்தில் இவ்வாறான எதிர்பார்ப்பில் முழு உலகத்தமிழினமுமே ஆழ்ந்திருப்பது போன்று, இவர்கள் 'இலவு காத்த கிளிகள் போல் ஆவார்கள்' என்று, தங்களை வேறுபடுத்திக் காட்டும் மேதாவித்தனமான விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. இருப்பினும் வழமைக்கு மாறாக இவ்விடயம் தொடர்பாக ஒரு திறந்த உரையாடலுக்கான வெளி திறக்கப்பட்டிருப்பதும் அதற்கான தளத்தினை தமிழ் ஊடகங்கள் உருவாக்கித் தந்திருப்பதும் சற்று ஆறுதல் தரும் விடையமாக அமைந்திருக்கிறது.

இந்தியாவும், மேற்குலகமும் தமிழர்களை நோக்கிநெருங்கி வருகின்றன, அவர்களின் வழிகாட்டலை ஏற்றுக்கொண்டு அவர்களது துணையுடன் எமது உரிமைகளை பெற்றுக்கொள்வோம் என்ற கருத்துருவாக்கத்தை உருவாக்க சில கூலிக்கு மாரடிக்கும் அடியாட்கள் எத்தனிக்கிறார்கள். இவர்கள் எவரது சம்பளப்பட்டியலில் இருக்கிறார்கள் என்று ஆய்வு செய்வதை விடுத்து, இவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதனைப் பார்ப்போம். தற்போது தமிழர் தரப்பு, குறிப்பாக கூட்டமைப்பு முயல்வது போன்று இந்தியாவுடனும், மேற்குலகத்துடனும் நெருக்கத்தை ஏற்படுத்துவதில் விடுதலைப் புலிகள் சாதுரியத்துடன் செயற்படவில்லை அல்லது அவ்வாறான முடிவை எடுப்பதற்குரிய புலமை அவர்களிடம் காணப்படவில்லை. ஆகவே கூட்டமைப்பினை கேள்விகள் கேட்டு குழப்பாமால் அவர்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டும் என இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இவ்வாறு இந்தியாவுடனும் மேற்குலகத்துடனும் உறவு கொண்டாடுவதாகக் குறிப்பிடுபவர்களிடம், இச்சக்திகள் எத்தகைய தீர்வினை தமிழ் மக்களுக்கு பெற்றுத்தரப்போகின்றன என்பது தொடர்பில் எவ்வித கருத்தும் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக 'கிடைப்பதை பெற்றுக்கொண்டு முன்னேறுவோம்' என்ற கட்டம் கட்டமாக முன்னேறுதல் (incremental approach) என்ற அணுகுமுறை முன்வைக்கப்படுகிறது அல்லது 'தெய்வம் நின்றறுக்கும்' என்ற நம்பிக்கையுடனான வேதாந்தம் பேசப்படுகிறது.

மேற்படி அடியாட்களால் பரப்பப்படும், மிதவாத போக்குடையவர்களினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு சில கருத்துகளைப் பார்ப்போம்.

விடுதலைப்புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட வன்முறை தழுவிய விடுதலைப்போராட்டம் முறியடிக்கப்பட்டமையினால், தமிழ் மக்களின் அரசியல், பாதுகாப்பு என்பவை மிகவும் அடிமட்டத்திற்கு சென்று விட்டது. இந்தியா, மேற்குலகம் ஆகியவற்றை அனுசரித்துப் போகாத விடுதலைப்புலிகளின் அணுகுமுறையே இத்தகைய தோல்வி நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. இப்போது விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை மௌனித்துள்ளதால் மேற்குறித்த வெளிச்சக்திகளுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்தி கிடைக்கக் கூடிய உரிமைகளைப் பெற்றுக்கொள்வோம். எத்தகைய தீர்வு கிடைக்கவேண்டும் என்பதனை வற்புறுத்தாமல், கிடைத்ததை ஏற்றுக்கொண்டு முன்னேறுவோம்.

மேற்படி கருத்துகளானது பரம்பொருளை நோக்கி ஒருபக்தன் முன்வைக்கிற 'நீயாகப் பார்த்து எதையாவது கொடு' என்ற வேண்டுகோளுக்கு ஒப்பானது என்பதனை கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் இந்தியாவும், மேற்குலகமும் பரம்பொருள் போன்று செயற்படுமா என்பதை பரம்பொருள் மீது நம்பிக்கை வைத்து செயற்படுபவர்கள் கூட ஐயப்படுகிறார்கள். இவ்வாறான ஐயப்பாடுகளுக்கு காரணமிருக்கிறது. ஏனெனில் தமிழ் மக்கள் மீதான இறுதியுத்தத்தினையும், அதில் ஏற்பட்ட அழிவுகளையும் மேற்குறித்த எந்தப் பரம்பொருளாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. தவிரவும் இறுதியுத்தத்தில் தூரத்திலிருந்து இயக்குபவர்களாக இந்த வடமண்டலத்தில் வீற்றிருக்கும் சிவன்களே (அழித்தற் கடவுள்) இருந்தமையால், இப்போது 'பரம்பொருள்' என்ற எண்ணப்பாட்டின் மீதே ஐயம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இனி, ஐக்கிய அமெரிக்கா, ஐநா மனிதவுரிமைச் சபையில் சமர்ப்பிக்கவிருக்கும் தீர்மானத்தின் நகல் வெளிவருவதற்கு முன்பதாக, ஜெனிவாவில் ஐ.நா. விற்கான சிறிலங்காவின் வதிவிடப்பிரதிநிதி தமரா குணநாயகம் குறிப்பிட்ட கருத்துகள் கவனத்திற்குரியவை.

"அவர்களின் (மேற்குநாடுகளின்) உண்மையான இலக்கு ஆட்சி மாற்றம்தான். சிறிலங்காவில் தாம் அடைய விரும்புவனவற்றில் இதுவும் ஒன்றாகும் என ஜெனீவாவிலுள்ள பல தூதுவர்கள் என்னிடம் கூறியுள்ளனர். எனவே இதை நாம் மிகத் தீவிரமாக கருத்திற்கொள்கிறோம். இறையாண்மையுடைய ஏனைய நாடுகளில் தலையிடுவதை நியாயப்படுத்துவதற்காக, பாதுகாப்பதற்கான கடப்பாடு (R2P) எனும் கோட்பாட்டை அமெரிக்கா பின்பற்றி வருகிறது.

சிறிலங்கா ஒரு தோல்வியடைந்த நாடு என பிரித்தானிய வெளிவிவகார அலுவலக அமைச்சர் ஜெரமி பிரவுண் கூறியமை 'பயங்கரவாத நாடுகள்', 'முரட்டு நாடுகள்' என்பனவற்றைப் போன்று 'தோல்வியடைந்த நாடுகள்' என்பதும் ஒழுக்கவியல் தோற்றத்துடன், இறைமையுள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் சொற்தொகுப்பின் ஒரு பகுதியே" என அவர் குறிப்பிட்டிருந்தார்.

'நாட்டைப் பிரித்துவிட மேற்குலக சக்திகள் முற்படுகின்றன' என உள்நாட்டில் பரப்புரை செய்வது போன்று இல்லாமல், 'தலையிட முயல்கிறார்கள்', 'ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முனைகிறார்கள்' என்ற சொற்களையே தமரா பாவித்திருக்கிறார். தமராவின் நடவடிக்கைகள் எமக்கு முரணானதாக உள்ளபோதிலும் அவருடைய இந்தக் கருத்துகளுடன் உடன்படவேண்டியுள்ளது. ஏனெனில் அதுவே உண்மையாகவும் உள்ளது.

புவிசார் அரசியல் நலன் கருதி சிறிலங்காவின் மனிதவுரிமை விவகாரம் கையாளப்படுகிறதே தவிர, அங்கு ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் மனிதவுரிமைகள் மீதான அக்கறையில் இல்லை என்ற விடயத்தில் தமிழ் மக்களிடையே இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. ஆகையால் இவ்விடயத்தில் 'வெண்ணை திரண்டு வருகிறது' போன்ற கருத்துகளுக்கு இடமில்லை.

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் அண்மையில் எழுதியுள்ள கட்டுரையொன்றில், தமிழ் மக்களுக்கு எவ்வாறு மேற்குலகம் தேவைப்படுகிறதோ அவ்வாறு மேற்குலகத்திற்கும் தமிழ் மக்கள் தேவைப்படுகிறார்கள் எனக் குறிப்பிட்டிருந்தார். ஆகக்குறைந்தது மனிதவுரிமைகளை கண்காணிக்கிறோம் என்ற போர்வையில் அத்தீவின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு தமிழ் மக்களின் மனிதவுரிமை விவகாரம் பயன்படுத்தப்படுகிறது. இந்த யதார்த்தத்தின் அடிப்படையிலேயே மேற்குலகத்துடனான உறவுகள் பேணப்படவேண்டும். அதே சமயம், இந்த உறவில் தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமை பலியிடப்படாமல் பார்த்துக் கொள்வதற்கு தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

மேற்குலகத்துடன் அல்லது இந்தியாவின் உறவில் 'பக்குவமாக கருமங்களை முன்னெடுக்கிறோம்', 'இராசதந்திர ரீதியில் நாங்கள் அணுகி வருகிறோம்' என்ற சொல்லாடல்களை உபயோகிக்கும் சம்பந்தன், சுமந்திரன் போன்ற கூட்டமைப்பினர் விடயத்திலோ அல்லது அவரது புலம்பெயர் சகாக்களான உலகத் தமிழர் பேரவை விடயத்தில், அவர்களது செயற்பாடுகள் தொடர்பில் தமிழ் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். இவ்வாறு எச்சரிப்பது மேற்படி தரப்புகள் துரோகம் இழைக்கிறார்கள் என்பதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. மாறாக தமிழ் மக்களுக்கான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் செயற்படுவதனை மெய்ப்பிப்பதாக இவர்களது செயற்பாடுகள் அமையவில்லை என்பதனைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

**மேற்குலகத்துடன் அல்லது இந்தியாவின் உறவில் 'பக்குவமாக கருமங்களை முன்னெடுக்கிறோம்' 'இராசதந்திர ரீதியில் நாங்கள் அணுகி வருகிறோம்' என்ற சொல்லாடல்களை உபயோகிக்கும் சம்பந்தன் சுமந்திரன் போன்ற கூட்டமைப்பினர் விடயத்திலோ அல்லது அவரது புலம்பெயர் சகாக்களான உலகத் தமிழர் பேரவை விடயத்தில், அவர்களது செயற்பாடுகள் தொடர்பில் தமிழ் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்**

வெளிச்சக்திகள் தொடர்பிலும், அவர்களுடனான தமிழர் தரப்பின் உறவுகள் தொடர்பிலும், பல்வேறு தளங்களில் உரையாடல்கள் மேற்கொள்வது அவசியமானது. இவ்விடயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அரசறிவியலாளர்களும், ஊடகங்களும் காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும். ஏற்கனவே அதற்கான வெளியொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளமையை கருத்திற்கொண்டு, குழவாதச் சேற்றில் புதைந்திருக்கும் பரப்புரையாளர்கள் என்ற நிலையிலிருந்து தமிழ்த் தேசியவாதிகள் மீண்டெழுந்து வருவார்கள் என நம்புவோமாக.

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant | 020 8640 4230 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Prime Foods | 020 8682 3777 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | [illegible] |
| Spice way | 020 8685 1122 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri Supermarket | |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **[illegible]** | |
| Ambiha | 020 8813 0967 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duwaraka C & C | 020 8813 9126 |
| Palm Palace | 020 8813 9663 |
| Spicy Palace restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |


Lebara
mobile
Sri Lanka
landlines & mobiles
5
p
/min
Low-cost international & UK calls direct from your mobile
www.lebara.co.uk
Offer valid until 31/03/2012. For all our rates and full terms and conditions, visit www.lebara.co.uk

# ஊடக ஒற்றர்களின் தொல்லை தாங்கமுடியவில்லை...



ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கூட்டமைப்பு ஏன் கலந்து கொள்ளவில்லை என்கிற வாதப் பிரதிவாதங்கள் தணிவடைந்து, மீண்டும் ஜெனீவாவில்-இலங்கைக்கு எதிரான தீர்மானம் வருமா என்பது முனைப்புப் பெற்றுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரித்தவர்கள், அதில் சொல்லப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு, மேற்கொள்ள உத்தேசித்துள்ள தீர்மானத்திற்கு ஆதரவாகப் பரப்புரை செய்ய ஜெனீவா செல்ல வேண்டுமா என்பது போலவும் பல வியாக்கியானங்கள் அளிக்கப்படுகின்றன.

கடிதங்கள் அனுப்பி விட்டோம், இராஜதந்திரிகளை சந்தித்துப் பேசி விட்டோம் ஆகவே கூட்டத்தொடரில் கலந்து கொண்டு வாய்பார்க்கச் செல்வது அநாவசியமானதென நியமன எம்.பி.சுமந்திரன் கூறுகின்றார்.

**முள்ளிவாய்க்காலில் சிங்களம் மேற்கொண்ட படுகொலைகளுக்குப் பழிவாங்கும் முகமாக, சுயாதீன சர்வதேச விசாரணை ஒன்று தேவையென்கிற ஆயுதத்தை புலம்பெயர் அமைப்புக்கள் தூக்கிப் பிடிக்கின்றன என்றும் சிலர் திசை திருப்ப முயல்கின்றார்கள்.**

கூட்டத்தொடர் நிகழும் மண்டபத்திற்கு வெளியே, பல கலந்துரையாடல்கள் நிகழ்வதை இவர் அறிந்திருக்கவில்லை போல் தெரிகிறது.

சிங்களத்தின் தூதுக்குழுத் தலைவர் அமைச்சர் மகிந்த சமரசிங்கா, சிங்கள, தமிழ், முஸ்லீம் அமைச்சர் புடைசூழ, வெளியில் சிறு மாநாட்டையே நடாத்தி முடித்துள்ளார்.

தமது நிலைப்பாட்டை சர்வதேச நாடுகளுக்கும், மனித உரிமைச் சங்கங்களிற்கும் தெளிவுபடுத்த, இம்மேடையை சிங்களம் சரியாகப் பயன்படுத்துகிறது.

பேரவையில் பேசவிட்டால்தான் வருவோம் என்கிற வாதம் ஏற்புடையதல்ல.

அரச அங்கீகாரமில்லாத, ஒடுக்கப்படும் இனமொன்றின் அரசியல் தலைமை, சிலசந்தர்ப்பங்களில் அரசுசாரா அமைப்புப் போலவும் செயற்படவேண்டும்.

கொழும்பிலிருந்தவாறே எல்லாவற்றையும் இயக்குகிறோமென்றால், அமெரிக்காவிற்கோ அல்லது தென்னாபிரிக்காவிற்கோ கூட்டமைப்பு சென்றிருக்க வேண்டிய அவசியமில்லை.

அப்போதெல்லாம், நாட்டில் இனக்கலவரம் வெடிக்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

கலவரத்தை உருவாக்கி, நிலைமையை மேலும் சிக்கலாக்க, சிங்களம் விரும்பாது என்கிற விவகாரத்தை புரிந்து கொள்ளவில்லை.

உலகத்தமிழர் பேரவையும், நாடுகடந்த அரசும், ஜெனீவாவிற்கு வரத்தேவையில்லை என்று கூறியதாலேயே இவர்கள் வரவில்லையென்றும் சில நியாயப்படுத்தல்கள் கிளம்புகின்றன.

கூட்டமைப்பின் பிரச்சினையே அதன் வழுவழுத்த கட்டமைப்புத்தான். கட்சியாகப் பதிவு செய்வதிலும், இழுபறிநிலை காணப்படுகிறது.

கட்சிசாராத எம்பிக்கள், தமிழரசுக்கட்சியின் கிளைகளை தமது தொகுதிகளில் திறப்பதில் தான் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

ஆகவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பானது, வெறும்தேர்தலுக்காக உருவாக்கப்பட்ட கூட்டா என்கிற கேள்வி எழுவது நியாயம் போல் தென்படுகிறது.

இதனை ஒரு ஆரோக்கியமான விமர்சனப் பார்வையாக அவர்கள் கருதுவார்களென நம்புவோம்.

இவைதவிர, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பற்றி உலகத்தமிழர் பேரவையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயத்தையும் பார்க்க வேண்டும்.

சர்வதேச வல்லரசாளர்களின் நலனிற்கு அப்பரிந்துரைகள் தேவையாக இருக்கலாம். ஆனால் அதனை நிராகரித்த நாம், எவ்வாறு அதில் சில நல்ல விடயங்கள் இருப்பதாகக் கூற முடியும்?

நிராகரித்த நிலைப்பாட்டையே அது கேள்விக்குள்ளாக்கிவிடும்.

ஐ.நா.நிபுணர் குழுவின் செயற்பாட்டினை மழுங்கடிப்பதற்காகவே, முன்கூட்டிய திட்டமிடலுடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்கிற நாடக அரங்கினை சிங்களம் நிறுவியது.

அதில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்ட வேளை, மனித உரிமை கண்காணிப்பகம், அனைத்துலக மன்னிப்புச் சபை மற்றும் சர்வதேச நெருக்கடிக்குழு என்பன அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தன.

இன்றும் கூட, முழுமையான பொறுப்புக் கூறும் கடப்பாட்டினை உள்ளடக்காத நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இம் மூன்று சங்கங்களும் நிராகரிக்கின்றன.

இவ்வேளையில், மேற்குலகின் நிகழ்ச்சி நிரலிற்கு பக்கவாத்தியம் வாசிப்பதுபோல, பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு தமிழர்தரப்பு கூறுவது, பொருத்தமான அரசியல் நிலைப்பாடு போல் தெரியவில்லை.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

ஏனெனில் மேற்குலகின் நலன்வேறு. ஒடுக்கப்படும் தமிழினத்தின் நலன் வேறு.

இனஅழிப்பினை, மனித உரிமை மீறல் என்கிற வரையறைக்கூடாகவே அவர்கள் பார்ப்பார்கள்.

இன்றும் தொடரும் திட்டமிட்ட இன அடியழித்தலை உலகின் முன் கொண்டு சென்று, தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்கிற பிறப்புரிமையை உரத்துச்சொல்ல வேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

அதேவேளை சில தொலைக்காட்சிகளில், தமிழர் விடுதலைப் போராட்டத்தை வெறும் உணர்ச்சிவயமான அரசியலென்று பார்க்கும் தன்மையை அல்லது அதுபோன்று சித்தரிக்க முற்படும் போக்கினை கருத்துபூர்வமான நிராகரிக்கவேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

முள்ளிவாய்க்காலில் சிங்களம் மேற்கொண்ட படுகொலைகளுக்குப் பழிவாங்கும் முகமாக, சுயாதீன சர்வதேச விசாரணை ஒன்று தேவையென்கிற ஆயுதத்தை புலம்பெயர் அமைப்புக்கள் தூக்கிப் பிடிக்கின்றன என்றும் சிலர் திசை திருப்ப முயல்கின்றார்கள்.

அத்தோடு மக்களின் அழிவிற்கு புலிகளே காரணமெனக்கூறி, சிங்களத்தின் பௌத்த பேரினவாத அடக்குமுறை என்று ஒன்றில்லை என நிறுவ முற்படுகிறார்கள்.

அழிவினைத் தடுப்பதற்கே மக்கள் போராடுகிறார்கள் என்கிற அடிப்படை உண்மையை இவர்கள் புரிந்துகொள்ளவில்லையா? அல்லது ஒடுக்கும் சிங்களத்தை நியாயப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் மீது சகட்டுமேனிக்கு தாக்குதலைத் தொடுக்கின்றார்களா?

**ஐ.நா.நிபுணர் குழுவின் செயற்பாட்டினை மழுங்கடிப்பதற்காகவே, முன்கூட்டிய திட்டமிடலுடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்கிற நாடக அரங்கினை சிங்களம் நிறுவியது.**

பாலஸ்தீனர்களை இஸ்ரேல் தாக்கினால் அது ஒடுக்குமுறை, தமிழ்மக்கள் மீது சிங்களம் தாக்கினால் அது மனிதாபிமான போர் என்பது தானா இவர்களின் நிலைப்பாடு?

மக்களின் உணர்வுகளோடும், அவர்களின் வலிகளோடும் பின்னிப்பிணைந்து நிற்பவனே உண்மையாக ஊடகவியலாளன்.

அபிவிருத்தி ஏற்பட்டால், கொல்லப்பட்ட மக்களின் ஆத்மா சாந்தியடையுமென்று குதர்க்கம் பேசுவோர், அடக்குமுறையாளனோடு தன்னை நேரடியாக அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

இந்த சிங்களத்தின் 'ஊடக ஒற்றர்களை', வலி சுமக்கும் மக்கள் விரைவில் இனங்காணுவார்கள்.

பொது ஊடகங்களினூடாக, மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்படும் இவ்வாறான உளவியல் பரப்புரைகளை, 'வெளிச்சம்' போட்டுக் காட்ட வேண்டிய பொறுப்பு, மக்கள் நலனை முதன்மைப்படுத்தும் ஊடகவியலாளர்களுக்கு உண்டு.

**நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரித்தவர்கள், அதில் சொல்லப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு, மேற்கொள்ள உத்தேசித்துள்ள தீர்மானத்திற்கு ஆதரவாகப் பரப்புரை செய்ய ஜெனீவா செல்ல வேண்டுமா என்பது போலவும் பல வியாக்கியானங்கள் அளிக்கப்படுகின்றன.**

பலவீனமான இடைக்காலத்தில் தான், மீண்டெழமுடியாதவாறு, ஊடகத்தின் ஊடாக ஊடுருவலை மேற்கொள்வான் எதிரி.

Mother's Day Special
Mum Eat for Free!!
Free 3 Course Meal for Mum including Glass of Wine (T&C apply)
Sunday 18th March 2012 , 12noon until 5.00 pm
Bollywood Karaoke Night - Music by Ravindra Baing
6.00 pm until late night
A La Carte Menu available for Dinner
Entrance only £5.00, Mum FREE
Celebrate Mother's Day In Style and Treat Mum to the Perfect Indian Music
FUSHIA
Call Today to Make Your Reservation – 020 8680 8833
FUSHIA BANQUETING HALL / FUSHIA INDIAN RESTAURANT
3 Brighton Road, South Croydon, Surrey CR2 6EA www.fushiauk.com info@fushiauk.com

Currency Trading gives you Financial Freedom
Would you like to make TAX FREE money from the comfort of your own home? All you need is a computer, an internet access and our vital training. We specialise in training people to trade currencies where you can MAKE MONEY by acquiring our lucrative skill.
The training is for a limited period only
so hurry and book your place and change your life for the better.
Venue: Knights of Harrow Seminar Room 164 Pinner Road, Harrow, HA1 4JJ.
Course: Mon – Thursday 10am to 2pm. Places are limited.
For further details please contact
Nthiran 0781 221 1663 s2pnet@yahoo.co.uk
Para 0795 850 7010 paramakumaran@hotmail.com

# வாடா வாடா புலியே வாடா இடியும் புயலும் தாங்கி வாடா...



சுகி
*(ஒருபேப்பருக்காக)*

ஜெனீவாவில் இந்த பாடலைப்பாடிய படி இளையோர்கள் மிகஉற்சாகமாக தமிழ்ஈழக் கொடிகளை அசைத்தவண்ணம் மிகவேகமாக ஐ.நா முன்றலை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். லண்டனிலும், பல்வேறு ஐரோப்பிய நகரங்களிலும் இருந்து சொகுசு வாகனங்களிலும், விமானங்களிலும் வந்திறந்திய வண்ணமும், ஒருவரை ஒருவர் முன்தெரியாவிட்டாலும், உரிமையோடு புன்னகையுடன் நெருங்கி உறவாடியதையும், எப்படி பயணம், எப்போ திரும்புகிறீர்கள் என்று உரிமையோடு சுகம் விசாரித்துக் கொண்டதையும், கொண்டுவந்த உணவுப்பொட்டலத்தை பகிர்ந்து கொண்டதையும் பார்க்கும் போது ஒருகணம் யாழ்பாணத்தில் நிற்கின்றோமா என்று எண்ணத் தோன்றியது.

ஐ.நா முன்றலை நான் சென்றடைந்த போது இளையோர்கள் மேடையை அலங்கரிப்பதிலும், பெண்கள் பூக்களை மலர்அஞ்சலிக்காக சீர்படுத்திக்கொண்டும், மற்றும் சிலர் நினைவாலயத்தில் விடுதலை வேண்டி விதையான மாவீரர்களினதும், மற்றும் ஈழ விடுதலைக்காக உயிர்நீத்த செங்கொடி, ஐ.நா முன்றலில் நீதி கேட்டு தன்னை தீக்கிரையாக்கிய முருகதாஸ் போன்றவரின்நிழற்படங்களை வரிசையாகவைத்து மாலைகள் அணிவிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர்.

நிகழ்வு ஆரம்பிப்பதற்கு ஒருமணித்தியாலம் முன்பு தேசியதலைவரின் முழுநீள கம்பீரமான உருவப்படத்தை தாங்கியபடி முன்றலில் இருந்து புகையிரதநிலையத்தின் அருகே உள்ள பெரிய மரங்களால் சூழப்பட்ட பூங்காவை நோக்கி மக்கள்சென்றார்கள். அப்போதுபஸ்நிலையத்தில் நின்றிருந்த ஒரு வெள்ளைகார பெண்மணி இவர்களை 'யார் இவர்' என்று கேட்ட உருவப் படத்தில் பின்னால் சென்ற பெண்மணி ஒருவர் 'Ourleader' என்றுபெருமையுடன் உரத்துசொன்னார். அனைத்து பயணிகளின் கவனத்தையும் அது ஒருகணம் ஈர்த்தது.

அப்பூங்காவில் ஆயிரக்கணக்கில் மக்கள் குழுமியிருந்தார்கள். அவர்களை விசாரித்த போது மிகஉற்சாகமாக தாங்கள் பிரான்ஸில் இருந்து தனிப்புகையிரதத்தில் வந்ததாகவும், எதிர்பார்த்ததைவிட அனேகம் பேர் புகையிரதச் சீட்டுக்கு விண்ணப்பித்ததால் முன்பு சொல்லப்பட்டதைவிட புதிதாக ஆறு பெட்டி இணைக்கப்பட்டதாகவும், அதுவும் கடைசி நேரத்தில்நிறைந்துவிட்டதாகவும், இப்பயணம் வாழ்க்கையில் மறக்கமுடியாத மகிழ்ச்சியான அனுபவம் என்றார். இக் கடுகதி புகையிரதம் பிரான்சில் Gare De Lyon என்ற இடத்தில் இருந்து புறப்பட்டுதனித்தமிழர்களை மட்டும் சுமந்துவந்தது. அவர்கள் எல்லோருமே நெற்றியில் ஒரு கருப்புபட்டியைகட்டி அதன்மீதுபிரன்ஸ்மொழியில் தமிழ் ஈழக்கோரிக்கையைப்பற்றி எழுதியிருந்தார்கள்.

பல இளைஞர்கள் ஒருவர் பின் ஒருவராக தலைவரின் உருவப்படத்திற்கு அருகே நின்று தமிழ் ஈழத்தேசியக்கொடி, அதனுடன் அவரவர் நாட்டு தேசியக்கொடி என பிடித்துக் கொண்டுஉற்சாகமாகபடம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். நிறைய பேருடன் சிகப்பும், மஞ்சளுமாக மைதானம் களை கட்டிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் மிக பழைமையான இசைக்கருவியான பறைமுழங்க மிக உற்சாகமாக 'வாடா வாடா புலியே வாடா, இடியும் புயலும் தாங்கி வாடா' என இசைக்க இளைஞர்கள் அதைச்சூழ உற்சாகமாக கைதட்டிக் கொண்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். பின்பு அங்கிருந்து மிகப்பெரிய ஊர்வலமாக ஏராளமான பதாகைகளைத்தாங்கிக்கொண்டு, விடுதலை, போர்க்குற்ற விசாரணையை வேண்டிய, இனப்படுகொலையை வெளிக்கொணரும் கோசங்களை எழுப்பிய வண்ணம் வீதிபோக்குவரத்து முற்றாக தடைபெற்றிருக்க வீதி எங்கும் பரந்து, நீண்டு சென்று கொண்டிந்தார்கள்.

ஊர்வலத்தின் முன்வரிசையில் நீதிக்கான நெடும் பயணத்தை 07-02-2012 பெல்ஜியம் தலைநகர் புருசெல்ஸ்சில் தொடங்கி ஜெனிவாவில் இருக்கும் ஐ.நா வை காலை வந்தடைந்த இளைஞர்களான வேலுப்பிள்ளை மகேந்திரராஜா, லோகநாதன் மருதையா, ஜக்கமுத்துராசியன் உட்பட சிவந்தனையும், பரமேஸ்வரனையும் காணக்கூடியதாக இருந்தது.

ஐ.நா முன்றலைப் பேரணியாய் வந்தடைந்த மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளை ஐ.நா விடம் முன்வைத்தனர். எழுச்சி நிகழ்வினை அனைத்து ஐரோப்பிய நாடுகளினதும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப்பொறுப்பாளர்கள் இணைந்து பொதுச்சுடரை ஏற்றி வைக்க தமிழீழத்தேசியக்கொடியை சுவிஸ் நாட்டின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப்பொறுப்பாளர் அவர்கள் ஏற்றி வைத்தார். மற்றும் மாவீர்களுக்கான சுடரை முருகதாஸ் இன் தந்தையார் திரு.கே.வர்ணகுலசிங்கம் உட்பட மாவீர்களின் பெற்றோர் ஏற்றிவைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்துஇலங்கையில்ஒடுக்கப்படும் அனைவரது உரிமைகளுக்கும்போராடும் தமிழ்ஒருங்கமைப்புஉறுப்பினரின்உரை இடம் பெற்றது. அவரின் உரையில் 2011 இல் சிறிலங்கா அரசு 201 பில்லியன் ரூபாவை ஆமிக்கெனவும் 27 பில்லியனை கல்விக்கெனவும் 52 பில்லியனை சுகாதாரத்திற்கெனவும் ஒதுக்கியிருந்தது ஆனால் 2012 இல் ஆமிக்கென 230 பில்லியனை ஒதுக்கியுள்ளது, இது 30 பில்லியன் முன்னைய ஆண்டைவிட அதிகமானதாகும். வடக்கு கிழக்கு மக்களுக்கென ராஜபக்ச அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உதவி, அப்பகுதியை இராணுவமயப்படுத்தல் என்ற ஒன்று மட்டுமே எனக்குறிப்பிட்டார், இதைத் தொடர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசவையின் ஜனநாயக அணியின் உறுப்பினரான திரு. சசிதர் மகேஸ்வரன், முன்னாள் பாராளமன்ற உறுப்பினர் திரு. ஜெயானந்த மூர்த்தி, பரமேஸ்வரன் மற்றும் பலரின் உரையுடன், இளையவர்களின் கலைநிகழ்ச்சியும் அரங்கேறியது.

இறுதியாக சத்தியப்பிரமாணத்தோடு, நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் என்று தேசியத் தலைவருக்கு பிடித்தமான பாடலுக்கு இசைவான பொதுமக்களின் கைத்தாளத்தோடு, எழுச்சியுடனும், உணர்ச்சியுடன் இந்நிகழ்வு முற்றுப் பெற்றது.






# கூடங்குளம் போராட்டம் நாம் கற்க வேண்டிய பாடம்



நந்தன்

*(கீற்று இணையத்தில்)*

நீண்ட நாட்களாக மனதில் புரண்டு கொண்டிருந்த ஆவலை கடந்த சனி, ஞாயிறுகளில் தீர்த்துக் கொண்டேன். நண்பர்கள் இருவருடன் கூடங்குளம், இடிந்தகரை சென்றிருந்தேன். கூடங்குளம் பகுதியில் இருக்கிற ஒரு பொறியியல் கல்லூரியில்தான் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நான் கணிப்பொறியியல் படித்தேன். அதனால் அந்தப் பகுதியின் நிலவமைப்பு எனக்கு ஏற்கனவே அறிமுகமான ஒன்றுதான். மிகவும் வறண்ட பூமி. அரிதாகத் தென்படும் மரங்கள், உரத்து வீசும் காற்று, 150 மீட்டர் உயர வெள்ளைக் கொக்குகளாக நிற்கும் காற்றாலைகள், வெளிநாடுகளில் வேலை பார்க்கும் ஆண்கள் - இவை இந்தப் பகுதியின் பொதுவான அடையாளங்கள். படித்தவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், மிகவும் பிற்போக்கான பகுதி. சாதி வெறியும், மதவெறியும் ஒப்பீட்டளவில் இங்கு அதிகம்.

## அவர்களின் மனவுறுதி, போர்க்குணத்திற்கு முன் நாராயணசாமியும், மன்மோகன் சிங்கும் நடுநடுங்கிக் கிடப்பதில் ஆச்சரியமில்லை.

நான்கு ஆண்டுகள் அந்தப் பகுதியில் படித்த அனுபவத்திலிருந்து யோசிக்கும்போது, தற்போது நடைபெறும் போராட்டத்தில் சிறுவர் முதல் முதியவர் வரை ஆண், பெண் பேதமின்றி கலந்து கொள்கிறார்கள் என்பது மிகவும் வியப்பான செய்திதான். ஆறுமாதமாக போராட்டம் நடைபெறுகிறது என்றால் வருமானத்திற்கு என்ன செய்வார்கள் என்ற கேள்வி மனதிற்குள் இருந்தது. அங்கு போனபோதுதான் அந்தப் போராட்டத்தின் திட்டமிட்ட செயல்பாடுகள் பெரிய ஆச்சரியமாக விரிந்தது. ஆண்கள் வழக்கம்போல் வேலைக்குச் செல்கிறார்கள். பெண்கள்தான் உண்ணாநிலை இருக்கிறார்கள். கைக்குழந்தைகளை முன்னால் படுக்க வைத்து, கையில் பீடி சுற்றியவாறு காலையிலிருந்து மாலை வரை உண்ணாநிலை மேற்கொள்கிறார்கள். ஆண்களில் பெரும்பாலும் முதியவர்கள்தான் அங்கு இருக்கிறார்கள். முற்றுகைப் போராட்டம், பேரணி போன்ற நாட்களில் மட்டும் - போராட்டக் குழு எடுக்கும் முடிவின்படி - ஆண்கள் வேலைக்குச் செல்லாமல் முற்றுகையில் கலந்து கொள்கிறார்கள்.

அந்த மக்களிடம் சொல்வதற்கு நமக்கு ஒன்றுமில்லை... கற்றுக் கொள்வதற்குத்தான் ஏராளம் இருக்கிறது. மக்களுக்காக உழைப்பது என்பது நமது வாழ்க்கையின் ஒரு பகுதி என்றால், நாம் நிச்சயம் போய் கற்றுக் கொள்ள வேண்டிய இடம் கூடங்குளம்.

காவல் துறை போட்ட வட்டத்திற்குள்ளேயே போராட்டம் நடத்தி பழக்கப்பட்ட நமக்கு, 'மக்களின் அனுமதி இல்லாமல் எஸ்.பி. கூட இடிந்தகரை போராட்ட இடத்திற்குள் உழைய முடியாது' என்ற உண்மை அதிர வைத்தது.

உளவுத் துறையினர் உள்ளே நுழைந்தால் சிறிது நேரத்தில் சுற்றி வளைத்துப் பிடித்து விடுவார்களாம். பின்பு அவர்கள் கெஞ்சிக் கேட்டு, தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடுவார்களாம். போராட்டக்குழு ஆதரவாளர்கள் என்றால், வாஞ்சையுடன் அரவணைத்துக் கொள்கிறார்கள். அவர்களின் மனவுறுதி, போர்க்குணத்திற்கு முன் நாராயணசாமியும், மன்மோகன் சிங்கும் நடுநடுங்கிக் கிடப்பதில் ஆச்சரியமில்லை. கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் சுற்றிலும் இருக்கிற கிராமங்களில் உண்மையிலேயே மக்களின் ஆட்சி நடக்கிறது. அந்தப் பகுதி முழுவதும் எளிய, அதே நேரத்தில் போர்க்குணம் மிக்க மக்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஈழப் பிரச்சினை, மூவர் உயிர் காப்பு அனைத்திலும் தேர்தல் கட்சித் தலைவர்களின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு, தொண்டர்கள் தங்களது உணர்வுகளை அடக்கிக் கொள்வதை சென்னையில் பார்த்திருக்கிறோம். ஆனால், அங்கு நிலைமை அப்படியல்ல.. போராட்டத்திற்கு எதிராக கருணாநிதி பேசியதும், அத்தனை தி.மு.க தொண்டர்களும் தங்களது கரை வேட்டியை எரித்திருக்கிறார்கள். நாங்கள் போயிருந்தபோது தி.மு.க கொடி, அரைக் கம்பத்தில் பறந்து கொண்டிருந்தது. இத்தனைக்கும் பெரும்பாலோனோர் காலம்காலமாக திமுக தொண்டர்களாக இருந்தவர்கள்.

மதியம் முழுவதும் இடிந்தகரையில் இருந்துவிட்டு, மாலையில் கூடங்குளம் அணு உலை பக்கமாகச் சென்றோம். தூரத்தில் 40, 50 போலீஸ். நமது கையில் காமிரா, வாய்ஸ் ரெக்கோடர் எல்லாம் இருந்ததால் கொஞ்சம் நடுக்கமாக இருந்தது. பக்கத்தில் போனால் அத்தனை போலிசுக்கும் முன்னால் நாலைந்து போராட்டக் குழுவினர் (பெரும்பாலோனோர்க்கு 50 வயது) சாரம் கட்டிக்கொண்டு, கால் மேல் கால் போட்டுக்கொண்டு ரவுசு விட்டுக் கொண்டிருந்தார்கள். போனால் போகிறது என்று போலிசுக்காரங்களை இந்த இடத்திலே விட்டிருக்கிறோம் என்பதுபோல் இருந்தது அவர்களது தோரணை. அசந்துவிட்டோம். கூடங்குளம் அணுமின் நிலைய வாயிலில் இரண்டு செக்போஸ்ட்கள். ஒன்று போலீஸ் செக்போஸ்ட். மற்றொன்று கூடங்குளம் மக்களின் செக்போஸ்ட். மக்களின் செக்போஸ்ட்டைத் தாண்டி, அணுமின் நிலையத்திற்குள் வேலை பார்க்க யாரும் போய்விட முடியாது. முன்பு பத்தாயிரம் பேர் வேலை பார்த்த இடத்தில், இப்போது பராமரிப்பு பணிகளுக்காக 90 பேரை மட்டுமே உள்ளே அனுமதிக்கிறார்கள் மக்கள். இத்தனை போலிஸ் இருக்காங்களே பயமில்லையா என்று கேட்டபோது ஒரு பெருசு பதில் சொன்னார்: 'இவங்க எத்தனை பேரைச் சுடுவாங்க... அதுவுமில்லாம அணு உலை திறந்தா எப்படியும் கொஞ்சம் கொஞ்சமா சாகப்போகிறோம். அதுக்கு துப்பாக்கி குண்டுலே ஒரே தடவையா நிம்மதியா போயிரலாம்'

வெறும் உயிருக்குப் பயந்து மட்டும் அவர்கள் போராடவில்லை. 'யுரேனியத்திலிருந்து மின்சாரம் எடுத்த பின்பு, புளுடோனியம் கிடைக்கும். அதை வச்சி அணு குண்டு தயாரிப்பாங்க.. எங்கோ ஒரு நாட்டுலே அதைப் போடப் போறாங்க அங்கேயும் மக்கள்தான் சாகப் போறாங்க.. அதற்கு எங்க ஊரைப் பயன்படுத்துறதை எப்படி அனுமதிக்கிறது?' என்று அவர்கள் கேட்டபோது அவர்களது மனிதநேயம் நெகிழவைத்தது. மாற்று எரிபொருள், மின்பகிர்மானம், பன்னாட்டு நிறுவனங்கள், வல்லரசு நாடுகள், காங்கிரஸ் அரசின் யோக்கியதை, ஈழத் தமிழர்களை காங்கிரஸ் கொன்றது என அவர்கள் அரசியல் அறிவும், தகவல் அறிவும் நிரம்பியவர்களாக இருக்கிறார்கள். 'எங்க மக்களிடம் பேசுங்கள்' என்று மத்திய அரசின் குழுவையும், மாநில அரசுக் குழுவையும் உதயகுமார் கேட்பதற்கு காரணமில்லாமல் இல்லை. போராடும் மக்களின் பிரதிநிதிகளாகத்தான் உதயகுமார், புஷ்பராயன், மனோ தங்கராஜ் உள்ளிட்டவர்கள் இருக்கிறார்கள். அனைத்து முடிவுகளும் மக்களிடம் கலந்தாலோசித்தே எடுக்கப் படுகிறது. பிரதிநிதிகளை சமாதானப்படுத்தி காரியத்தை சாதித்துவிடலாம் என்று நினைத்தால் அது நடக்காது. அந்த மக்கள் கேட்கும் கேள்விகளுக்கும் மத்திய, மாநில அரசுகள் பதில் சொல்லியாக வேண்டும்.

போராட்டத்தின் தளகர்த்தர்களாக பெண்கள் இருக்கிறார்கள். பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை என்றால் அரசு, வன்முறையைக் கட்டவிழ்க்கத் தயங்காது என்பதை உணர்ந்தே இருக்கிறார்கள். பெண்கள் சொல்கிறார்கள்.. 'ஆம்பளைங்க பின்னாடி இருக்கட்டும்.. அவங்க செத்து, சோத்துக்கு வழியில்லாம நாங்க தவிக்கிறதை விட, நாங்களும், பிள்ளைகளும் குண்டடிபட்டு சாகிறோம்.. அடுத்து அவங்க போராடட்டும்.. கை, கால் ஊனமா பேரப் புள்ளைங்க பிறக்கிறதைப் பார்க்கறதைவிட, மொத்தமாக போராடி சாகலாம்' என்று தீர்க்கமாக சொல்கிறார்கள்.

அந்த எளிய மனிதர்களின் சொல்லாடல்களில் நாராயணசாமி, மன்மோகன் சிங், அப்துல் கலாம், கருணாநிதி, சு.சுவாமி எல்லாம் அடிக்கடி வந்துபோகிறார்கள். அற்பப் புழுக்கள் என்பதைத் தாண்டி அவர்களுக்கு ஒரு மரியாதையும் இல்லை..

## அந்த எளிய மனிதர்களின் சொல்லாடல்களில் நாராயணசாமி, மன்மோகன் சிங், அப்துல் கலாம், கருணாநிதி, சு.சுவாமி எல்லாம் அடிக்கடி வந்துபோகிறார்கள். அற்பப் புழுக்கள் என்பதைத் தாண்டி அவர்களுக்கு ஒரு மரியாதையும் இல்லை..

போராட்டத்திற்கு வெளிநாடுகளில் இருந்து பணம் வருகிறது என்று ஆளும் வர்க்கமும், ஆளும் வர்க்கத்தை நக்கிப் பிழைப்பவர்களும் கூறிக்கொண்டிருக்க, உண்மை வேறுவிதமாக அப்பட்டமாக காட்சி அளிக்கிறது. வெளிநாடுகளில் இருந்து பணம் திரட்டும் அளவிற்கு அங்கு செலவு ஏதும் பெரிதாக இல்லை. ஒரு மீனவர் சொன்னார்: 'சொன்னா நம்ப மாட்டீங்க... ஒரு நாளைக்கு போராட்டத்திற்கு ஆகுற செலவு என்ன தெரியுமா? 25 லிட்டர் வாட்டர் கேன் 2, 3 தான். நாங்க போராட்டம் நடத்துற தேவாலயம் எங்களுடைய கட்டடம். போட்டிருக்கிற கொட்டகை எங்களுடைய கொட்டகை. அதனாலே ஒரு நாளைக்கு 100 ரூபாய் செலவு ஆகிறதே அதிகம்தான். போராட்டக்குழு வெளியூர் போகும் போதுதான் கொஞ்சம் செலவு ஆகும். நாங்க சம்பாதிக்கிறதிலே பத்திலே ஒரு பங்கை போராட்டத்திற்குக் கொடுத்திட்டு வர்றோம். எங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து காசு வருதுன்னு சொல்றவன் தைரியமிருந்தா எங்க மக்கள் முன்னாடி வந்து சொல்லட்டும்'

மீனவ மக்கள் தற்சாற்புடைய மக்கள். யாருடைய கையையும் நம்பி வாழ்கிறவர்கள் அல்ல. அதனால் யாருக்கும் அஞ்சுபவர்கள் அல்ல. அடித்தால்.....

*(தொடர்ச்சி 18ம் பக்கம்)*

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்


BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN



BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com
R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS

Chartered Accountants and Business Recovery Professionals
- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

# ஜெனீவா வரை தொடரும் இந்தியச் சதி




**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

ஆரியர்களைப் பொறுத்தவரை தமிழன் சூத்திரன் அவன் ஆளப்படவேண்டியவன் அவன் ஆளக்கூடாது. இந்த அடிப்படையில்தான் இந்தியா தமிழ் ஈழத்தையும் தமிழர்களின் விடுதலைப் போரையும் அன்றிலிருந்து இன்றுவரை எதிர்த்து வருகிறது. ஆனால் இதைப் பல தமிழர்கள் இன்னும் உணராமல் இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரியது.

## ஜவகர் லால் நேரு

தமிழ் அரசியல் கட்சியான தமிழ் காங்கிரசுக் கட்சியின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் இலங்கை பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் இலங்கை வாழ் தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைக்க முற்பட்டார். அவர் தனது காங்கிரசையும் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையின் மலை நாட்டுப்பகுதியில் குடியேறிய தமிழர்களின் தலைவராக இருந்த ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் இயங்கிய தோட்டத் தொழிலாளர் காங்கிரசையும் ஒன்றிணைக்கும் தனது எண்ணத்தை திரு எஸ் தொண்டமான் அவர்களிடம் தெரிவித்தார். திரு தொண்டமானுக்கும் இது நல்ல ஆலோசனையாகப்பட்டது. தொண்டமான் இது தொடர்பாக அப்போது இந்தியப் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்களிடம் ஆலோசனை கேட்டார். பேரினவாதியான நேரு, தொண்டமானைப் பெரும்பான்மை சமூகத்துடன் ஒத்துழைக்குமாறு பணித்தார். தொண்டமானும் அதன்படியே பொன்னம்பலத்தின் ஆலோசனையை நிராகரித்தார். ஆனால் சிங்களப் பேரினவாதிகள் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறித்தபோது தொண்டமான் நேருவிடம் முறையிட்டார். நேரு இது உள்நாட்டு விவகாரம் என்று பகிரங்கமாகச் சொல்லித் தட்டிக் கழித்தார். இங்கு ஆரம்பமானது இந்திய ஆட்சியாளர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு அள்ளி வைப்பது.

## சிறிமா சாஸ்த்திரி ஒப்பந்தம்

இதன் பின் 1964இல் இந்தியா இலங்கையுடன் சிறிமா-சாஸ்த்திரி ஒப்பந்தம் சர்வதேச நியமங்களுக்கு எதிராக கைச்சாத்திட்டு 150,000 தமிழர்களை நாடற்றவர்களாக்கியது. இலங்கையில் வாழ் அனைத்து தமிழர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும் அவர்களின் எதிர்ப்பிற்கு செவி சாய்க்காது அப்போதைய இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்த்திரி இந்திய - பாக்கிஸ்த்தான் போரில் இலங்கையைப் பாக்கிஸ்த்தான் பக்கம் சாயாமல் தடுப்பதற்காக தமிழர்களின் வாழ்வைப் பலி கொடுத்தார்.

## இந்திரா காந்தியின் சதி

1977இற்குப் பிறகு இலங்கையில் அமெரிக்கா திருக்கோணாமலையில் சிங்கப்பூர் நிறுவனமொன்றின் பெயரில் தனது கடற்படைகளுக்கான எரிபொருள் மீள் நிரப்பு வசதிகளையும் சிலாபத்தில் அமெரிக்கா ஒரு வானொலி அஞ்சல் நிலையம் என்ற போர்வையில் தனது கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கான தொடர்பாடல் வசதிகளையும் ஏற்படுத்த முயன்றது. இது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்பதை உணர்ந்த அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கையைத் தனது வழிக்குக் கொண்டுவர தமிழர்கள் முதுகில் ஏறினார். தமிழர்கள் மத்தியில் பல ஆயுதக் குழுக்களை உருவாக்கி படைத்துறைப் பயிற்சி வழங்கி இலங்கை அரசுக்கு எதிரான படை நடவடிக்கைகளை அக்குழுக்களைக் கொண்டு செய்வித்தார். அந்தக் குழுக்களிடை ஒரு முரண்பாட்டு நிலையையும் உருவாக்கினார். ஆர்ப்பாட்டங்கள் உண்ணா விரதங்கள் சத்தியாக்கிரகங்கள் என இருந்த தமிழர் சிங்களவர்களுக்கு இடையிலான பகைமை ஒரு பெரும் ஆயுதப் போராக உருவெடுத்து சிங்களவர்களும் தமிழர்களும் நிரந்தர விரோதிகளாகினர். தமிழர்களை ஆயுதபாணிகளாக்கி சிங்களவர்களுடன் சண்டையிட வைத்து பின்னர் சிங்களவர்கள் பக்கம் சேர்ந்து தமிழர்களை அழித்தொழிக்க சகல உதவியும் செய்து தமிழர்களை நிர்க்கதி ஆக்கியது இந்தியா.

## ராஜீவ் காந்தி

இந்திரா காந்தி கொல்லப்பட்டபின்னர் இந்தியப் பிரதமராக வந்த அரசியல் கற்றுக் குட்டியான ராஜீவ் காந்தி இலங்கையில் தமிழர்கள் படைபலத்தில் வளர்ந்து செல்வதைப் பொறுக்காமல் அதற்கு முற்றுப் புள்ளி வைக்க தனது படையை இலங்கைக்கு அனுப்பி தமிழர்களை கொன்று குவித்தார். தமிழ் ஆயுதக் குழுக்கள் யாவற்றையும் தன்னிடம் ஆயுதங்களை ஒப்படைக்கும் படி வற்புறுத்தினார். தமிழர்களின் பாதுகாப்புக்கு தான் உறுதி என்று பொய் கூறி தானே தனது படையினர் மூலம் தமிழர்களைக் கொன்றார். தமிழர்கள் இலட்சக்கணக்கில் இடப்பெயர்வுக்கு உள்ளாகினர். இலட்சக்கணக்கான தமிழர்கள் வீடுகள் அழிக்கப்பட்டன. பல தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். தமிழர்களை ஏமாற்ற இலங்கை அரசியல் அமைப்பிற்கு 13வது திருத்தம் என ஒன்று கொண்டுவரப்பட்டது. அது நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம் இல்லை என திரைமறைவில் சிங்களவர்களுக்கு சொல்லப்பட்டது.

## மாலைதீவுத் தாக்குதல்

மாலை தீவை இந்தியா தனது வழிக்குக் கொண்டுவர தமிழ் ஆயுதக் குழுக்களில் ஒன்றை அங்கு அனுப்பி ஆட்சி மாற்றத்திற்குப் போராட வைக்கப்பட்டது. தொடர்ந்து இந்தியா மாலைதீவில் ஒரு கடற்படைத் தளம் அமைத்தது. மாலைதீவில் பயங்கரவாதச் செயலில் ஈடுபட்ட பழி தமிழர்கள் மீது போடப்பட்டது.

## சதீஸ் நம்பியார்

2002 விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் கைச்சாத்திடப் பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழர் பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இலங்கைப் படைகள் வெளியேறத் தயாராக இருந்த வேளையில் இந்தியா தனது சதீஸ் நம்பியாரை இலங்கைக்கு அனுப்பி அதைத் தடுத்தது. இந்தியா தமிழர்களுக்கு செய்த கணக்கில்லாத் துரோகங்களில் அதுவும் ஒன்று.

## சம்பூர் சதி

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சம்பூரில் இந்தியா மின் உற்பத்தி நிலையம் அமைக்கவென அங்கு வாழ்ந்த தமிழர்களை இலங்கைப் படையினர் இந்தியாவின் உதவியுடன் அடித்து விரட்டினர். அவர்கள் ஆறு வருடங்களுக்கு மேலாக ஏதிலிகளாக அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

## இறுதிப் போர்

இலங்கையில் சிங்களப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் தொடங்கும். சிங்களப் படைகளின் கைகள் ஓங்கி அவர்கள் முன்னேறும் நிலை ஏற்பட்டால் விடுதலைப் புலிகள் பின் வாங்குவது போல் பின்வாங்கிக் கொண்டே சிங்களப் படைகள் மீது தாக்குதல் தொடுத்து ஆளணி இழப்புக்களை சிங்களப்படைகளுக்கு ஏற்படுத்துவார்கள். முன்னேறும் படைகள் மீது அவ்வப்போது பக்கவாட்டில் ஊடறுப்புத் தாக்குதல்களும் பின்னால் சென்று பின்னிருந்து தாக்குதல்களும் நடக்கும். இதனால் ஏற்படும் ஆளணி இழப்புக்களையும் காயப்பட்டு களமுனையில் இருந்து வெளியேறும் ஆளணிக் குறைவையும் சமாளிக்க முடியாமல் ஒரு கட்டத்தில் சிங்களப் படைகள் பின்வாங்கும். பல சிங்களப் படையினர் உயிர் தப்புவதற்காக தம்மைத் தாமே காயப் படுத்திக்கொண்டு களமுனையில் இருந்து வெளியேறுவர். பலர் தப்பி ஓடுவர்.

2009 இலும் கடும்போர் நடந்தபோது சிங்களப் படைகளுக்கு ஏற்பட்ட ஆளணி இழப்புக்களை இலங்கையின் அயல் நாடு ஒன்றில் இருந்து வந்த படையினர் ஈடு செய்தனர். முதலில் 10,000 படையினரும் பின்னர் இன்னொரு 10,000 படையினரும் அந்த அயல் நாட்டில் இருந்து வந்தனர். பல சிங்கள ஊடகங்கள் இதை அம்பலப் படுத்தின. அப்-பொட்டு வைத்த படையினரும் தலைப்பாகை அணிந்த படையினரும் இலங்கையில் தமிழர்க்கு எதிரான போரில் பங்கேற்பதை புகைப்படங்கள் காணொளிகள் மூலம் அம்பலப் படுத்தின. இப்படைகள் எந்த நாட்டில் இருந்து வந்தன என்பதை எம்மால் இலகுவில் ஊகிக்க முடியும்.


## போரழிவைத் தடுப்பதைத் தடுத்த நாடு எது

2009 இறுதிப் போரின்போது இலங்கை அரசு போர் முனையில் வெறும் 70,000 மக்கள் மட்டுமே இருக்கின்றனர் என்று பொய் சொல்லியது. அதை அப்போதைய இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சரியென வாதிட்டார். ஆனால் இந்தியாவிற்கு அதன் உளவுத்துறை மூலமும் செய்மதிப் படங்கள் மூலமும் போர் முனையில் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகப்பட்டுள்ளனர் என்று தெரியும். போரால் பல பொது மக்கள் கொல்லப் படப் போகிறார்கள் என்பதை உணர்ந்த மேற்கு நாடுகள் குறிப்பாக பிரான்ஸும் பிரித்தானியாவும் இலங்கையில் ஒரு படை நடவடிக்கை மூலம் அப்பாவிப் பொது மக்களைப் பாதுகாக்க முற்பட்ட போது அதைத் தடுத்த நாடு எது? அமெரிக்காவிடம் இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்யப்போவதாக எம்மிடம் உறுதியளித்துள்ளது என்று பொய் சொன்ன நாடு எது?

## முட்கம்பி வேலி

2009 போருக்குப்பின்னர் பல இலட்சம் தமிழர்கள் ஏதிலிகளாக முட்கம்பிகளுக்குள் அடைக்கப்பட்டதை பல நாடுகளும் மனித உரிமை அமைப்புக்களும் கண்டித்தன. அனர்த்தம் காரணமாக ஒரு நாட்டில் வீடிழந்தவர்களுக்கு அரசு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும். ஆனால் அவர்களை முட்கம்பிகளுக்குள் துப்பாக்கி முனையில் தடுத்து வைத்திருக்க...

(தொடர்ச்சி 20ம் பக்கம்)



# 'We Tamils still have to plead with collaborators of the genocide for justice'



*Fr. S J Emmanuel (right) with Canadian Tamil MP, Rathika Sitsabaiesan*

**By Paul Newman**

Dr. Paul Newman spoke to Fr. S J Emmanuel of GTF on wide-ranging issues relating to the Eelam struggle. Excerpts from the interview.

***• A new political game of advocacy, lobbying and networking has emerged after May 2009, your thoughts on this?***

The UN and its sub-structures which were designed after the horrible experiences of two world wars for the future security and peace of the world by the powerful nations of the world are great and worthy milestones in the history of humanity. The Universal Declaration of Human Rights, gave lot of hope for the future of emerging nations, especially after many centuries of colonialism, oppressions and discriminations.

For us the Tamils of Sri Lanka, the last 64 years after the Declaration coincide exactly with our 64 years after independence. To our disappointment, all that we have suffered during these decades – majoritarian- democracy, majoritarian-sovereignty, discrimi nations, state-terrorism and mass-massacre – have happened under the eyes of these structures.

Hence the UN, its structures and the member-states have not lived up to the goal and spirit of the beginning. Corruption, self-interests, greed for super-power, has overtaken moral values like truth, justice and peace.

Hence advocacy, lobbying and net working on our part, telling the true story of the victims and pleading for justice and peace have become a dirty-game of adjusting to the demands of the powerful, speaking only their diplo matic language and hoping against hope for the best.

Knowing very well that all the power ful of the world including the UN, converged into Mullivaikal to help Sri Lanka, with finance and weapon, to crush not only the militants but also 40,000 civilians, we Tamils still have to plead with collaborators (of the genocide) for justice and hope for a better world.

***• How do you see the presence of other Diaspora Tamil groups post May 2009? In what way are you different from them?***

After May 2009, when the Sri Lankan Governmen and its supporters were having a series of celebrations, we Tamils all over the world, were in a shock and mourning over our dear ones.

The sudden wipe-out of the Wanni-Leadership also created a great vacuum in the diaspora. With never-say-die spirit, we saw that a new phase of the struggle had to be continued.

After a first phase of non-violent parliamentary struggle and a second phase of politico cum militant struggle, now a third phase of non-violent democratic and transparent struggle has to be led by the diaspora.

As a first step the diaspora Tamils through a referendum held in various countries, converged to a consensus called the "Vaddukoddai Resolution" confirming our common goal that was overwhelmingly voted by the Eelam Tamils in 1976 at the end of the 1st phase of the struggle and carried forward by the LTTE leadership.

There were already country organisations of Eelam Tamils for coordinating activities among them selves as well as to lobby support for the Tamil cause from foreign govern ments and peoples. The new concept of a Transnational Government of Tamil Eelam (TGTE)was proposed as an organ of the Tamil Diaspora to take the Tamil Cause forward and members were elected for this government.

In the meantime representatives from already functioning country-organisations came together to form a network, a global organisation to engage the international community for the Tamil Cause.

A Constitution for this global organi sation was drafted to work as a demo cratic non-violent and transparent organization vis-a-vis the international community.

The inauguration of the Global Tamil Forum within the British Parliament Buildings signalled the historic role of Britain in this conflict. Hence all the diaspora organisations function in parallel directions, having a strategy of their own to achieve the same goal of liberation and freedom for the Eelam Tamils and their Homeland.

***• What according to you is the role of India in Sri Lanka?***

India has a vital and unquestionable role to play in resolving this conflict and establishing a peaceful co-existence of all peoples on that island.

Historically we all must have moved down from India. But colonialism ended with a British-blunder of an unitary-state centralised in Colombo with all the powers in the hands of the majority Sinhalese. Consequently we Tamils suffered all forms of discriminations and deaths in the hands of the majority Sinhalese and their governments. Though we received sympathy and solidarity from Tamil Nadu, Delhi was interested in keeping relations with Colombo and preserving the unity of India without any separatist tendencies.

Delhi also used us Tamils to checkmate Colombo to fall in line with its super-power mindset. The unsuccessful mission of Delhi in the form of Indian Peace Keeping Force, the unsuccessful attempt of the Sinhala naval on Rajiv Gandhi's life, and later the unfortunate blunder of killing Rajiv Gandhi in Tamil Nadu, added to making India's role in resolving the conflict more complex and difficult.

Colombo, notwithstanding the unsuccessful attempt of the naval rate on Gandhi's life, succeeded in making Delhi and the whole of India to see the Eelam Tamils as murderers of Rajiv Gandhi.

We Eelam Tamils still look up to the India of Mahathma Gandhi as our beloved ancestral homeland and expect India to return to the moral and religious values which laid the foundation of independent India and not to go pleasing and protecting neighbouring Sri Lanka even after the mass massacre of May 2009.

***• Any idea why you were deported from India, despite your organization being a firm believer in democratic values and non-violence?***

As a catholic priest, and former Vicar General of Jaffna Diocese, I have been to India several times-to meet my Roman catholic colleagues, some of them Bishops now. As an Asian theologian serving the Asian churches I have been to India to conduct and participate in many seminars during 1984-1986.

I have known several Indian church leaders cardinals and bishops. And during my last visit in Feb.2011, I addressed the Tamil Nadu Bishops Conference and students of the University of Madras and Loyola College explaining our plight to them.

I have never taken part in any political meeting or had met Indian politicians. Still shockingly on the 11th Oct.2011, while holding a multi-entry visa for India I was refused entry into Chennai without any reason!

I have written to the Governor of Tamil Nadu, the Immigration Authorities in Chennai and to the Indian High commissioner in Berlin, but I have got no reply from any of them giving a reason for denying entry.

I was elected President of the Global Tamil Forum in Feb 2010 and I have visited India twice after that without any difficulty.

The only reason I could imagine for the refusal of entry is the latest malicious propaganda of the Sri Lankan govern ment through DVDs depicting me as "a supporter of terrorism". I am still a catholic priest working in the German diocese of Münster. Anyone can check my identity.

I look forward to visiting India, not as a politician, but as a priest victim and wit ness to present the Tamil-cause to New Delhi and get India's support for our cause.

***• Can you share your experience of leading a team to the centenary celebrations of the ANC?***

I have been to South Africa several times from 1997. I have met Archbishop Desmond Tutu and got the support of this Nobel Peace Laureate for peace and through him contacted the Government in Pretoria for possible South African mediation in our conflict.

But the Sri Lankan media even then said that I had gone to collect finance for the LTTE! I was in Durban for the World Conference against Racism.

The GTF invited the ANC to be at its Inauguration in Feb 2010 in the British Parliament. Since then we have been in contact with one another and with some ministers of the government.

We gladly accepted the invitation to attend their centenary celebrations. It is alleged that the Sri Lankan Govt. was displeased and decided not to come there for the celebrations. The Tamil National Alliance ( TNA) was also invited and both the TNA and the GTF met with some VIPs from the Gover nment as well as from the ANC and NGOs to discuss events in Sri Lanka and how the South African government could help at the international level towards a peaceful solution to the conflict....

*(Over to page 22)*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven | zero**
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design

# If Sri Lanka really could be good, then why has it been so bad?

As Sri Lanka struggles to fend off a critical resolution at the UN Human Rights Commission, international pressure on Sri Lanka is coalescing on three key demands.

International actors are demanding that Sri Lanka implements reforms to usher in good governance, credibly investigates and prosecutes those responsible for war crimes and crimes against humanity and finally meets Tamil demands for meaningful self government.

While the substance of these demands is entirely reasonable and plausible, the presumption that Sri Lanka might somehow meet these expectations is not.

For if Sri Lanka really was capable of such enlightened behaviour then why has its post independence history been one of relentlessly escalating ethnic antagonism and brutality, culminating in the bloodbath of May 2009? What explains the ongoing militarised repression of the Tamil speaking regions?

The very need for such overt international insistence on measures that are patently necessary reveals precisely why all such pressure is futile.

## The reasonable is impossible

The three key demands made by the international community cannot be met because they challenge the Sinhala first ethnocracy.

The first demand, namely that Sri Lanka takes concrete steps to implement administrative and legal reforms – including some that are set out in the LLRC – is in effect a demand to radically transform the nature of the state.

For if Sri Lanka were to meet this demand it would stop being a centralised, autocratic and ethnically politicised state and become instead an inclusive polity bound by the rule of law in which public authorities delivered a reasonable standard of governance to all citizens regardless of their ethnicity.

Crucially it is only if Sri Lanka can meet this seemingly prosaic first demand for good and ethnically neutral governance would it be able to meet the second two. After all if a state is incapable of implementing the rule of law it would also be incapable of investigating and prosecuting grave allegations of war crimes and crimes against humanity. Similarly if Sri Lanka remains incapable of equitable governance it will also remain incapable of delivering a political solution that would end Sinhala domination over the Tamils.

## The will to power

In the words of the political scientist Neil De Votta, Sri Lanka's current state formation can be described as an 'illiberal, ethnocratic regime bent on Sinhalese superordination and Tamil subjugation.' (2004; 6)

The emergence of this violently ethnocratic state formation did not happen by accident. Instead, it has emerged from a long historical process driven by Sinhala Buddhist majoritarianism.

Prof. Mick Moore writing in 1985 states that:

'The use of state power for the benefit of ordinary Sinhalese has been, and remains, the primary legitimation, implicit or explicit, of all governments elected since 1956 at least, and arguably since 1931.' (29)

He adds that successive Sri Lankan governments have consistently,

'..pursued policies which have been designed for, and have largely succeeded in, establishing the symbolic supremacy of the Sinhalese and Buddhism; enforcing the use of Sinhala as the official language; and stripping the various minorities of their privileged positions in public sector employment, commerce and higher education.' (Ibid)

Furthermore in relation to Sri Lanka's well established policies of state sponsored colonisation in the Tamil speaking areas, he writes:

'.. not only have large-scale irrigation schemes intruded Sinhalese settlers into areas formerly occupied mainly by Tamil speakers – Sri Lanka Tamils and Muslims – but this has been the conscious and admitted intention. There is thus a territorial dimension to what has been termed, in relation to Sinhalese political and cultural resurgence, "The Myth of Reconquest." Land policy, and the ideologies which support it, have in general focused much more on the control of land than on the cultivation or use of land.' (46).

## Understanding refusal

It is not that the Sinhala polity and political establishment have collectively failed to understand the principles of the rule of law, accountability or a condition Tamil Sinhala political equality. These things are clearly understood. Indeed they have been lavishly promoted by donor funded programmes and studies for several decades.

The problem is not one of understanding but one of will. All these good things are clearly understood by the Sinhala polity and its leadership and have been resisted for several decades on the basis of this clear understanding. Everybody knows that establishing the rule of law, accountability for war crimes and political reforms to end Sinhala domination of the Tamils would also effectively end the Sinhala ethnocracy.

The Rajapakse government, the main opposition parties – the UNP and JVP - as well as the vast majority of the Sinhala electorate see nothing wrong in the present state of overwhelming Sinhala military, political and economic domination over the Tamil speaking population.Quite the reverse, it is the ideal and expected outcome of the Sinhala military's victory of the LTTE.

Reason and force

Rajapakse's apparent solid grip on power has on occasion been challenged by vociferous protests in the Sinhala areas that at times have successfully overturned specific economic or fiscal decisions. In May last year for example the government's plans to reform garment workers' pension entitlements were overturned by sustained protests.

In contrast, Rajapakse's concerted efforts to violently impose a Sinhala first political and economic order in the Tamil speaking areas has consistently won at least tacit approval and more usually enthusiastic support from the Sinhala electorate and the main opposition Sinhala parties.

It is for this reason that the international community's exhortations will be entirely futile unless backed with the possibility of enforcing change from without.

In the decades since independence Sri Lanka has effectively become a state that exists to secure the domination of the Sinhala people. It will take more than international exhortation alone to overturn this historically established and entrenched reality.

*(Edited for lack of space)*
*Courtesy: tamilguardian.com*




# இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

5 Chapel Road, West Ealing, Middlesex, W13 9AE. Charity Number: 1014409
Email: info@ammanealing.com Web: www.ammanealing.com Tel: 0044 208 8100 835 Fax: 0044 208 8400 485

எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

**1**

பணி நிலை : ஆலய சிவாச்சாரியார்
தகமைகள் : விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும்.
தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.
இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.
கடமைகள் : ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூஜைகள் செய்தல்
வேதனம் : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிடப்பட்டு வழங்கப்படும்.

**3**

பணிநிலை : நிர்வாக அலுவலர் - பகுதி நேரம்
தகமைகள் : POS இல் அனுபவம் மிக்கவராகவும் கணக்கியல், அடிப்படை கணினி அறிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலம் பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும். சைவ சமயத்தவராக இருக்க வேண்டும்.
கடமைகள் : ஆலயத்தில் நடைபெறும் நாளாந்த அர்ச்சனைச் சீட்டு விற்பனை, பூஜைகளை முன்பதிவு செய்தல், தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளித்தல்.
வேதனம் : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.

**2**

**பணிநிலை** : நாதஸ்வர, தவில் கலைஞர்கள் **தகமைகள்**: நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்க வேண்டும்.
**கடமைகள்** : ஆலய பூசைக் காலங்களில் மங்கள இசை இசைத்தல் **வேதனம்** : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.


ஆலய இணையத்தளத்தில் www.ammanealing.com பணி நிலை வேண்டுகைக்கான விண்ணப்பப்படிவம் தரவேற்றப்பட்டுள்ளது. விருப்புடையோர் அதனைப் பதிவிறக்கி, பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறோம்.

**Closing date for the application : 23/3/2012**

கார்த்திகை 2000 முதல் மார்ச் 2012 வரை தாயகப்பணிக்கு அனுப்பி வைக்கப்பட்ட மொத்த நிதி **£ 1,620,971.55**

ஏப்ரல் 2011 முதல் மார்ச் 2012 வரை தாயகப்பணிக்கு அனுப்பி வைக்கப்பட்ட மொத்த நிதி **£ 114,258.00**

## Join Dots - 165




To Mummy,




Thank you for letting me to have a baby sister called Shuruthi and making delicious foods. you are my best mum in the whole wide world I Love you love love love loving....

***By Shaarah Narendran (Age 6)***



Penguin's Home

Help your penguin friend find his home.



## The Death-Master

It was a cold and windy night. I found it difficult to identify the dark silhouette lurking slyly in the midnight darkness. The moon shone like a ghostly galleon. The night was ominous and vice.

I made a sharp turn and peered into the darkness behind me. My heart paced. I stared to shake like an earthquake. My heart had sunk into a endless sea of fear. Tears rolled down my cheeks and the wind which was blowing in my face made it even worse. I felt a sharp chill go down my spine, and I shivered.

The mysterious figure came out. I saw its one eye. It looked into me and retrieved more secrets then one can hide. As it came closer I saw that its hands were stained with blood and its breath stank of dead rats. It wore a decrepit cloak that went around its back. With its pallid white skin, its eyes looked empty but full of cunning. When it then approached me I then realized it had no feet! It was just hovering in the space in front of me.

It approached me step by step and bent down. Now it was the end. With one short, sharp, shrill shout I collapsed...

***By Ayshvaan Thevarajah***

## Jokes...

**Why did the boy bring a ladder to school?**

***He thought it was a high school!***

**What do you call a pig with three eyes?**

***A piiig***

**What starts with T, ends with T and is full of T?**

***A teapot***

**What travels around the world and stays in a corner?**

***A stamp.***

**Who earns a living by driving his customers away?**

***A taxi-driver.***

***Nicole: Today my teacher yelled at me for something I didn't do.***

***Amelia: What was that?***

***Nicole: My homework!***

**What runs around a farm but doesn't move? .**

***A fence.***

**What do cars, trees, and elephants all have in common?**

***They all have trunks.***


**What makes a chess player happy?**

***Taking a knight off.***

**What kind of driver never gets a speeding ticket?**

***A screwdriver.***

## Colouring - 165



**- Winner-**



Shaarah

### Dear Kids...

Do you like to draw? Send in a picture with description to ORU PAPER and you could be the lucky winner Gift from KALAI KILI...

### தம்பி தங்கைகளே.....

நீங்களும் கலைக்கிளி வழங்கும் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற மேலேயுள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி எமக்கு அனுப்பி வையுங்கள்..



**By: Prithy**



**By: Chejan**



**By:Krishni**



**By: Roshini**



**By:Vigaashan**



**By: Rehashan**



**By: Dinusha**



**By:Jolene**



**By: Ayshvaan**



# கற்பக விநாயகர் கோவில்

2-4, Bedford Road, london E17 4PX, T: 0208 527 3819

அற்புத அருள் புரியும் கற்பகன் பொற்பதம் பணிந்தால் நற்பலன் நாம் பெறலாம்



## வசந்த நவராத்திரி விழாவும் சந்திர தேர் உற்சவமும்

23.03.2012 வெள்ளிக்கிழமை முதல் 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை வரை

**வழிபாட்டுக்கால நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| காலை 10.00 மணி | லலிதா திரிசதி ஹோமம், ராஜராஜேஸ்வரி அம்மன் அபிஷேகம் |
| மதியம் 12.00 மணி | பூஜை |
| மாலை 5.00 மணி | கட்கமாலா ஹோமம், மீனாட்சி அம்மன் அபிஷேகம் |
| மாலை 6.00 மணி | மூலஸ்தான பூஜை |
| மாலை 6.30 மணி | ஸ்ரீ சக்கர பூஜை |
| இரவு 7.00 மணி | வசந்த மண்டப பூஜை தெடர்ந்து திருவீதியுலா இசை சமர்ப்பணம் |

**அலங்கார தரிசனம்**

| | | |
|---|---|---|
| 23.03.2012 | வெள்ளி | ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தர்சனம் |
| 24.03.2012 | சனி | ஸ்ரீ அபிராமி தர்சனம் |
| 25.03.2012 | ஞாயிறு | ஸ்ரீ சரஸ்வதி தர்சனம் |
| 26.03.2012 | திங்கள் | ஸ்ரீ நாகபூஷணி தர்சனம் |
| 27.03.2012 | செவ்வாய் | ஸ்ரீ காமாட்சி தர்சனம் |
| 28.03.2012 | புதன் | ஸ்ரீ கேதாரகௌரி தர்சனம் |
| 29.03.2012 | வியாழன் | ஸ்ரீ சந்தானபாக்யலட்சுமி தர்சனம் |
| 30.03.2012 | வெள்ளி | சப்பறம் |
| 31.03.2012 | சனி | தேர் இரவு 7.00 மணி |
| 01.04.2012 | ஞாயிறு | பூங்காவனம் |

## 31.03.2012 தேர்த்திருவிழா இரவு 7.00 மணி சந்திரரதம்

தேர்த்திருவிழா தினத்தன்று (31.03.2012 சனிக்கிழமை) காலை அபிஷேகமும் ஸ்ரீ சக்கர பூஜை பூர்த்தியும் நடைபெறும் மாலை 6.00 மணி வசந்த மண்டப பூஜை தொடர்ந்து அர்ச்சனை இரவுத் தேர்த்திருவிழா நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் ஆனைமுகன் அருளும் அம்பிகையின் அருளும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்!

இங்ஙனம், ஆலய நிர்வாகத்தினர், உபயகாரர்கள்.



# SSJ TRANSPORT & SHIPPING Ltd

இங்கிலாந்தில் குறைந்த விலையில் சிறப்பான சேவையினை உங்களுக்கு நாங்கள் வழங்குகிறோம்!!

- Removals
- Collection
- Deliveries
- Shipping
- Storage
- Rubbish Disposal
- Transport
- Airport Services
- Wales Temple Services



7x 9x 15x SEATER VECHICLES With/Without Driver

LOCAL

NATIONAL

EUROPE

DELIVERIES FROM £ 30

REMOVALS FROM £ 99

முதலாவது பொதியை £30 க்கு அனுப்பினால் இரண்டாவது பொதியை இலவசமாக அனுப்பலாம்

Web : www.ssjtransport.co.uk
E-Mail : jeyanthan31@hotmail.com

அனைத்து ஐரோப்பிய நாடுகளுக்குமான சேவையையும் எங்களிடம் நீங்கள் சிறப்பாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு அழையுங்கள்- 020 8763 0770 / 07939 462 646 / 07951 180 181

# Techcube Ltd

## Call us: 020 8123 7990
## www.techcube.co.uk

## Complete EPOS system
## Only £999 exc.
## (limited offer)




*Package Includes:*

**15 "Touch Screen Monitor | Receipt Printer | Cash Drawer |Customer Display | Single line Scanner | Modular base CPU |Till Software and stock control**



### Consumable Products

Thermal Till Rolls | Price Guns | Self edge labelling Products

Free delivery (5 or more Boxes)



**Epos Systems | CCTV Installation & Maintenance | consumable products | Security alarms**

**988 Eastern Avenue, Newbury park, Essex IG2 7JD.**

# இலவு காத்த கிளிகளாவோமா ?

அலசுவாரம்
அலசுபவர் : மட்டைக்கிளப்பான்

பாகம் 106

அதோ வரப்போகிறது கண்டனத் தீர்மானம் இதோ வரப் போகிறது கண்டனத் தீர்மானம் என்றிருந்து தற்போது ஐ.நா மனிதவுரிமைச் சபையில் ஒருசில நாடுகளின் பிரதிநிதிகளால் அவர்களின் பேச்சின் இடையே சற்றுச் சிலாகித்துவிட்டுச் செல்லும் விடயமாய்ச் சுருங்கிப் போனது எமது விவகாரம்.

போரின் இறுதிநாட்களில் நடந்த கண்மூடித்தனமான தாக்குதல்கள், முள்ளிவாய்க்கால் படுகொலைகள், வெள்ளைக்கொடி விவகாரம் போன்ற இலங்கையரசின் அனைத்து மனிதவுரிமை மீறல்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் என்ற திரையினால் மூடப்பட்டு, இப்போது அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால் போதுமானது என்ற நிலைக்கு வந்திருக்கும் சர்வதேசம், அதனைக்கூட ஒரு பிரேரணையாக முன்வைக்க முயலாமல் போக்குக் காட்டிக் கொண்டே போகிறது. கடைசியில் தமிழ் மக்களை உலகம் கைவிட்டுவிடுமோ தெரியவில்லை. அப்போதைக்கப்போது சில மனிதவுரிமை அமைப்புகளும் ஆர்வலர்களும் மட்டுமே இலங்கையரசை விசாரணை செய்ய வேண்டும் என்று தீனக்குரலெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நாமும் எமது நம்பிக்கையைக் கைவிட்டு விடாமல் ஐநா முன்றலில் பதாகைகளுடன் நம்பிக்கையோடு நிற்கிறோம்.

வருடாவருடம் நடைபெறும் பருவகாலத் தொடர்களில் இந்த ஏமாற்று வேலை தொடர்ந்து நடக்கிறது. சென்றவோர் கூட்டத் தொடரிலும் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்பட இருக்கிறது என்னும் நம்பிக்கையூட்டப்பட்டுக் கடைசியில் தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள். கானல் நீரைக் கண்ட மான்களாயானோம்.

உலகிலுள்ள மொத்தம் எழுகோடித் தமிழர்களில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் அநியாயமாகக் கொல்லப்பட்டதை ஒருபொருட்டாக மதியாமல் அலட்சிய மனப்பான்மையோடு இந்தியாவுட்பட அனைத்து நாடுகளும் நடந்துகொள்ள அதனை மொத்தத் தமிழினமும் பார்த்து என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கும் அவலநிலைக்கு என்ன காரணம். எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். நமக்கெனவோர் அடையாளம் இந்த உலகில் இல்லையென்பதுதான் அது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது அறுபது இலட்சத்திற்கும் அதிகமான யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் அந்தக் காலத்தின் போதுதான் இஸ்ரேல் என்னும் நாடு உருவானது. சியோனிஸ இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு கிட்டத்தட்ட ஆறு தசாப்தங்கள்வரை அதாவது யூத மக்கள் நாசிகளால் இனப்படு கொலைக்கு உள்ளாக்கப்பட்ட காலம்வரை சிறிது சிறிதாக தமது தாயகமான பாலஸ்த்தீனத்தில் தம்மை நிலைப்படுத்திக்கொண்ட யூத இனம் இறுதியில் தனக்கெனவோர் நாட்டை அமைத்துக் கொண்டது. பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்து தமது தாயகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்கட் கூட்டத்தின் மீள்வருகையை சியோனிஸம் வலியுறுத்தியது. அதன் பலனாக உலக யூத மக்கட் தொகையில் கணிசமான அதாவது கிட்டத்தட்ட 42 வீதத்தினர் இஸ்ரேலில் குடியேறித் தமது நாட்டை உருவாக்கினார்கள். யூதர்களுக்கு அன்றிலிருந்து இன்று வரையிருக்கும் இன அடையாளமே அவர்களைச் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறவும், அவர்களது தாயகத்தைப் பெற்றுக்கொள்ளவும் உதவியது. இந்த அடையாளம் துலக்கமுறக் காரணம் யூதர்கள் பொருளாதாரத்திலும் கல்வியிலும் மேம்பட்டவர்களாகக் காணப்பட்டதுதான். தாம் மதிப்பளிக்கும் ஏசுநாதர் பிறந்த அதே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றவோர் மதிப்பும் கிறிஸ்தவர்கள் மத்தியில் யூதர்கள் சார்பாக உள்ளது. அல்பிரட் ஐன்ஸ்டைன், கால் மாக்ஸ் போன்ற மேதைகள் பிறந்த இனம் என்பதும் யூதர்களின் மதிப்பையும் மரியாதையையும் மேலும் உயர்த்த உதவியது.

நமது நிலையோ வேறு. வள்ளுவன், கம்பன், இளங்கோ, பாரதியென்று எத்தனையோ உலகத்தரச் சிந்தனையாளர்களும் சிருஷ்டி கர்த்தாக்களும் எம்மினத்தில் தோன்றியிருந்தாலும் சர்வதேச மட்டத்தில் அவர்களின் மேதாவிலாசங்கள் எடுத்துச் செல்லப்படவுமில்லை, சொல்லப்படவுமில்லை, அவற்றிற்கான மதிப்பு கொடுக்கப்படவுமில்லை. நாம் நமக்குள்ளேயே நமது பெருமைகளைப் பேசியவாறு பல நூற்றாண்டுகளைக் கடத்திவிட்டதாலும், மேலைத் தேயத்தினரிடம் பலசகாப்தங்களாக அடிமைகளாக, அவர்களின் ஆட்சிக்குட்பட்டவர்களாக வாழ்ந்து முடித்து விட்டதாலும் சரிந்து போய்விட்டவோர் சரித்திரத்தின் சொந்தக்காரர்களானோம். எமக்கென்றவோர் தனியடையாளம் அழிந்துபோனது. யூதர்கள் அழிக்கப்பட்டது போல நாமும் மில்லியன் கணக்கில் அழிக்கப்படாதது வேறு குறையாக இவ்வுலகத்திற்குத் தென்படுகிறதோ என்னவோ! காத்திரமான நடவடிக்கைகளை எமக்காக வல்லரசுகள் எடுப்பதில் கவனம் செலுத்துவதாயில்லை.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்து நவீன யுகம் வரைக்கும் ஓர் நாடின்றி அலைந்து அங்குமிங்கும் குடியேறி வாழ்ந்த யூத இனம் தன் இழிநிலையை உணர்ந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டு சியோனிஸத்தைத் தன் வழித்தடமாக்கி நாடொன்றை அமைத்து இன்று உயர் நிலையில் வாழ்கின்றது. பைபிள்க் காலத்திற்கும் முற்பட்ட கால வரலாற்றைக் கொண்டிருந்தும் தமிழினம் தான் வாழும் தனது நாட்டின் மத்திய அரசினராலேயே அவமதிக்கப்பட்டு அலட்சியப்படுத்தப்படுகின்றது.

'பெருமரத்தைச் சுற்றிய பல்லியும் சாகாதென்பார்கள்.' ஆசியாவின் வரண்ட மத்திய கிழக்குப் பிராந்தியத்தைத் தமது தாயகமாகக் கொண்டிருந்தாலும் யூதர்களின் பரவல் மேற்கை நோக்கியே காணப்பட்டதால், இரும்புச் செல்வத்தைப் போதிய அளவு கொண்டிருந்த ஐரோப்பாவில் அவர்கள் காலூன்றினார்கள். உலகைத் தன் ஆயுதபலத்தால் வெற்றி கொண்ட ஐரோப்பாவில் அவர்களது செல்வாக்கு நிலைபெற்று அமெரிக்காவரை வியாபித்தது. இதன் விளைவாக கல்வியிலும் பொருளாதாரத்திலும் உயர்ந்தார்கள். அவர்களுக்கென்று ஓர் நாடு அவர்களது பூர்வீக பூமியில் அமைத்துக் கொடுக்கப்பட்டே ஆகவேண்டுமென்னும் உலக அபிப்பிராயமும், தமது தாயகத்தில் தாம் மீண்டும் சென்று குடியேறியே ஆகவேண்டுமென்ற சியோனிஸ உணர்வும், இரண்டாம் உலகயுத்தத்தில் அவர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டதால் ஏற்பட்ட அனுதாப அலையும் யூதர்களுக்குத் தூண்டுகோலாக இருந்ததால் இஸ்ரேல் அராபியர்களின் எதிர்ப்புக்கும் மத்தியில் உருவாயிற்று.

யூதர்களின் வரலாறு தமிழர்களுக்கு ஓர் பாடம். உலகத்தில் எமது அடையாளத்தையும் செல்வாக்கையும் கல்வி, பொருளாதார ரீதியாக நிலைநிறுத்திக் கொண்டாலொழிய அரசியல், ராஜதந்திர ரீதியாக நாம் எதனையும் சாதித்துவிட முடியாது. ஆனால் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவினால் மேற்கு நாடுகளின் செல்வாக்கு சரிந்து கொண்டே போகின்றது. தூரகிழக்கு நாடுகளின் குறிப்பாக சீனாவின் வளர்ச்சி மிக உயர்ந்த நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றது.

இன்னும் ஓரிரு தசாப்தங்களில் ஆங்கிலத்தின் இடத்தைச் சீனமொழி பிடித்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதை முன்கூட்டியே மோப்பம் பிடித்தோ என்னவோ இலங்கையும் தனது வெளிநாட்டுக் கொள்கையில் சீனச்சார்பு நிலைப்பாட்டை மிகவும் நாசூக்காக உட்புகுத்தி வருகின்றது. துரதிஸ்டவசமாக எமது தாய்த் தமிழகம் இந்தியாவின் வசப்பட்டுப் போய்க் கிடப்பதால், சீனாவுடனானவோர் நல்லுறவை தமிழ்த் தேசிய இனம் எதிர்காலத்தில் ஸ்தாபித்துக்கொள்ள முடியுமாவென்பது கேள்விக்குறியே.

இன்றில்லாவிட்டாலும் இன்னும் ஓரிரு தசாபதங்களுக்குள் உலகில் தமிழனுக்கும்

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

# கூடங்குளம் போராட்டம்....

(11ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பி அடிக்கும் குணம் உடையவர்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு இடிந்தகரை மீனவர்களுக்கு குடைச்சல் கொடுத்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை நையப்புடைத்திருக்கிறார்கள்.

பிறிதொரு முறை போலீஸ் ஒருவரின் துப்பாக்கியைப் பிடுங்கி, அவர் நெஞ்சிலேயே வைத்து, 'ரொம்ப வாலாட்டுனே.. ஊரைத் தாண்டிப் போயிற முடியாது' என்று மிரட்டியிருக்கிறார்கள். அப்படி இருந்த மக்கள்தான் இன்று உதயகுமாரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, அமைதி வழியில் போராடி வருகிறார்கள். ஈ, காக்கை கூட அவர்களின் அனுமதியில்லாமல், போராட்ட இடத்திற்குள் நுழைந்துவிட முடியாது. அந்த மக்களை மீறி உதயகுமாரை யாரும் நெருங்கிவிட முடியாது.

**இங்கே சிலர் கீறல் விழுந்த ரெக்கார்ட்டைப் போல திரும்பத் திரும்ப ஒன்றை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், 'மக்களின் அச்சத்தைப் போக்கிவிட்டு, அணு உலையைத் திறக்க வேண்டும்' என்று....**

எலியும் பூனையுமாக பகையுடன் இருந்த ஊர்கள்தான் இடிந்தகரையும், கூடங்குளமும். சாதியால் பிளந்திருந்த மக்களின் மனதை உதயகுமார் தனது தன்னலமற்ற தொண்டால் இணைத்திருக்கிறார். எங்க ஊர் காமராசர் என்கிறார்கள் மக்கள்.

இங்கே சிலர் கீறல் விழுந்த ரெக்கார்ட்டைப் போல திரும்பத் திரும்ப ஒன்றை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், 'மக்களின் அச்சத்தைப் போக்கிவிட்டு, அணு உலையைத் திறக்க வேண்டும்' என்று.


ஏதோ அந்த மக்களிடம் குழப்பமும், தேவையில்லாத பயமும் இருப்பதாகக் கருதிக் கொண்டு சொல்கிறார்கள். அவர்கள் அத்தனை விபரங்களையும் முழுக்க அறிந்திருக்கிறார்கள். அவர்களிடம் அச்சமில்லை. மிகவும் தீர்க்கமாகக் கூறுகிறார்கள் 'அணு உலையை மூட வேண்டும்'. அவர்களிடம் பிரசங்கம் நடத்தி ஏமாற்றி விடலாம் என்ற பேச்சுக்கே இடமில்லை. 'அணு உலையை எடுத்திட்டு, அதே கட்டடத்தில் மாற்று வழியில் மின்சாரம் தயாரிக்கட்டும். நாங்களே அவர்களுக்கு முழு உதவியையும் செய்கிறோம்' என்கிறார் கூடங்குளப் பெரியவர் ஒருவர்.

காவல் துறை சொல்கிற இடத்தில், சொல்கிற நேரத்திற்குள்ளாக ஆர்ப்பாட்டம் செய்து, எந்தத் தீர்வையும் எட்டாமலேயே போராட்டங்கள் முடிந்து விடுவதைப் பார்த்துப் பார்த்து வெறுத்துப் போயிருக்கும் நமக்கு கூடங்குளம் போராட்டம் மிகப் பெரிய மலையாக உயர்ந்து நிற்கிறது. மக்கள் நலனில் அக்கறை உள்ள அனைத்துக் கட்சியினரும், இயக்கத்தவர்களும் கூடங்குளம் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது. வெறுமனே அங்கு போய் ஆதரவு கொடுப்பது என்பதோடு மட்டுமல்லாமல், எப்படி மக்களைத் திரட்டுவது, எப்படி மக்களுக்குக் கற்பிப்பது, எப்படி போராடுவது என்பதையெல்லாம் கற்றுக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

நம் சமகாலத்தில் தமிழகத்தில் இப்படி ஒரு போராட்டத்தை யாரும் பார்த்ததில்லை என்பது போல் கூடங்குளம் போராட்டம் உள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் ஆவணமாக்க வேண்டிய அவசியம் நம் எல்லோருக்கும் உள்ளது. அது, அடுத்து போராட வரும் தலைமுறையினருக்கான வேத நூலாக இருக்கும்.



# பெண்கள் தினத்தில் ஈழப்பெண்களின் அடையாளம்



நெடுந்தீவில் பள்ளி மாணவி ஒருத்தி ஆயுதக் குழுவைச் சேர்ந்த ஒருவனால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின்னர் பரிதாபகரமாக கொல்லப்பட்டுள்ளாள். அவளை மாணவி என்றுதான் எல்லா ஊடகங்களும் விழித்தன. இந்த சம்பவத்தில் மிகவும் அதிர்ச்சியை தருவது அவள் ஒரு 13 வயதுச் சிறுமி என்பதே. ஒரு குழந்தை என்று கூட பாராமல் இரக்கமற்ற வகையில் அந்தச் சிறுமி வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளாள்.

இதுதான் இன்று ஈழப் பெண்களுக்கு ஈழத்தில் உள்ள சூழலும் சுகந்திரமும். அண்மையில், பருத்தித்துறையில் கூட இப்படி ஒரு பள்ளி மாணவி மர்மமாக கொலை செய்யப்பட்டிருந்தாள்.

08/03 அனைத்துலகப் பெண்கள் தினமாகும். உலகப் பெண்கள் எழுச்சி தினத்திற்கு ஈழத்துப் பெண்கள் மிகவும் உன்னதமான பங்காற்றியிருக்கிறார்கள். ஈழப் பெண்கள் இன்று பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்துள்ள நிலையில், ஈழப் பெண்களின் வரலாறு மற்றும் பங்களிப்பு பற்றிய விடயங்களை மீளப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது.

வெறும் பண்பாட்டுச் சித்திரங்களாகவும் சமூக அடிமைகளாகவும் பார்க்கப்பட்ட தமிழ் பெண்கள் நவீன உலகத்தில் ஆளுமை மிக்க பெண்களாக உருவெடுத்திருக்கிறார்கள். அதிலும் நவீன உலகின் பொருளாதார அரசியல் மோதல்களிலும் உரிமைகளுக்கான போர்க்களங்களிலும் ஈழத்துப் பெண்கள் வகிக்கும் இடமானது, ஈழத்துப் பெண்களை பெரும் கவனத்திற்கும் அர்த்தத்திற்கும் உள்ளாக்கியிருக்கிறது.

ஈழத்து மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈழப் பெண்கள் சரிநிகரான இடத்தை வகிக்கிறார்கள். பெண் என்ற அடையாளத்தினால் எழும் அடையாளச் சிக்கல்களின் அர்த்தங்கள் மாறிப்போயிருக்கிறது.

ஈழ்த்து மண்ணில் ஈழ மக்களின் போராட்டங்களில் இந்தப் பெண்கள் உழைத்த தருணங்களும் அதற்காக அவர்கள் கொல்லப்பட்ட தருணங்களும் மனித உரிமைகளுக்காக வாழ்ந்த தருணங்களும் அதிகமானது. 'சிங்களச் சகோதரிகளே! இனி உங்கள் பெண் உறுப்புகளுக்கு வேலை இல்லை' என்று எழுதியவர் ஈழப் பெண்கவிஞர் கலா. 'கோணேஸ்வரிகள்' என்ற அவரது கவிதை மட்டக்களப்பில் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு பெண் உறுப்பில் குண்டு வைத்து சிகதறடிக்கப்பட்டு கொல்லப்பட்ட கோணேஸ்வரி என்ற குழந்தைகளின் தாயான பெண் பற்றி ஆவேசத்துடன் குறிப்பிடுகிறது.

கோணேஸ்வரி, சாரதாம்பாள், கிருஷாந்தி, தர்சினி, இசைப்பிரியா என்று பல பெண்கள் இராணுவ வலயங்களில் இப்படி வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டவர்கள். பேசாலை, அல்லைப்பிட்டி போன்ற பல இடங்களில் மக்கள் கொலை செய்யப்பட்ட பொழுது பெண்கள் இறப்பதற்கு முன்பும் இறந்த பின்னும் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள். 1996களில் செம்மணிப் புதைகுழியில் பல பெண்கள் இப்படி கொன்று புதைக்கப்பட்டார்கள். வன்னி யுத்தத்தில் பல பெண்கள், சிறுமிகள், போராளிப் பெண்கள் இப்படி வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டார்கள். உரிமைகள் மீறப்பட்டன. ஈழப் பெண்கள் இலங்கை அரசால் அழித் தொழிக்கப்பட வேண்டும் என்றும் ஒடுக்கப்பட வேண்டும் என்று முக்கிய இலக்குகளாக மாறிப் போயிருக்கின்றனர்.

பெண் பூமி உருவாகும் உடல் என்ற வகையில் புனிதம் பெறுகிறது. பண்டைய தமிழ் இலக்கியங்களிலும் வாழ்க்கை முறைகளிலும் பெண் குறித்து மிகவும் பின்தங்கிய கருத்துக்களை விதைத்த ஆண் ஆதிக்க சமூதாயத்தில் ஈழப் பெண்கள் தமிழ் வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் புதிய அடையாளத்தை கொடுத்திருந்தார்கள். ஈழப் பெண்கள் களப் போராளிகளாக சாதனை நிகழ்த்தியிருந்தார்கள். காரைநகர் கடற்படை முகாம் தாக்குதலில் கொல்லப்பட்ட முதல் பெண் போராளியான ஈ.பி.ஆர்.எல்.எவ் சோபாவுக்கு அடுத்து மாலதி ஈழப் போராட்டத்தில் முதன் முதல் மாவீரர் என்ற அடையாளத்தை பெறுகிறார்.

அங்கயற்கண்ணி முதன் முதலில் கரும்புலியாக தற்கொலையாக வெடித்து எதிர்த்தரப்பை அழித்தவர். சோதியா, விதுசா, துர்க்கா, சுரேந்தினி, பூபாலினி, தமிழகி, திவாகினி போன்ற பல ஈழப் பெண் போராளிகள் ஈழப் பேராட்டத்தின் ஆயுதப் போராட்டக் களத்தில் முக்கிய பங்கை வகித்திருக்கிறார்கள். இவர்கள் போர்க்கள ஆற்றலும் வலிமையும் கொண்ட பெண்களாக பரிணமித்தவர்கள். பெண் பற்றிய தவறான கருத்து வளர்க்கப்பட்ட தமிழ் சமூகத்தில் இப்படியான போராளிப் பெண்களின் எழுச்சி நிலைகள் புதிய அர்த்தத்தையும் நம்பிக்கையும் வலிமையுடன் சமூகத்திற்கு ஊட்டியிருந்தன.தமிழ் இலக்கியத்தில் கவிதையில் ஈழப்பெண்கள் பெரும் அடையாளத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழகம் தமிழ் இலக்கியத்தில் முன்னோடி என்ற பொழுதும் ஈழத்துப் பெண்களின் கவிதைகளின் எழுச்சியே முழுத் தமிழுக்கும் நவீன தமிழ்ப் பெண் கவிதைகள் பற்றிய அர்த்தத்தை மெய்ப்பித்திருந்தன.

சங்கரி, ஔவை, சிவரமணி, செல்வி, சன்மார்க்கா, மைத்திரி என்று தொடங்கும் ஈழப்பெண் கவிதை வரலாறு தமிழகத்து பெண் கவிதைகளில் கடும் தாக்கத்தை செலுத்தியிருந்தன. ஈழப் பெண்கவிதைகள் போர்க்களத்தின் உள்ளிலிருந்தும் வெளியிலிருந்தும் வலிய குரல்களாக கிளம்பின. கப்டன் கஸ்தூரி, கப்டன் வானதி, மேஜர் பாரதி போன்ற போராளிப் பெண்கவிஞர்கள் போர்க்கள அனுபவங்களை வீரச்செறிவுடன் மனிதாபிமானக் குரல்களுடன் எழுதினார்கள். செல்வி, சிவரமணி போன்ற பெண் கவிஞர்கள் போர்க்களத்திற்கு வெளியில் இருந்து போர் வாழ்வையும் மனிதாபிமானச் சிதைவுகளையும் மிக வலிய குரல்களில் எழுதினார்கள். மனிதாபிமானமற்ற ஈழ நிலத்தை கண்டு சிவரமணி தன்னை தானே எரித்து கொலை செய்து கொண்டார். யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவியான செல்வி மனிதாபிமானத்திற்காக கேள்வி எழுப்பியவர். ரஜனி திரணகம, தமிழ்கவி, தமிழவள், வெற்றிச்செல்வி, உலகமங்கை, ஆதிலட்சுமி போன்றவர்களும் ஈழத்தின் முக்கியமான பெண் ஆளுமைகளாக திகழ்ந்தவர்கள்.

ஈழத்து பெண்களின் கவிதை போக்குகளும் இலக்கியப் போக்குகளும் பண்டைய இலக்கிய மரபிலிருந்து முழுமையாக பார்வை நிலையிலும் குரல் எழு நிலையிலும் மாறுபட்ட எழுச்சியைக் கொண்டிருந்தன. இலக்கியம் ஆண்களால் படைக்கப்பட்டு ஆண்களுக்கானதாக ஆண் ஆதிக்கத்தில் இருந்த பொழுது பெண்களுக்கான குரல்களையும் ஆண்களே படைத்துக் கொண்டிருந்தனர். ஈழப் பெண்கள் இந்த மரபையும் பாரம்பரியத்தையும் தகர்த்து பெண் அடையாளத்தை இலக்கியத்தில் நிறுவினார்கள். பின்னைய காலத்தில் தமிழ்நதி, அனார், பஹிமாஜஹான், பிரதீபா, மாதுமை, பானுபாரதி, கற்பகம் யசோதரா, ஆழியாள், றஞ்சினி, நிவேதா, வினோதினி, மலரா, தாட்சாயினி போன்ற பல பெண்கள் எழுத்துலகில் முக்கிய பதிவுகளை நிகழ்த்தினார்கள்.

இவர்களின் எழுத்துக்களும் பார்வைகளும் பெண் உடல் மொழி, பெண் மனவெளிகள், பாலியல் உலகம், பாலியல் விடுதலை, பெண் பற்றிய ஆணின் அதீதங்கள், அடக்குமுறை வாழ்வு போன்ற பல விடயங்களைக் குறித்து தெளிவாக உரத்துப் பேசியிருக்கின்றன. போருக்குப் பிந்திய இன்றைய ஈழத்து சூழலில் பெண்கள் மீண்டும் அடக்கப்படுகின்ற ஒடுக்கப்படுகின்ற பாலியல் பொருட்களாக பாவிக்கப்படுகிற நிலைகள் அதிகரித்துள்ளன.

முழு இராணுவ வலயமாக்கப்பட்டு ஈழ நிலத்தில் சிறுமிகள். பெண்கள், விதவைகள், முன்னாள் பெண்போராளிகள் என்று சமூகத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலமைக்கு பெண்கள் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்நிலைச் செயற்பாடுகளும் பெண் எழுத்துக்களும் இன்று ஈழத்தில் தடைப்பட்டுள்ளன. ஈழத்தில் தாயாகவும் யுவதியாகவும் குழந்தையாகவும் பெண்கள் இன்று அனுபவிக்கும் இன்னல்கள் மிகவும் கொடுமையானவை.எண்பதுகளில் ஏற்பட்டதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பெண் நிலை சார்ந்த எழுச்சிகளும் முனைப்புக்களும் உரையாடல்களும் நடவடிக்கைளும் தேச வீழ்ச்சியும் சமூக வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ள இன்றைய ஈழத்து பெண் சூழலில் மீண்டும் அவசியமாகின்றன என்பது இன்றைய உலகப் பெண்களின் தினத்தில் உணரப்பட வேண்டியது அவசியமாகிறது.

-ஆதீரா

# நாலு வார்த்தை எழுதவிடு........

## ஆதங்கம்

இம்மாதம் ஐந்தாம் நாள் ஜெனீவா ஐ.நா.சபை முன் பெருந்திரளான தமிழர் திரண்டனர். அத்தமிழர்களிடையே ஓர் உணர்வே உச்சம் பெற்றிருந்தது. அது தமிழ்த்தேசியம். தமிழ்த்தேசியத்தில் அக்கறை கொண்ட இலட்சக்கணக்கானோர் உலகமெங்கும் உள்ளனர். சேயோனின் ஆதங்கம் என்னவென்றால் அப்படி இலட்சக்கணக்கானோர் இருந்தும் ஓர் எட்டு எடுத்து வைக்க முடியவில்லையே என்பதே. பாருங்கள், ஜெனீவாவில் கூடுவதற்கான தேவைகுறித்து ஜி.ரி.வி தொலைக்காட்சியில் ஓர் நிகழ்ச்சியும் வரவில்லை. தமிழ்த்தேசியம் தொடர்பாக அக்கறையான தொலைக்காட்சி அது. அவர்களிடமே நேரடியாக விசாரித்தான் சேயோன். துக்கப்பட்டு அவர்கள் சொன்னார்கள் 'எவ்வளவோ முயன்றோம். நிகழ்ச்சி அமைப்பாளர்கள் ஒரு சொட்டும் சிந்தை இரங்கவில்லை. ஜெனீவாவிற்கும் சென்று அதைக் காட்சிப்படுத்த முயன்றோம். அதற்கும் உக்கிரமான தடை. நாம் என்ன செய்வோம்?'

தமிழ்த்தேசியம் குறித்து சிந்திப்பவர்களிடையே கூட இப்படியொரு வன் எதிர்ப்பு என்றால், எங்கே போய் தலையை முட்டிக்கொள்ளலாம்? ஒற்றுமை என்றும் ஒன்றுபடுங்கள் என்றும் எப்படி எம்மால் குரலெழுப்பமுடியும்? அதே சமயம் ஐ.பி.சி. **தமிழ்** வானொலி **ஜி.ரி.வி.**யை குறிப்பாக ஊடகவியலாளர் **தினேஸ்** அவர்களைச் சாட்டுகிறது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை தினேஸ் உடைத்து விடப்போகிறார் என்கிற மாதிரி. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்ன சொரியல் மணலால் கட்டப்பட்ட வீடா, தினேஸ் உடைத்துவிட? அது இருக்கட்டும், இன்னமும் ஜனநாயகம், கருத்துச்சுதந்திரம் என்பவனற்றைப் புறம்-தள்ளி தமிழ்த்தேசியம் குறித்து நாம் பேசுவது முறையானது தானா?

## ஆரண்யகாண்டம்

சேயோன் ஒருகணம் திகைப்பிலாழ்ந்தான், **ஆரண்யகாண்டம்** திரைப் படம் பார்த்துமுடித்தபோது. **உதிரிப்பூக்கள்** திரைப்படத்திற்குப் பிறகு பிரதியிலும் சினிமாப்படைப்பிலும் சேயோனை அசத்திய திரைப்படம் அது. நகரம் சார்ந்த விளிம்புநிலை மக்களை களனாகக் கொண்டு அதன் உயிரையும், உணர்வையும் அப்படியே தூக்கித் தருகிறார் இயக்குநர் **குமாரராஜா**. வன்முறை என்பது எப்பொழுதுமே குரூரம்தான். ஆனால் அதனை அழகியலில் தோய்த்தெடுத்து தந்துவிடுகிறது ஆரண்யகாண்டம்.

யாவற்றையும் கவனம் எடுத்து நகர்கிறது இத்திரைக்கதைப்பிரதி. பாத்திரங்கள் மிகச்சரியாக வார்க்கப்பட்டிருக்கின்றன. ஒன்றையொன்று சார்ந்து சார்ந்து மேலெழுகின்ற பாத்திரங்கள் சட்டெனத் தொப்பென்று வீழ திரைக்கதைப்பிரதி தன் உச்சத்தைத் தொட்டு விடுகிறது. அதை எவ்வித பிசிறலும் இல்லாமல் செதுக்கியிருக்கிறார் நெறியாளர். அவருக்குக் கிடைத்த பக்கவாத்தியக் கூட்டணியும் அருமை. இசைக்கு **யுவன்சங்கர் ராஜா**. இப்படியோர் அற்புதமான இசையை அவரது வேறெந்தத் திரைப்படைப்பிலும் சேயோன் கேட்டதில்லை. ஆரண்யகாண்டம், ஓர் உலகத்தரமான திரைப்படமாக உருவாக்க அருமையாக உழைத்திருக்கிறார் யுவன்சங்கர்ராஜா.வல்லபம் வாய்ந்த மற்றைய ஒரு வாத்தியம் ஒளிப்பதிவு. பிரதியை மீறி கமெரா எங்குமே நடந்து போனதில்லை. ஓர் ஓவியம் போல பல காட்சிகள் தோன்றியமையே ஒளிப்பதிவின் மேன்மை. கமராவைக் கையாண்டிருக்கிறார் **வினோத்** என்பவர். மிகச் சிறந்த இயக்குனர்கள் மிகச் சிறந்த நடிப்பை வெளிக்கொணர்வர். ஜாக்கி ஷெரப், சம்பத் குமார், ஜாசின், ரவி கிருஷ்ணா போன்றவர்களை நடிகர்களாக இதில் காண முடியவில்லை. முறையே முறையே சிங்கப் பெருமாள், பசுபதி, சுப்பு, சப்பை என்றே அறிகிறான் சேயோன். ஒருமுறை பாருங்கள் என்ற வேண்டுகோளையும் விடுக்கிறான். இத்திரைப்படத்தில் எடிட்டர் பிரவீன் அவர்களுக்கு இம்முறை தேசிய விருதும் கிடைத்துள்ளது.

## ஆறாவடு

'எந்த நிலத்தில் இது விளைந்தது?' என்று சேயோன் கேட்கிறான், **சயந்தன்** எழுதிய **ஆறாவடு** புதினத்தை வாசித்தபிறகு. மிக அற்புதமாக வந்திருக்கிறது இப்புனைவு. ஈழத்தமிழத்தேசிய அரசியல் பற்றிய புதினங்கள் ஒரு கைவிரல்களுக்குள் மடிபடக்கூடியன. மு.தளையசிங்கத்தின் **ஒரு தனி வீடு**, அருளரின் **லங்காராணி**, கோவிந்தனின் **புதியதோர் உலகம்**, ஷோபா சக்தியின் **கொரில்லா**, ம் என்ற ஐந்து புதினங்களின் பிறகு வந்திருக்கிறது ஆறாவடு. ஆயினும் சேயோன் இதனையே முதன்மையான நாவல் என்பான். எள்ளல்நடை (Satire) சிற்சிலசமயங்களில் சிறுகாயம் ஏற்படுத்தினாலும் பொறுப்புணர்வுடன் கூடிய புதினமாகப்படுகிறது ஆறாவடு.

இந்தச் சின்னப்பையனில் இத்தனை ஆற்றலா என்று வியந்து மாய்ந்து போகிறான் சேயோன். கெரில்லா, ம் என்ற புதினங்கள் தமிழ்த்தேசிய அரசியலை மறுதலித்தே எழுதப்பட்டன. கபடம், மெல்லிய இழையாக ஊடுருவியிருந்தது இப்புதினங்களில். ஏனைய மூன்றும் தமிழ்த்தேசியத்தை வலியுறுத்துகின்ற போதும் புதியதோர் உலகம் மாத்திரமே கலாநேர்த்தியுடன் வந்தது. ஆனால் சயந்தன், ஆறாவடுவில் நிகழ்த்தும் புனைவு மேற்சொன்ன எந்தப் புதினங்களும் எட்டிப்பிடிக்க முடியாத ஒன்று. இலங்கைக் கடற்கரையில் தொடங்குகின்ற இப் புதினமானது எரித்திரியக் கடற்கரையில் முடிகிறது. போருக்குத் தெரிந்தது ஒன்றே ஒன்று தான். அது சனங்களைத் தின்பது. போர் தின்ற சனங்களின் கதையை உருக்கமாகச் சொல்லியிருக்கிறார் சயந்தன்.

'கணிப்பிற்குரிய கதைஞன் வந்து சேர்ந்தான்' என்று சொல்ல விரும்புகிறான் சேயோன்.

- சேயோன்

# கலந்துரையாடல் நிகழ்வுகள்












டென்மாரக் நாட்டில் வசிக்கு எழுத்தாளரும் "Tamil Nation in Sri Lanka" என்ற நூலை எழுதியவருமான Ron Rideneour கலந்து கொண்ட இரண்டு நிகழ்ச்சிகள் இலண்டனில் நடைபெற்றன. மார்ச் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை Putney Leisure Centre இல் மதிய உணவுடன் நடைபெற்ற கூட்டத்தில், Ron Rideneour சிறப்புரையாற்றினார். Warwick பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் கலாநிதி மிரான்டா அலிசன் அவர்கள் ஈழப்போராட்டத்தில் பெண் போராளிகளின் வகிபாகம் பற்றி உரையாற்றினார்.

மார்ச் 7ம் திகதி புதன்கிழமை மத்திய லண்டன் இந்தியன் வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு பிரித்தானிய தமிழர் பேரவை, சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம், Socialist Resistance ஆகிய அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் கோபி இரத்தினம், தனராஜா வாகீசன், Ron Rideneour ஆகியோர் உரையாற்றினர்.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

MAR 11 SUNDAY

*A public talk with Sadghuru*
*isha presents Inner Engineering Technologies'for wellbeing*
நேரம்: காலை 11:00 மணி முதல்
இடம்: Troxy, 490 Commercial Road, London, E1 OHX
தொடர்புகளுக்கு: +44 (0) 776 556 7347

MAR 17 SATURDAY

*வசந்தம்-2012*
Kokkuvil Hindu College Old Students' Association (UK) நடாத்தும் வசந்தம்-2012
இடம்: Isleworth & Syon School, ridgeway Road, Isleworth, TW7 5LJ
தொடர்புகளுக்கு: 07841522514, 07824333507 , 07740088103

MAR 17 SATURDAY

*Women's day Conference-2012*
'Connecting Girls & Inspiring Futures' hosted by Tamil women development Forum (TWDF) in association with Harrow Faie Trade & African SANG
இடம்: Harrow Council Chambers, Civic Center, Station Road Harrow HA1 2XF
நேரம்: மாலை 2.00 மணி முதல்
தொடர்புகளுக்கு: 0208 546 1560 / 07956 692 180

APRIL 21 SATURDAY

*மகிழும் பூக்கள்*
புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடாத்தும் தென்னிந்தியப் பாடகர்கள் கலந்துகொள்ளும் இசை நிகழ்ச்சி
நேரம்: மாலை 06:30 மணி
இடம்: Watford Collosseum, Rickmansworth Road, Watford, WD17 3JN
தொடர்புகளுக்கு: 07534 284858

# ஜெனீவா வரை...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. அவர்களுக்கு நடமாடும் சுதந்திரம் இருக்கவேண்டும். இதைத்தான் சகல மனிதாபிமான முடையோரும் மனிதாபிமான அமைப்புக்களும் நாகரிக வளர்ச்சியடைந்தவர்களும் எடுத்துக் கூறுகின்றனர். இந்தியாவின் கருத்து வேறு விதமாக இருந்தது. இந்திய பாராளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பன் அவர்கள் கருத்து: சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு பாதுகாப்பிற்காகவே முட்கம்பிகள் போடப்பட்டுள்ளன.

## சனல் – காணொளி தொடர்பான இந்திய விசாரணை

2009 போருக்குப் பின்னர் சனல் - 4 தொலைக்காட்சி இலங்கை போர்க்குற்றம் தொடர்பான முதல் காணொளியை வெளிவிட்டவுடன் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சு அவசர அவசரமாக ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டது. அந்த விசாரணைக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. இலங்கையில் நடந்த போர்க்குற்றத்திற்கு இந்தியாவின் பங்களிப்புத் தொடர்பான காணொளிக் காட்சிப்பதிவுகள் ஏதாவது இருக்கிறதா என்றா இந்தியா அவசரப்பட்டு விசாரணைக்கு உட்பட்டது.

## 2009இல் மனித உரிமை மீறலைப் பாராட்டிய எருமை இந்தியா

2009மே மாதத்தில் இலங்கைப் போர் முடிந்தவுடன் அதற்கு இந்தியா வழங்கிய பங்களிப்பு சரித்திரத்தில் இடம்பெறாமல மூடி மறைக்கப்படலாம் என ஒரு படைத்துறை ஆய்வாளர் எழுதினார். இலங்கையில் அதிபர் மஹிந்த ராஜபக்ச உட்படப் பலர் நாம் இந்தியாவின் போரை நடாத்தி முடித்தோம் என்றும் இந்தியாவின் உதவியின்றி நம்மால் போரை நடாத்தி முடித்திருக்க முடியாது என்றும் தெரிவித்து வருகின்றனர். போர் முடிந்தவுடன் இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை அழைத்து இந்தியா தன்னிடம் இலங்கை போர்க் குற்றம் புரிந்தமைக்கான செய்மதி ஆதாரப் படங்கள் இருப்பதாகக் கூறி இனி நீங்கள் எம் சொற்படி கேட்க வேண்டும் என்று கூறினர். இந்தியாவின் நோக்கம் இலங்கையில் 13வது திருத்தத்தை அமுல் படுத்த இந்தியா சொல்வதை இலங்கை கேட்க வேண்டும் என்பதே. அப்போது இலங்கைப்போரின் போது கொழும்பு டில்லி இடையிலான உரையாடல்களின் ஒலிப்பதிவுகள் தம்மிடம் இருப்பதாகக் கூறிய கோத்தபாய அதை தாம் அம்பலப் படுத்துவோம் என்றார். அதன் பின்னர் இந்தியா அடங்கி விட்டது.

இதன் பின்னர் இலங்கை சொற்படி ஆடிய இந்தியா 2009இல் ஜெனிவாவில் நடந்த மனித உரிமைக் கழகக் கூட்டத் தொடரில் ஐரோப்பிய ஒன்றியம் இலங் கையின் போரின் போது மனித உரிமைகள் மீறியதைக் கண்டிக்கும் தீர்மானத்தை மனித உரிமைக் கழக நாடுகளிடையே கடும் பிரசாரம் செய்து அதை இலங்கைக்குப் பாராட்டும் தீர்மானமாக மாற்றியது. அப்படிச் செய்ததை இலங்கைப் போரின் பொறுப்புக் கூறல் தொடர்பாக அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு பெரிய தவறு எனச் சுட்டிக்காட்டியது.

## தேர்தலுக்கு முன்னர் போரை முடி என்ற இந்தியா

2009இல் போர் ஆகஸ்ட் மாதம் வரை போகும் என இலங்கை படையினர் திட்டமிட்டிருந்தனர். 2009 மே மாதம் இந்தியப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் இலங்கையில் போரை முடிக்க வேண்டும் என இந்தியா இலங்கையை வற்புறுத்தியது. அப்பாவிகள் உயிரிழப்பைப் பற்றிக் கவலைப் படாமல் போரை நடத்த வேண்டும் என்று இந்தியா இலங்கையை வற்புறுத்தியது.

அதற்கான ஆதாரங்கள் இலங்கையிடம் உள்ளன. அவற்றை இலங்கை பகிரங்கப்படுத்தினால் இந்தியா போர்க்குற்றம் புரிந்ததாகக் கொள்ளப்பட வாய்ப்புண்டு. இதை வைத்துக் கொண்டு தான் இலங்கை இந்தியாவைத் தன் எண்ணப்படி ஆட்டிப்படைக்கிறது.

## 2012 ஜெனிவாவிலும் இந்தியா தமிழர்களுக்கு எதிராகவே செயற்படும்

அண்மைக் காலங்களில் இந்தியா இலங்கையின் சில்லறைக் கைக்கூலி போல் செயற்பட்டு வருகிறது. அப்படிப் பட்ட இந்தியாவால் இலங்கைக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைக் கழகத்தில் வாக்களிக்க முடியாது. தமிழ்நாட்டு மக்களின் 'கொந்தளிப்பை' கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் டில்லிக்கு இல்லை. அவை வெறும் கூச்சல்கள் மட்டுமே என்று டில்லி நன்கு அறியும். தேர்தலில் காங்கிரசுக் கட்சி தமிழ்நாட்டில் பெரும் தோல்வியைச் சந்திக்கலாம் என்ற பயம் ஆளும் கட்சிக்கு இல்லை. ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டால் என்ன எதிராகச் செயற்பட்டால் என்ன காங்கிரசுக் கட்சி தமிழ்நாட்டில் தோல்வியடைவது நிச்சயம். தமிழ்நாட்டில் வெற்றி பெற்று வரும் கட்சிக்கு சில மந்திரிப் பதவிகளைக் கொடுத்து அவற்றை கூட்டணியில் இணைத்து காங்கிரசால ஆட்சி அமைக்க முடியும். இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படாவிடில் இந்தியாவின் தமிழர்களுக்கு எதிரான பல குற்றங்கள் அம்பலமாகும்.

## ஆட்சி மாறினால் காட்சி மாறுமா?

உலகெங்கும் தமிழர் வாழும் நாடுகளில் இந்தியக்கைக்கூலிகளாகச் செயற்படும் தமிழர்கள் சிலர் இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு அதைச் சார்ந்து தான் தமிழர்கள் தம் விடுதலைக்காக எதையாவது செய்ய முடியும் என்ற பரப்புரைகளைச் செய்து வருகின்றனர். இந்தியா தமிழர்களுக்குச் செய்யும் துரோகச் செயல்களை அவர்களிடம் எடுத்துச் சொன்னால் இப்போது இருக்கும் ஆட்சி மாறினால் தமிழர்களுக்குச் சாதகமான நிலைப்பாட்டை இந்தியா எடுக்கும் என்று சொல்கின்றனர். இப்போது பெரிய நாடுகள் எதுவும் தமது வெளிநாட்டுக் கொள்கைகளை ஆட்சியாளர்கள் மாறும் போது மாற்றுவது இல்லை. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை அதன் அதிகார மையமான தென்மண்டலத்தில் உள்ள பார்ப்பனர்களே நிர்ணயிக்கின்றனர். இலங்கையின் தமிழர்களின் அவலத்திற்கு அவர்களே காரணம். அவர்கள் ஒரு போதும் தமிழர்கள் உரிமையுடன் வாழ அனுமதிக்கப் போவதில்லை. இந்தியக் கைக்கூலிகள் வைக்கும் இன்னொரு கருத்து தமிழ்நாட்டுத் தமிழர்களின் உணர்வலைக்கு மதிப்பளித்து இந்தியா இலங்கைத் தமிழர்களுக்கு உதவும் என்பதே.

**2009 போருக்குப் பின்னர் சனல் - 4 தொலைக் காட்சி இலங்கை போர்க்குற்றம் தொடர்பான முதல் காணொளியை வெளிவிட்டவுடன் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சு அவசரமாக ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டது. அந்த விசாரணைக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. இந்தியாவின் பங்களிப்புத் தொடர்பான காணொளிக்காட்சிப் பதிவுகள் ஏதாவது இருகிறதா என்று விசாரணைக்கு உட்பட்டது.**

இந்திய வெளியுறவுக் கொள்ளை இந்தியாவின் தேசிய நலனைக் கருத்தில் கொண்டு வகுக்கப்படவேண்டும் ஒரு மாநிலத்தின் மக்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு வகுக்கப் படக் கூடாது என்று தென்மண்டலப் பார்ப்பனர்கள் கருதுகின்றனர். தென்மண்டலப் பார்ப்பனர்கள் இலங்கையில் தமிழர்கள் உரிமை பெறாமல் இருக்க இந்தியத் தேசிய நலன்களையும் பலியிடத் தயாராக இருக்கின்றனர். தமிழர்கள் இனி மாற்றி யோசிக்க வேண்டும்.

# கடிகாரம் ஓடுமுன் ஓடு.......



சாத்திரி
(ஒரு பேப்பர்)

ஊரிலை சின்னவயிசிலை பள்ளிக்கூடத்திலை பாரதிதாசனின்ரை தலைவாரிப் பூச்சூடி உன்னை பாடசாலைக்கு போவென்று சொன்னாள் உன் அன்னை எண்டொரு பாட்டுச் சொல்லித் தருவினம். அது உண்மையிலை பெண்குழந்தையளிற்கான பாட்டு அதையேன் பெடியளிற்கும் படிப்பிச்சவையெண்டு தெரியாது ??..ஆனால் அதிலை ஒரு வரி வரும் கடிகாரம் ஓடுமுன் ஓடு எண்டு. அதற்கான அர்த்தம் அண்டைக்கு எனக்கு உண்மையா விளங்கேல்லை ஆனால் வெளிநாடு வந்தால் பிறகுதான் அதன் உண்மையான அர்த்தம் புரிந்தது இங்கு தமிழாக்களின்ரை நிகழ்வுகளைத் தவிர மற்றையபடி எல்லாமே நேரம்..நேரம்.. நேரம்.. நேரத்தை பிடிக்க ஓடிக்கொண்டிருக்கின்றோம்..

**சீனாக்காரனின்ரை எலெக்றோணிக் மணிக்கூடு ஏன் அடிக்கடி 88:88 நிமிசம் காட்டுதெண்டு யாருக்காவது தெரியுமோ...?**

ஊரிலையெண்டால் வீடுகளிலை வர வேற்பறையிலை மட்டும் ஒரு மணிக்கூடு இருக்கும். அப்பிடி எங்கை வீட்டிலையும் ஊரிலை ஒரு பெரிய மணிக்கூடு ஒண்டு வரவேற்பறையிலை இருந்தது பாக்கிறதுக்கு ஒரு அலுமாரி மாதிரி இருக்கும். ஒரு ஆள்அளவு உயரம். மேலை மணிக்கூடு கீழை தோசைத்தட்டு மாதிரி ஒரு வட்டம் ஆடிக்கொண்டிருக்கும். ஒவ்வொரு நாளும் அதுக்கு சாவி குடுக்கவேணும் நான் சின்னவயசிலை ஒரு கதிரை வைச்சு ஏறித் தான் அதுக்கு சாவி குடுக்கிறனான். ஒவ்வொரு மணித்தியாலமும் அது அடிக்கிற சத்தம் கோயில் மணி அடிச்சமாதிரி இருக்கும். அதை முன்னேறி பாச்சல் நடவடிக்கை நேரம் சந்திரிக்கா அனுப்பின குரங்குகள் உடைச்சு போட்டுதுகள் எண்டு அம்மா கவலையோடை சொன்னா.. இஞ்சை வெளிநாட்டிலை பாத்தமெண்டால் கழிவறையிலை குளியலறையிலை படுக்கையறையிலை வரவேற்பறையிலை எல்லா இடமும் மணிக்கூடுதான். பத்தாததுக்கு கைத்தொலைபேசியிலை கணணியிலை பாக்கிற ரிவியிலை எண்டு நேரம் ஓடிக்கொண்டிருக்கும் காத்தாலை அலாரச்சத்தத் தோடை எழும்பி கழிவறைக்கு போறத்திலையிருந்து பல்லுத்தீட்டிறது குளிக்கிறது (இதுகள் செய்யாதவைக்கு பிரச்சனையில்லை ) உடுப்பு போடுறது எண்டு தொடங்கி வேலைக்குப் போய் வந்து இரவு ரி.வி பாக்கிறது. குடும்ப காரர் எண்டால் பிள்ளையளோடை குடும்பத்தோடை மினக்கெடுறது. ஏன் கணவன் மனைவி உறவு கூட எல்லாத்தையுமே நேரம் பாத்துப் பாத்துத் தான் செய்யவேண்டியிருக்கும்.

ஒரு நாள் இப்பிடித்தான் நான் தண்ணியடிச்சிட்டு நல்லாயிருக்கெண்டு பொரிச்ச மிளகாயை கனக்க அள்ளித் திண்டிட்டன் அடுத்தநாள் காத்தாலை கழிவறைக்குள்ளை அஞ்சு நிமிசம் கூடுதலாயிருக்கவேண்டி வந்திட்டு பிறகு அந்த அஞ்சு நிமிசத்தை குளிக்கேக்குள்ளை அவசர அவசரமாய் சவுக்காரம் போடாமல் குளிச்சு நிவர்த்தி பண்ணிட்டன். ஐரோப்பாவிலை ஒருநாள் ஞாயிறு மட்டும் அலாரசத்தம் இல்லாமல் நிம்மதியாய் விரும்பின நேரத்திற்கு எழும்பி விரும்பினதை செய்யலாம். ஆனால் இந்த லண்டனிலை இருக்கிறவையள் போன பிறப்பிலை பாவம் செய்த பிறவியள். அதுகளிற்கு ஞாயிறும் நிம்மதியில்லை கிழைமையிலை ஏழு நாளும் ஓட்டம் தான். இப்பிடித்தான் ஒருக்கால் லண்டனிலை உள்ள என்ரை சினேகிதன் ஒருத்தனுக்கு பிறந்தநாள் அவனுக்கு வாழ்த்தும் சொல்லிட்டு. கொஞ்சம் ஊர்கதையளும் கதைப்பம் எண்டு இரவு போனடிச்சன். போனை எடுத்தவன் மச்சான் ஓடிக்கொண்டிருக்கிறன் கொஞ்சம் பொறுத்து எடு எண்டான். கார் ஓடிக்கொண்டிருக்கிறான் எண்டு விளங்கிச்சிது. கொஞ்சத்தாலை திருப்ப அடிச்சன் அவனின்ரை மனிசி எடுத்து அவர் இப்பதான் வந்தவர் குளிக்கிறார் கொஞ்சத்தாலை அடியுங்கோ எண்டா. திரும்ப ஒரு அரை மணித்தியாலம் கழிச்சு எடுத்தன். அவன் போனை எடுத்து மச்சான் என்ன அலு....வ்......வ்.....வ்...வல் எண்டான். சாப்பிட்டுக்கொண்டிருந்தான். எண்டு விளங்கிச்சுது அவசரமில்லை ஆறுதலாய் அடிக்கிறன் எண்டிட்டு நான் நித்திரையாய் போயிட்டன்.

பிறகு அடுத்தநாள் அவனுக்கு வாழ்த்தாவது எஸ்.எம்.எஸ் அனுப்புவம் எண்டு நினைச்சு உனக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் எண்டதை முழுசா எழுத எனக்கு நேரமில்லை.வேலைக்கு போற நேரம் கார் சிவப்பு சிக்னல்லை நிக்கிற நேரமாய் பாத்து அவசரமாய் W...U... H....B.... DAY எண்டு வாழ்த்து சொல்லி ஒரு எஸ் எம்.எஸ் போட்டிட்டு வேலைக்குபோயிட்டன். அதை அவன் வாசிச்சு விளங்கி T.K.S எண்டு பதிலும் போட்டிருந்தான்.

இது இப்பிடி அன்றாட வாழ்க்கை போய்க் கொண்டிருக்க என்னை தினமும் நித்திரையாலை எழுப்பிற என்ரை அலார மணிக்கூடு ஒருநாள் பழுதாய் போயிட்டுது. பதினைஞ்சு வருசத்துக்கு முதல் பாரிசிலை ஒரு அறையிலை நாலு தனிக்கட்டையள் (பெடியள்) சேந்து கூட்டுக்குடும்பமாய் இருக்கேக்குள்ளை வாங்கினது. பிறகு ஒவ்வொருத்தராய் கலியணம் கட்டி தனிக்குடித்தனம் போய் அறையிலை இருந்த ஒவ்வொரு பொருளாய் பாகப் பிரிவினை செய்யேக்குள்ளை நான் இந்த அலார மணிக்கூட்டை தூக்கிக் கொண்டு வந்திட்டன். காரணம் இது நான் தான் தேடி வாங்கினனான். ஓடுற டிக்..டிக்.. சத்தம் கேக்காது மணிக்கூடு ஓடுற சத்தம் கேட்டால் எனக்கு நித்திரை வராது எரிச்சல்தான் வரும் ஆனால் அது அலாரம் அடிக்கிற சத்தம் அந்த ஏரியாவுக்கே கேட்கும். பதினைஞ்சு வருசம் ஓடி ஓய்ந்து போன மணிக்கூட்டை திருத்தலாம் எண்டு நான் கடை தேடி அலைய மனிசி சொல்லிச்சிது உந்த பழசை கொண்டு அலையாதையுங்கோ இப்பதானே விதம் விதமாய் புது எலெக்றோனிக் அலாம் மணிக்கூடுகள் வாங்கலாம். சத்தமும் வராது உதை குப்பையிலை எறியுங்கோ நான் புதுசு வாங்கியாறன் எண்டாள்.

பழசுகளை எறியிறதெண்டால் உன்னையும் தான் எறியவேணும் எண்டு முணு முணுத்தபடி கவலையோடை அதை குப்பை வாளிக்குள்ளை போட்டிட்டு நான் மணிக்கூடு வாங்க வெளிக்கிட திரும்பவும் மனிசின்ரை சத்தம் "எங்கை மணிக்கூடு வாங்கவே போறியள் நீங்கள் போனால் நிண்டு நிதானிச்சு வடிவாய் பாத்து ஒண்டையும் வாங்கமாட்டியள் கையிலை அம்பிட்டதை தூக்கிக் கொண்டு வந்துடுவியள் பக்கத்திலை சீனா சாமான் கடையொண்டு இருக்கு நான் போய் நல்லதாய் பாத்து வாங்கியாறன்" எண்டாள். எடியேய் நிண்டு நிதானிச்சு எல்லாத்தையும் செய்யிறதெண்டால் உன்னையுமல்லோ செய்திருக்கமாட்டன் எண்டு சத்தமாவே சொன்னன். மசினி முறைச்சு பாத்திட்டு போயிட்டுது.... போய் சீனாக் கடையிலை எலெக்றோனிக் மணிக்கூடு ஒண்டை வாங்கியந்து தந்திட்டு இந்தாங்கோ எதுவும் உருப்படியாய் செய்யத் தெரியாது நேரத்தையாவது ஒழுங்கா பிடிச்சு விடுங்கோ என்று,விட்டு போய்விட்டாள் எனக்கென்னவோ அது உள் குத்துமாதிரி தெரிஞ்சது. ஆனாலும் சரி எதையோ நான் ஒழுங்கா பிடிச்சு விடேல்லை போலை கிடக்கு எண்டு நினைச்சபடி பேசாமல் மணிக்கூட்டு பெட்டியை பிரிச்சன் . மணிக்கூடு பாவிப்பது எப்படி எண்டொரு விளக்கக் கடுதாசி இருந்திச்சிது. ஊரிலை முத்தத்திலை விழுகிற நிழலை வைச்சே எத்தனை மணி எண்டு சரியா சொல்லுற எங்களுக்கு இவங்கள் மணிக்கூடு எப்பிடி பாவிக்கிறதெண்டு சொல்லித்தாறாங்கள் எண்டு கோவத்திலை அதை எடுத்து முதல் வேலையா கிழிச்சு குப்பையிலை போட்டிட்டு வந்து மணிக்கூட்டை எடுத்து கறண்டை குடுத்தன். மணிக்கூடு 88 மணி88 நிமிசம் எண்டு காட்டிச்சிது. சீனாக்கடைக்காரன் மனிசியை பேய்க்காட்டிப் போட்டான் எண்டு விளங்கிச்சிது. மனிசிட்டை எடியேய் பாத்தியோ அப்பவும் சொன்னனான் சீனாக் கடைக்காரனிட்டை போகாதையெண்டு அவன் உன்னை சுத்திப் போட்டான் வந்துபார் மணிக்கூடு 88:88 எண்டு காட்டுது எண்டன் . ஐயோ அது எலெக்றோணிக் மணிக்கூடு அப்பிடித்தான் காட்டும் அதுக்குத் தான் நேரத்தை பிடிச்சு விடச்சொன்னனான் எண்டு பதில் வந்தது .

சாதாரணமாய் உலகம் முழுக்க 24 மணித்தியாலமும் 60 நிமிசமும்தானே அதெப்பிடி சீனாக்காரனின்ரை மணிக்கூடு மட்டும் கூடுதலாய் 88.88 நிமிசம் காட்டும் .மணிக்கூடு எப்பிடி பாக்கிறதெண்ட செய்முறை கடிதாசியை வேறை கிழிச்செறிஞ்சு போட்டன் மணிக்கூட்டிலைவேறை நாலைஞ்சு பட்டின் கிடக்கு எப்பிடி நேரம் பிடிக்கிறதெண்டு புலம்பிக் கொண்டிருக்க அதுவரைக்கும் எங்கடை சண்டையை கண்டும் காணாதபடி கணணியிலை விளையாடிக்கொண்டிருந்த மகள் எழும்பிவந்து என்னட்டை மணிக்கூட்டை பிடுங்கி நேரத்தை பிடிச்சு விட்டிட்டு அப்பா காத்தாலை எத்தனை மணிக்கு அலாம் வேணுமெண்டாள். ஆறு மணிக்கெண்டன். அலார சத்தம் மியூசிக் வேணுமா இல்லை றேடியோ ஏதாவது வேணுமா எண்டாள்.... ஓ அதெல்லாம் இருக்கா சரி காலங்காத்தாலை எழும்பேக்குள்ளை எங்களை சுத்தி என்ன நடக்கிதெண்டு அறியிறது நல்லதுதானே அதாலை 24 மணி நேர செய்தி றேடியோவிலை விடு எண்டன். எல்லாம் சரி செய்திட்டு இனி இரண்டு பேரும் சத்தம் போடக்கூடாது எண்டிட்டு போயிட்டாள்.

**ஐரோப்பாவிலை ஒருநாள் ஞாயிறு மட்டும் அலாரசத்தம் இல்லாமல் நிம்மதியாய் விரும்பின நேரத்திற்கு எழும்பி விரும்பினதை செய்யலாம். அனால் இந்த லண்டனிலை இருக்கிறவையள் போன பிறப்பிலை பாவம் செய்த பிறவியள். அதுகளிற்கு ஞாயிறும் நிம்மதியில்லை கிழைமையிலை ஏழு நாளும் ஓட்டம் தான்.**

அடுத்தநாள் காலை ஆறு மணிக்கு அலாரம் றேடியோ வேலை செய்தது... துருக்கியில் நிலநடுக்கம் பலநூறுபேர் பலி ஆயிரக்கணக்கானோரை காணவில்லை. தாய்லாந்தில் மழை வெள்ளம். இதுவரை இருநூறுபேர் பலி. ஆப்கானிஸ்தானில் தற்கொலைக் குண்டு வெடிப்பு முப்பது பேர் பலி இருபது பேர் காயம் எண்டு தொடர.. இதென்ன காலங்காத்தாலை ஒரே இழவு எண்டு றேடியோ மணிக்கூட்டு வயரை இழுத்து பிடிங்கிப் போட்டு வேலைக்கு தயாரானேன்.

கடைசியாய் ஒரு கேள்வி. சீனாக்காரனின்ரை எலெக்றோணிக் மணிக்கூடு ஏன் அடிக்கடி 88:88 நிமிசம் காட்டுதெண்டு யாருக்காவது தெரியுமோ... ?



# நாடகத் துறையில் நம்மவர்கள்

இரவு ஏழு மணிக்கு தொடங்கும் நாடகங்கள் பத்து மணிக்கு படுக்கப்போகும் வரை தொடர்ந்து ஒளிபரப்பாவது, இங்குள்ள தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சி நிரல். இதில் எதைப் பார்ப்பது, எதை விடுவது என்ற பிரச்சனை வேறு. கணவனுக்குப் பிடித்தது மனைவிக்குப் பிடிக்காது. மனைவிக்குப் பிடித்தது அம்மாவுக்குப் பிடிக்காது. இவர்களுக்கிடையே சமரசம் காண முடியாது போனாலும், பிடித்ததோ பிடிக்கவில்லையோ பேசாமல் பார்த்துத் தொலைப்பதே வேலையாகிப் போய்விட்டது தற்போதைய பொழுதுபோக்கு.

நாடகங்களின் கதையமைப்பு, நடிப்பு, கதாபாத்திரங்களின் பிரதிபலிப்பு தராதரம் இதைப் பற்றியெல்லாம் எவரும் அலட்டிக் கொள்வதில்லை. மதுரையில் முத்தமிழ் வளர்த்த சங்கம் இன்று இல்லாது போனாலும், இயல், இசை, நாடகம் என்ற பணியில் ஒவ்வொருத்தரும் தனக்குத் தனக்கு தெரிந்த வழியில் நடைபோடத்தான் செய்கிறார்கள். தொலைக்காட்சிகளை நிரப்பும் நாடகங்கள் மலிந்துவிட்ட இந்த காலகட்டத்தில், மேடை நாடகங்களைக் காணத் துடிப்பவர்களும் இல்லாமல் இல்லை. அவர்களுடைய பசி போக்கவும், இந்நாடகத் துறை, மேடை நாடகமாக அரங்கேறவும் ஒரு சில அமைப்புகளே தமிழ் நாட்டிலும் சரி, தாயகத்திலும் சரி இயங்கிவருவது நாமறிந்த செய்தி.

தாயகத்தில் விடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்ற காலத்தில், தமிழ் மக்களின் பொழுது போக்கு சாதனமாகவும், மக்களின் விடுதலை உணர்ச்சியை பிரதிபலிக்கும் தளமாகவும் மேடை நாடகங்கள் அரங்கேறின. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், இம்மேடை நாடகங்களை ஊக்குவித்தன. எனினும், அங்கு நிலவிய போர்ச்சூழல், அதன்பின் இடம்பெற்ற மக்களின் இடம்பெயர்வு, இயல்பு வாழ்க்கையை அபகரித்த சூழ்நிலையில் மேடைநாடகம் மெல்ல மெல்ல அழிந்துவருவதை அறிகிறோம்.

இதற்கு விதிவிலக்காக, புலம்பெயர் நாடுகளில் மேடை நாடகங்கள் அரங்கேறுவதை, கடந்த ஞாயிற்றுக்கிழமை 19.02.2012ல் ஜி.ரி.வி. யின் 'பேசாத பொருட்கள்' என்ற நிகழ்ச்சியில் அரங்கேறிய திரு.க.பாலேந்திராவின் நேர்காணல் நிரூபித்தது. தமிழ் அவைக்காற்று கழகத்தை கடந்த பல ஆண்டுகளாக, பிரித்தானியாவிலும், ஐரோப்பியநாடுகளிலும் அயராது அரங்கேற்றிவரும் இவருக்கும், இவரது துணைவி ஆனந்தராணிக்கும் எமது வாழ்த்துக்கள்.

இலங்கை வானொலியில் ஆரம்பித்து, புலம்பெயர்ந்த நாடுகளில் பவனிவரும் இவர்களுடைய நாடகங்கள் நிறைய வரவேற்பையும், நாடகப்பிரியர்களையும், அபிமானிகளையும் கவர்ந்தது இக்கழகத்தின் சாதனையாகும். வளர்க தமிழ் நாடகம்.

# புற்றுநோய் மரணங்களில் சரிவு

உலகில் நோய்கள்தான் எத்தனை. அதிலும் பரவலாகப் பேசப்படும் புற்றுநோய்கள் பல விதம். நாளாந்தம் சம்பவிக்கும் மரணங்களில் புற்றுநோயால் மரணமடைந்தோர் தொகைதான் அதிகம். 1970ம் ஆண்டு தொடக்கம் 2009 வரை, ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்ற மரணங்களை ஆராய்ந்த Chelola Vecchia என்ற ஆராய்ச்சியாளர் தனது ஆய்வை ஐரோப்பிய மக்களின் சனத்தொகையின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆராய்ந்துள்ளனர்.

இவர்களுடைய ஆய்வின் அறிக்கையின்படி, 2012ம் ஆண்டில் புற்றுநோயால் எதிர்நோக்கும் மரணங்கள் அதிகமாக இருப்பதற்கு, வயது முதிர்ச்சி பிரதானமான காரணமாக அமையலாம் எனக் கூறியுள்ளனர். எனினும் 2007 இடம்பெற்ற மரணங்களோடு ஒப்பிடும்போது ஆண்களில் 10 விகிதமும் பெண்களில் 7 விகிதமும் சரிவை எதிர்பார்க்க முடியுமெனத் தெரிவித்துள்ளனர்.

மேற்கூறிய சரிவுக்கு, புற்றுநோய்களைத் தடுக்க உதவும், மருத்துவ வசதிகளும், இவற்றைப் பின்பற்ற நோயாளர்கள் தரும் ஒத்துழைப்புமே முக்கிய காரணமென ஆய்வாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். குறிப்பாக புகைத்தல் பழக்கத்தை மெல்ல மெல்ல கைவிட்டு விலகிய மக்களின் ஒத்துழைப்புக்கள், மரணிக்கும் தொகையை வெகுவாகக் குறைத்துவிட்டதாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Valerie Beral தன்னுடைய ஆய்வில் தெரிவித்துள்ளார்.

இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும், ஒரு நாள் மரணிக்கப்போவது இயற்கையின் நியதி. இருப்பினும் இடையில் ஏற்படும் துர்ப்பழக்கங்களால் மரணமடைவது எப்படி நியாயமாகும்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

புற்றுநோயைத் தடுக்கும் வழிகளை மருத்துவர்கள் தவறாது கூறும்போது தயவுசெய்து காது கொடுத்து கேளுங்கள். நிச்சயம் புற்றுநோய்களால் ஏற்படும் மரணங்களைத் தடுக்கலாம். நம்புங்கள்.

# மின்சார உற்பத்தியில் புரட்சி

சூரிய ஒளியின்றி உலகம் எப்படி இயங்காதோ, அதேபோல் மின்சாரசக்தியின்றி இயங்கக் கூடிய இயந்திரங்கள் மிக அரிதே. இயந்திரமயமான இந்த உலகில் ஒரு சில நிமிடங்கள் மின்சாரம் நின்று போனால்கூட, செய்வதறியாமல் தத்தளிக்கும் நவீன நகரங்கள் போக, மின்சாரத்தையே கண்டு கொள்ளாத கிராமங்கள் இன்னும் இந்தியாவில் இருப்பது அதிசயமாகத் தெரியவில்லையா! ஆனால் அதுதான் உண்மை.

2011ம் ஆண்டுக்குரிய சர்வதேசத்தின் சக்தி தொடர்பான ஆய்வு அறிக்கையின்படி இந்தியாவின் சனத்தொகையில் கால்பங்கு விகிதத்தினர், மின்சார சக்தியை அணுகக்கூட வாய்ப்பின்றி இருப்பதைத் தெரிவித்துள்ளனர்.

தேசிய அளவில் மின்சாரத்தைப் பாவிக்கும் வீடுகள், தொழிற்சாலைகள் கூட அடிக்கடி மின்சாரத் தடையினால் அவதிப்படுவது அன்றாடம் கிடைக்கும் செய்திகள். இவர்கள் பாவிக்கும் மின்சாரம், அனல் மின்நிலையங்கள் வாயிலாகவும், டீசல் எரிபொருளினால் இயங்கும் ஜெனரேற்றர் மூலமும் கிடைக்கப் பெறுவது கூடுதலான வழிமுறையாகும்.

இதில் உள்ள கெடுதியென்னவென்றால், டீசலை எரிக்க எரிக்க கார்பன்டையொக்சைட்டும் தாராளமாக உற்பத்தியாகி, சூழலை மாசுபடுத்துவதோடு மக்களின் சுகாதாரத்தையும் வெகுவாகப் பாதிப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இந்தப் பிரச்சனைகளிலிருந்து விடுபடவேண்டுமாயின் சூரியசக்தியால் உற்பத்தியாகும் மின்சாரமே மிகச்சிறந்த வழி என்பதை ஆராய்ச்சியாளர்கள் உணர்ந்துள்ளனர். அதிலும் ஒரு சிக்கல் என்னவெனில், சூரிய ஒளியைக் கிரகிக்கும் கட்டங்கள் தயாரிப்பதில் கூடுதலான செலவு ஏற்படுவதாக BNEF என்ற நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், 2011ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சட்டங்களின் விலை 50 விழுக்காடு சரிந்துவிட்டதாக அறியப்படுகிறது. தற்போதைய சட்டங்களின் விலையை 2008ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் விகிதாசாரப்படி கால் பங்காக கணிக்கலாமென நம்புகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தளவில், கரியால் எரித்து பெறப்படும் மின்சாரத்துக்கும் டீசல் எரிபொருளால் எரித்து உற்பத்தியாகும் மின்சாரத்துக்கும் செலவு செய்யும் பணத்தைவிட, சூரிய சக்தியால் உற்பத்தியாகும் மின்சாரம் அதிக இலாபகரமானதும் சுகாதாரத்துக்கு நன்மையுமானதாக கருதப்படுகிறது. எனவே 2021ம் ஆண்டளவில், 20,000 மெகாவெட்டர் மின்சாரத்தை சூரியசக்தியால் உற்பத்தி செய்ய புரட்சிகரமான ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு உதவும் வகையில், சூரிய ஒளியைக் கிரகிக்கும் சட்டங்களை குறைந்த விலையில் விற்பனை செய்ய, உலகளவில் மிகப் பிரபல்யமடைந்துள்ள SUNTECH நிறுவனம் முன்வந்துள்ளது.

ஆசிய நாடுகளும் இவர்களுடைய உற்பத்தியை வரவேற்பார்கள் என நம்பலாம்.ஒளி பரவட்டும்.

# 'We Tamils still..

(From Page 13)

...South Africa and its leaders like Nelson Mandela and Archbishop Tutu have gained a unique name especially among the non-aligned nations for their valuable help to smaller nations which are still struggling.

*• How do you compare the report of the UN Panel of Experts with the report of the Sri Lankan government's Lessons Learnt and Reconciliation Commission (LLRC)?*

There can be no true comparison between the two. The UN Panel Report stands out for its independence, international composition of authors, and the free and open manner in which objective evidence was collected and the right advisory manner it was written to help resolving the conflict and war on the basis of truth, justice and accountability.

But the LLRC is the report of a Commission, appointed later in the midst of cries for accountability, by the President himself – the prime culprit – who got former government servants like the Attorney general to study the matter without probing any crimes with respect to the war, but to collect lessons from looking into a limited period of the conflict.

*• What is your expectations from the 19th Sessions of the UNHRC?*

From my experience of how resolutions are passed in the UNHRC sessions, I do not expect much out of these Sessions. In May 2009 all the nations consented and converged into helping Sri Lanka with finance and weapons to crush, even with questionable methods and weapons, the LTTE leadership and the 40,000 civilians at Mullivaikal.

Soon afterwards these nations, realising foul-play during the last stages of war on the part of the fighting forces, brought a resolution against Sri Lanka questioning alleged criminal activities. But Sri Lanka took a position with Russia, China and anti-western forces to defeat the western world. The western world was humiliated and defeated. But we Tamils have only one position- the position of Truth and Justice.

Hence we go on with our struggle watching and supporting new attempts in our favour however little they may be.

Our desired objective is that the UNHRC tables the UN Panel Report for discussion and calls for an independent international investigation of war crimes by both sides of the conflict.

Sri Lanka does not want to face the whole truth nor does it want to implement its own Report in full. Only international pressure can help resolve the conflict in Sri Lanka. We will continue to question the conscience of the international community for justice.

*• What is your future course of action towards seeking justice for the Tamils of Sri Lanka?*

The Tamil Struggle is born out of the collective conscience of a people, oppressed and denied their basic human rights. It is independent of the man-made structures for security, governance, world-order etc. It is based on divine values of truth and justice and will go on beyond the walls of institutions, crying out, and hurting the conscience of the powers that be.

# இலவு காத்த...

என்று ஒரு தேசம் தோன்றாதா? என்ற நப்பாசையுடனேயே பலர் வாழ்ந்து மடிந்தும் விட்டார்கள். நமது வாழ்க்கையும் இவ்வாறே முடிந்து விடுமோ தெரியவில்லை.

ஓர் சிறிய சுதந்திரமான நிர்வாக அலகொன்றினுள் எமது விவகாரங்களை நாமே கவனித்துக் கொண்டு பிறருக்கு எந்த தொந்தரவோ பிரச்சனைகளோ கொடுக்காமல் மகிழ்வோடு வாழ எமக்குக் கொடுத்து வைக்கவில்லை. இந்தச் சிறிய கோரிக்கையைத்தன்னும் நிறைவேற்றி வைக்க ஐநா போன்ற அமைப்புகள் முன்வருவதாயில்லை. யூதர்களுக்கெனவோர் தனி நாட்டை அமைத்துக்கொடுத்த உலகால், கணிசமான தம் உறவுகளை இராணுவ ஒடுக்குமுறைக்குப் பலியாக்கிவிட்டுத் தவிக்கும் ஈழத் தமிழர்களுக்கு ஓர் சிறிய சுதந்திரமான நிர்வாக அலகொன்றைத்தன்னும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. கேட்கப் போனால் மிரட்டல் அடியுதை என்று ஆகிவிட்டது தமிழர் வாழ்வு. எமக்கு நேர்ந்த கொடுமைகளை ஐ.நா விடம் எடுத்துச் சொல்லவே பயப்படுமளவுக்கு அரசியலில் அவல வாழ்வு வாழ்கிறோம். பிற நாடுகள் தமிழர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டுமென்று பிரேரணை நிறைவேற்றினால் இனக் கலவரத்தைத் தூண்டுவோம், தமிழர்களைக் கொன்று குவிப்போம் என்ற தொனியில் சிங்கள இனவாதக் கட்சிகள் கொக்கரிக்கின்றன.

இலங்கைக்கு எதிராக இந்தமுறை கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானம், ஏதோவொரு வகையில் அந்நாட்டுக்கு நெருக்குவாரத்தைக் கொடுத்து எமது தாயகத்தை விட்டுக்கொடுத்து விட வைத்துவிடும் என்ற நப்பாசையில் 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்...' என்ற கவிஞர் காசியண்ணனின் பாடலை ஓங்கி ஒலித்தபடி இலவு காத்த கிளிகளாயக் காத்திருக்கிறோம். இந்த மாதத்தின் இறுதிப் பகுதிக்குள் உலகம் எமக்காக என்ன செய்யப்போகிறது என்பது ஓரளவு தெரிந்துவிடும். அதுவரை பொறுத்திருப்போம்.

தொடருவம்...

## புன்னகைக்கும் ஒரு பெண்ணே...!

இஸ்ரேல் இருப்புக்காய் அனுப்பியது
கிபீரும் ஆட்லறியும்....
இந்தியா இரகசியமாய் அனுப்பியது
மிக்கும் மிரண்டாவும்....
அமெரிக்கா அண்டப்புளுகுக்காய்
அனுப்பியது பெல்லும் கிறீன்பரேட்டும்
ரஷ்சியா டொலருக்காய் அனுப்பியது
தரையில் தாங்கியும் ஆகாயத் தாங்கியும்
சீனா சிங்களத்தோடு உறவுக்காய்
அனுப்பியது எப் 7ம் ரி 56 உம்...
பாகிஸ்தான் பகட்டுக்காய் பரிசளித்தது
மல்டிபரலும் பல்டி அடியும்....
சிம்பாவே சிம்பிளாய் அனுப்பியது
சிணுங்க ஒரு ஆயுதக்கப்பல்

இன்னும்
விட்டது குறையாய் தொட்டது
குறையாய்...
யார் யாரோ எல்லாம்
ஆயுத வியாபாரச் சந்தை விரித்தார்
எங்கள் அன்னை பூமியின்
அழிவுகளின் மேல்....!

இத்தனைக்கும் சாட்சியாய்
இதோ அவள்....
இருந்தாலும் முகத்தில் ஒரு புன்னகை
சொந்தக் கருவறை பிரசவித்த
வேங்கைகளின் வீரத்தால்
எதிரியின் நிலைகுலைவுக்காய்
எழுந்த சூறாவளியிலும்– அவள்
விடுதலைக் காற்றை
சுவாசித்ததாலோ என்னவோ....!

நெடுக்காலபோவான்-யாழ்நீ

# மீண்டும் ஓர் புதிய அறிமுகம்.....!!

# Niru Brand Tamarind Paste!!!

புளி விதைகள் முழுமையாக நீக்கப்பட்டது...
நீர் விட்டுக்கரைக்க வேண்டிய அவசியமில்லை...
இலகுவான சமையல் தேவைகளுக்கு மிக உகந்தது...




**தரம், சுவை என்றென்றும்!!!**

*இப்போது உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கின்றன...*

Imported & Marketed By
**NIRU EUROPE LTD**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP

Niru BRAND®

மேலதிக விபரங்களுக்கு
**Tel : 020 8640 8228**
Email : sales@niru.co.uk

Quality you can taste

# கூட்டமைப்பின் ஜெனிவா பயண சர்ச்சையும் அதனையொட்டிய உளவியல் போரும் அரசியல் சதியும்!

*மௌலி*
(ஒரு பேப்பருக்காக)

ஆயுதப் போர் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில், தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் காத்திரமானதும் வலுமிக்கதுமான அரசியல் நடவடிக்கைகளை முறியடிக்கவென இந்திய -சீன - சிறீலங்கா உளவு நிறுவனங்களின் வழி நடத்தலில் பல அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகள் இருக்கும் என்பது நாம் எதிர்பார்க்க கூடியதே. அவர்களின் நடவடிக்கைகள் பலவேறு வழிகளில் இருக்கும். அவற்றில் முக்கியமான இரண்டை இங்கு குறிப்பிடலாம்.

ஒன்று சிறிலங்கா இராசதந்திரி தமரா குணநாயகம் போன்றவர்களால் நடாத்தப்படும் நேரடியான பிரச்சார நடவடிக்கைகள். இரண்டாவதும், மிக முக்கியமானதுமான 'உள்ளிருந்து பொறுத்த நேரத்தில் கவிழ்க்கும்' சதி வேலைகள்.இங்கு நாம் குறிப்பிடும் 'உள்ளிருந்து பொறுத்த நேரத்தில் கவிழ்க்கும்' வேலை என்பது எந்த சுதந்திரப் போரிலும் இருக்கத்தான் செய்யும். இதனை பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். இதில் முக்கியமான இரண்டு பிரிவுகளில் சம்பந்தன் சுமந்திரன்-ராஜபக்சே கூட்டு, உருத்திரகுமாரனின் உட்கட்டுமான அணி ஆகியவை செயற்படுகின்றன எனக் கருதலாம்.

பிழையான ஆனால் போராட்டத்துக்கு உகந்தது போன்ற மாயத் தோற்றமுடைய 'கவர்ச்சிகரமான' திசை திருப்பல்களில் தமிழீழ ஆர்வ சக்திகளை ஓடவைத்தல். இதனால் பிளவுகளையும் விரக்தியையும் ஏற்படுத்துதல்.

தமிழீழ விடுதலைக்கு அவசியமான காரியங்களை மிக மிகத் தீவிர ஆதரவாளர் போன்ற வேசத்துடன் கையகப்படுத்துவதன் மூலம் அதனைவேறொருவரும்செயல்படுத்த முடியாதவாறு இறுதிவரை தோற்கடித்தல் அல்லது இறுதியில் கைவிடுதல்.

இந்த இரண்டுவகையான அணுகுமுறைகள் கையாளப்படுகின்றன, இப்படி இருக்கவே இருக்காது என்று எவரும் மறுக்க முடியாது. மறுப்பவர்கள் அரசியல் மூடர்களாக அல்லது கூட நின்று கடைசியில் கவிழ்க்கிற கோஷ்டியைச் சார்ந்தவர்களாக மட்டுமே இருக்க முடியும் இச்சக்திகளை அடையாளம் காண்பது என்பது எதிரியை அடையாளம் காண்பதை விட முக்கியமானது எனக் கருதுகின்றேன். இவர்களையும் 'பாதுகாப்பு பட்டி பழுதடைந்து இருக்கலாம்' எனக் கருதப்படும் எறிகுண்டையும் ஒரே வகையாக கையாளப்பட வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா பயண இரத்து தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் சுமந்திரன் முதல் பல்வேறுதரப்பினராலும் வெளியிடப்படுகின்றது. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவா போயிருக்க வேண்டும் என்பாரும் போயிருக்க கூடாது என்போரும் . ஜெனிவாவில் ஒன்றும் நடக்கப் போவதில்லை எல்லாம் ஒண்டுதான் என்போரும் என மூன்று பெரும் பிரிவுகள் உண்டு .

இந்த மூன்று பிரிவுகளை ஏற்படுத்தி தமிழ் மக்களிடையே குழப்பத்தை விளைவிப்பதை மையமாக கொண்டதே சம்பந்தன்-சுமந்திரன்-ராஜபக்சே குழுவின் நோக்கமாக இருக்கலாம் . இந்தச் சதியில் ஏறத்தாள எல்லா ஊடகங்களும், அரசியல் வாதிகளும் , விமர்சகர்களும் விழுந்திருப்பதாகவே கருத இடமுண்டு. காரணம் எல்லோரும் குழப்ப நிலையை பற்றி பேசுகின்றனர். இந்த நிலைக்கு தீர்வு என்ன என்பது பற்றி பேசவில்லை. (சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட ) இதுதான் குழப்ப சக்திகளின் அடிப்படை இலக்கு. அதில் அவர்கள் வெற்றி கண்டிருப்பதாகவே தெரின்றது. இந்த குழப்ப சக்திகளின் ஒரே இலக்கு தமிழ் மக்கள் சார்பாக 'சுயாதீன விசாரணையை வலியுறுத்தி உத்தியோக பூர்வ கோரிக்கை ஒன்று தமிழ் மக்கள் சார்பில் சர்வதேச அரங்கிலோ அல்லது ஜெனீவா மனித உரிமைச் சபையிலோ அல்லது வேறெங்குமோ வைக்கப் படுவதினைத் தடுப்பதே ஆகும் . அப்பொழுதுதான் சிறீலங்காவுக்கு எதிராக மேற்குலகம் கொண்டுவரும் சர்வதேச விசாரணைப் பொறி என்ற பிரச்சாரம் அர்த்தமுள்ளதாக இருக்கும். ஜெனிவாவுக்கு செல்வோம், சர்வதேச தலையீடே ஒரே வழி என அறிவித்ததன் மூலம் சம்பந்தன்-சுமந்திரன்-ராஜபக்சே முக்கூட்டு ஒரு விடயத்தினை உறுதி செய்துகொண்டார்கள். அது என்னவென்றால் தமிழ் மக்கள் சார்பாக வேறெவரும் ஜெனிவா செல்வதற்கு எந்த ஏற்பாடுகளும் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்து கொண்டார்கள். ஜெனிவா பயணமாவதற்கு பயணச் சீட்டுக்கள் முன் பதிவு செய்யப்பட்டதாக உறுதிப்படுத்த முடியவில்லை ஜெனீவா செல்வது என அறிவித்த நாளில் இருந்தே அங்கு செல்வதில்லை என்ற திட்டத்துடனேயே இருந்திருக்கின்றார்கள் என்றே கருத இடமுண்டு. இங்கே தான் உளவியல் போரின் உத்வேகம் மேலும் வெளியாகின்றது. மே 2009 காலப் பகுதியை எடுத்துப் பார்த்தால் இதே நடைமுறையை நாம் காணலாம். மேற்குலக பிரச்சாரத்துக்கு என கஜேந்திரகுமார், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் ஆகியோரை அனுப்பி விட்டு இந்தியாவுக்கு அடிக்கடி சென்று வந்த சம்பந்தன் அணி இந்தியாவுடன் இணைந்து காரியங்களை நடாத்திக் கொண்டிருந்தார்கள் என்பதே பலருடைய ஊகம். இதற்கு சிகரம் வைத்தாற்போல மேற்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்கள் பின்னர் கூட்டமைப்பிலிருந்து விலக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவர்களில் சுரேஷ் பிரேமச் சந்திரன் சம்பந்தன் அணியுடன் இணைந்து பொய் உரைக்க தயங்காதவராகவும் இருந்து வருவதால் அவர் இன்று வரை சம்பந்தனின் போக்குபிடிக்காது விடினும் கதிரையை விட்டு வெளியே வர விரும்பாதாதால் தன் தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கின்றார். சம்பந்தன் அணியுடன் சேர்நது அரசியல் சேற்றை இவர் கழுவினாலும் அதன் நாற்றம் போகப்போவதில்லை.

ஜெனீவா பயணம் தொடர்பாக . மக்கள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பு, சர்வதேச இராஜதந்திரிகள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பு இவற்றிற்கு மத்தியில் ஜெனீவாவில் வரப் போகும் தீர்மானம் தொடர்பான தகவல்களை இந்தியாவுக்கு பரிமாறியிருக்கும் வாய்ப்புக் கூட அதிகமாக உண்டு. ஜெனிவா செல்லப் போகின்றவர்கள் என்ற அடிப்படையில் தகவல்களை பரிமாறுவதிலும் இதனோடு தொடர்புடையவர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்க நிறைய வாய்ப்பு உண்டு .

19ம் ஜெனிவா கூட்டத்தொடரை இவ்வாறு குழப்பியடித்த சம்பந்தர் கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற 18ம் கூட்டத்தொடரை இதே பாணியில் எவ்வாறு கவிழ்த்தார் என பார்த்தால் பாதுகாப்பு பட்டி பழுதடைந்த ஆயுதத்துக்கு சமனானவர் இவர் என்பது புரியும்.18ம் கூட்டத் தொடர் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன் பேச்சுவார்த்தை முறிவடைந்து விட்டது சர்வதேச தலையீடு தேவை போன்ற ஒரு மாயையை ஏற்படுத்தி பின்னர் ஜெனீவா மாகாநாடு ஆரம்பிப்பதற்கு முதல்நாள் திடீரென பேச்சுவார்த்தைக்கு மீண்டும் திரும்பினார். இதன் மூலம் கடந்த செப்ரெம்பரில் ஜெனீவா மகாநாட்டில் சிறீலங்கா தொடர்பான விடயங்களைப் பேச முடியாத சூழ்நிலையை எற்படுத்தினார். விக்கிலீக்ஸ் தகவல்களும் சம்பந்தன் சுரேஸ் அணியினர் ராஜபக்சேயின் முதலாவது சந்திப்பிலேயே சிறீலங்கா அரசு எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்கும் தயாரில்லை என்பதை நன்கு அறிந்திருந்தும் பேச்சுக்கள் சுமூகமாக நடைபெறுகின்றது என்ற போலி அறிக்கைகளை வெளியிட்டு வந்துள்ளனர். இவற்றின் அடிப்படையில் சம்பந்தன் சுரேஸ் சுமந்திரன் மாவை நால்வரும் இணைந்த அணி பாதுகாப்பு பட்டி பலவீனமடைந்த ஆயுதத்துக்கு சமமானவர்கள் என்பது உறுதியாகின்றது.

# பரதேசியின்....

## பதில்கள்....!

கேள்வி: பரதேசியாரே நாம் நினைப்பதெல்லாம் நடக்க ஆரம்பித்தால் என்னவாகும்...?

*ரஞ்சன் - ஈஸ்ற்காம்*

பரதேசி : ஒரே போக்குவரத்து நெரிசல் ஆகும்.

* * *

கேள்வி: இந்தியாவின் அடுத்த தேர்தலில் காங்கிரசுக் கட்சி தோல்வியடைந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு விமோசனம் கிட்டுமா?

*எஸ். குமணன், ஹைவீக்கம்*

பரதேசி : இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றமும் ஏற்படாது, இலங்கைத் தமிழர்களுக்கு விமோசனமும் கிடையாது. இந்தியாவின் உறுதியான கொள்கை இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தத்திற்கும் அதிகமான அதிகாரப் பரவலாக்கம் எதுவும் இலங்கையில் நடக்கக் கூடாது என்பதே.

* * *

கேள்வி: ஈலிங் அம்மன் கோயிலிற்கு இரண்டுவருசமாய் நடந்து போய்க் கொண்டிருக்கிறேன். ஒரு பிகராவது மாட்டவேண்டும் என்கிற நேத்திக் கடன் தான். ஒன்றும் மாட்டவில்லை என்ன செய்யலாம்?

*நிரஞ்சன் - ஈஸ்ற்காம்*

பரதேசி : இரண்டு வருசமாய் நடந்து போய்க்கொண்டேயிருக்கிறீங்கள். இன்னமும் போய்சேரேல்லை. கோயிலில் இருந்து அவ்வளவுதூரத்திலையா இருக்கிறீங்கள்?? முதல்லை நல்தொரு சப்பாத்தை மாட்டுங்கோ பிறகு பிகர் மாட்டும்.

* * *

கேள்வி: குடி குடியை கெடுக்கும் என்கிறார்களே அதன் அர்த்தம் என்ன?

*நிர்மலன்- கிழக்கு இலண்டன்*

பரதேசி : இப்ப நீங்கள் தண்ணியடிக்க தொடங்கி இரண்டு கிளாஸ் உள்ளை போனதும் மூண்டாவது கிளாசை ஊத்தும் போதே, உங்களுக்கு போதை ஏறியிருக்கும் அதை குடிக்க எடுக்கும் போதோ, அல்லது பக்கத்தில் இருக்கும் கோழி பொரியலை எடுக்கும்போதோ கை தட்டுப்பட்டு உங்கள் கிளாஸ் தட்டுப்பட்டு கீழே விழுந்து குடிக்கமுடியாமல் போய்விடும். இதன் அர்த்தம்தான் குடி குடியை கெடுக்கும்.

* * *

கேள்வி : இப்பொழுது லண்டனில் ஓம்சரவணபவ, அம்மா, முருகா என்று பலசாமியார்கள் உலவிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் எந்தச் சாமியாரிடம் போனால் பலன் அதிகம் கிடைக்கும். வழிகாட்ட மாட்டீரா பரதேசியாரே?

*திருமுருகன், சட்டன்*

பரதேசி : இதில் எந்தச்சோம்பலும் படாமல் கண்ணில் படுகின்ற எல்லாச் சாமியாரிடமும் செல்லுங்கள். ஒவ்வொருவருக்கும் ஏதோவொரு அருள் இருக்கும். ஆகவே எல்லோரிடமும் போவதனால் எல்லாவகை அருளும் உங்களுக்குக் கிட்டும். இதனால் முழுப்பயனையும் நீர் அடைவீர். இப்படி கேள்வி கேட்டுக்கொண்டிராமல் ஏதாவதொரு சாமியாரின் காலடியில் உடனடியாக விழுகின்ற வழியைப் பாரும்.

* * *

கேள்வி : குருநாதர் ஒருவரை வீட்டிற்கு அழைத்து பூஜைகள் செய்தால் சாந்தி கிடைக்குமென்று 350 பவுண்கள் கட்டி குருநாதரை அழைக்கின்ற சில முட்டாள் தமிழர்களைத் திருத்தமுடியாதா?

*மு.காசியப்பன், ஈஸ்ட்காம்*

பரதேசி : முட்டாள்தனமான கேள்வி கேட்கின்ற நீர்தான் முதலில் திருந்த வேண்டும். 350 பவுண்கள் காசு செலவழிகின்றது என்றுதான் நீர் பார்க்கின்றீர் ஆனால் அதனால் கிடைக்கின்ற பலன்களை நீர் பார்த்தீரா?

குருநாதரை அழைத்த வீடுகளைப் போய்ப்பாரும். அப்பொழுது உமக்குத் தெரியும்.

* * *




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# ஆயுதப் போரின் ஆரம்ப நாட்களில்....

## போராட்ட முன்னோடிகள் – 05

சின்னச்சோதியை கைது செய்து மேலதிக விசாரணை நடைபெறலாம் எனும் அச்ச நிலமை ஏற்பட்டது. இதனால் வைத்தியரின் அனுமதியின்றியே வைத்தியசாலையை விட்டு வெளியேறுவது தவிர்க்கமுடியாததாகியது. காரணம் இக்காலப்பகுதியில் வல்வெட்டித்துறையை சேர்ந்த சின்னத்துரை தாயுமானவர் என்பவர் மேற்குறிப்பிட்ட சேகுவராப்புரட்சிக்கு ஆதரவாக கதைத்தார் என்பதற்காக கைது செய்யப்பட்டிருந்தார். நாட்டில் இடம்பெற்றிருந்த எந்த விதகுழு வன்செயல்களிலும் சம்பந்தமில்லாத அப்பாவியான அவர் அதன்பின் சிலவருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை இவ்விடத்தில் குறிப்பிடக்கூடிய தொன்றாகும்.

**ஈழத்தமிழரின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் 14.02.1987இல் நடந்த நாவற்குழி குண்டு வெடிப்பு மறக்க முடியாததாகும். இக் குண்டு வெடிப்பில் பொன்னம்மான் வாசு கேடில்ஸ் என முன்னணிப் போராளிகள் ஒன்பது பேரும் 60இற்கு மேற்பட்ட பொதுமக்களும் கொல்லப்பட்டிருந்தமை இங்கு நினைவூட்டத்தக்கது.**

அன்று கொக்குவில் பல்தொழில் நுட்பக் கல்லூரியில் நிலஅளவையியல் மாணவனான துரைரெத்தினராசா சோதிரெத்தினராசா எனப்பட்ட சின்னச்சோதி யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து தலைமறைவாகியதைத் தொடர்ந்து போராளிகள் எதிர்பார்த்தது போலவே அடுத்த சிலவாரங்களில் சின்னச்சோதி குட்டிமணி தங்கத்துரை ஞானலிங்கம் என்பவர்களிற்கு எதிரான குற்றவியல் வழக்குத்தாக்கல் பத்திரம் மேற்குறிப்பிட்டவர்களின் வீடுகளிற்கு அன்றைய வல்வெட்டித்துறை பொலிஸ்நிலைய அதிபரான சிறிவர்தனா என்பவரால் கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்டது. குறிப்பிட்ட திகதியில் பருத்தித்துறை நீதிமன்றில் நேரடியாக சமூகமளிக்க கோரப்பட்டிருந்த இக் குற்றப் பத்திரத்தில்

- ஊரடங்கு நேரத்தில் சட்டத்தை மீறீ ஒன்றுகூடியது
- உயிராபத்தை விளைவிக்கும் நாசகார ஆயுதத்தை (வெடிகுண்டு) தயாரிக்க முற்பட்டமை

என்பன இவர்கள் புரிந்த குற்றங்களாக குறிப்பிடப்பட்டிருந்தன.

குறிப்பிட்டதிகதியில் குட்டிமணி தங்கத்துரை சின்னச்சோதி என்போர் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜராகி குற்றப்பத்திரிகையை ஏற்றுக் கொண்டதுடன் அதற்கு எதிராகவும் வழக்காட முயன்றனர். இவர்களின் சார்பில் அன்று வடமராட்சியில் புகழ்பெற்ற சட்டத்தரணியாக விளங்கியவரும் வல்வெட்டித்துறை மக்களின் உற்ற நண்பனும் உறவினனுமான திரு.நமசிவாயம் நடராசா(கட்டைப்பிறக்கிராசி) ஆஜராகி இருந்தார்.

குண்டுவெடிப்பில் காயமடைந்த மற்றொரு துடிப்புள்ள இளைஞனான சின்னரெத்தினம் ஞானலிங்கம் குற்றப்பத்திரிகையை ஏற்கமறுத்துதுடன் குறிப்பிட்ட திகதியில் நீதிமன்றம் வருவதையும் தவிர்த்துக்கோண்டார். இதன் காரணமாக நீதிமன்ற உத்தரவிற்கமைய பொலிஸார் இவரை கைதுசெய்ய முயன்றனர். காட்டுவளவு இல்லத்திலிருந்து கைதுசெய்யப்பட்ட இவரை பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லும் வழியில் பொலிஸாரின் கண்களில் மண்ணை எறிந்துவிட்டு ஒருநாள் தப்பியோடினார். இது போலவேமீண்டும் 1972ஜுன் மாதத்தில் இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலம் மற்றும் சார்ஜன்ட் இராஜாமுத்தையா என்பவர்களால் கைதுசெய்யப்பட்டு நல்லூரில் அமைக்கப்பட்டிருந்த சிறப்பு பொலிஸ்நிலையத்திற்கு கொண்டுசெல்லப்படும் வழியில் வல்லை வெளியில் ஜீப் சாரதியை இவர் தாக்கவும் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஜீப் கவிழ்ந்துவிடவே ஞானலிங்கம் மீண்டும் தப்பியோடினார். இச் சம்பவத்தினை தொடர்ந்து அன்றைய பரபரப்பு பத்திரிகையான மித்திரன் 'பாய்ச்சாமன்னன்' ஞானலிங்கம் என தலைப்பிட்டமையும் இவரது நண்பர்கள் மற்றும் ஊரவர்களினால் இவர் 'ஜீப் பிரட்டி' எனும் அடைமொழியினால் பெருமையாக அழைக்கப்பட்டமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

குட்டிமணி தங்கத்துரை சின்னச்சோதி என்பவர்களும் தமக்கு எதிரான ஓரிருதவணைகளிற்கு நீமன்றில் சமூகம் அளித்தனர். சேகுவராப் புரட்சியின் பின் குற்றவியல்சட்டங்களில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களினை அடுத்து தமக்கு எதிரான வழக்கின் பாரதூரத்தன்மையினால் தொடர்ந்து நீதிமன்றம் செல்வதினை யாவரும் தவிர்த்துக்கொண்டனர். இதன் காரணமாக 1971இன் பிற்பகுதியில் நீதிமன்ற ஆணையின் பெயரில் பொலிஸாரினால் தேடப்படும் புரட்சிகரநபர்களாக இவர்கள் யாபேரும் மாறியிருந்தனர். வவுனியா மகாவித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி கற்றுக் கொண்டிருந்த தலைவர் பிரபாகரனும் 1971 செப்டெம்பரிலேயே வீட்டைவிட்டு வெளியேறி முழுநேர போராளியாகியமையும் இங்கே குறிப்பிடத் தக்கது. நாற்பது வருடங்கள் கடந்து விட்டநிலையில் வெலிக்கடை மற்றும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைச் சம்பவங்களில் இவர்களில் பலரும் வீரமரணமடைந்ததாக கூறப்பட்டபோதும் தகுந்தவர்களினால் அடையாளம் காட்டப்படாமலும் எவ்வித நீதிவிசாரணைகள் இன்றியும் இவர்களது உடல்கள் அழிக்கப்பட்டன. காலம்காலமாக ஈழத்தமிழ் இனத்தையும் எங்கள் நிலத்தையும் கபளீகரம் புரியும் சிங்கள இனவெறி அரசின் பெருமுயற்சியினை நாற்பது வருடங்கள் தடுத்து நிறுத்தியதுடன் அதற்காக நாலுதசாப்தங்களிற்கு முன்பாகவே ஆயதப் போராட்டத்தை முன்னெடுத்ததன் மூலம் புரட்சிப்புயலினை ஈழத்துமண்ணில் விதைத்து யுகப்புரட்சியினை ஏற்படுத்திய வரலாற்று நாயகர்கள் இவர்கள் தான். வைத்திலிங்கம் நடேசுதாசன் (நடேஸ்), சின்னரெத்தினம் ஞானலிங்கம், துரைரெத்தினராசா சோதிரெத்தினராசா (சின்னச்சோதி), செல்வராசா யோகச்சந்திரன் (குட்டிமணி), நடராசா தங்கவேல் (தங்கத்துரை), ஞானமூர்த்தி சோதிலிங்கம் (பெரியசோதி), வேலுப்பிள்ளை பிரபாகரன் (தம்பி).


எமது போரியல் வரலாற்றில் பெரிதும் பேசப்படும் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பொன்.சிவகுமாரன் பொன். சத்தியசீலன் என்போருக்கு குண்டு செய்யும் கலையை கற்றுக்கொடுத்த ஆசான் மட்டுமன்றி 1973 ஆம் ஆண்டிலேயே விடுதலைப் போராளிக்களுக்கான தளத்தை தமிழ்நாட்டின் திருச்சி வேதாரணியம் கோடம்பாக்கம் என உருவாக்கிய பெருமைக்குரியவர்கள் சின்னச்சோதியும் பெரிய சோதியும் ஆவார்கள்.

1983இன் பின் விடுலைப் புலிகளின் பயிற்சிப் பாசறைகளை தமிழகத்தில் உருவாக்குவதிலும் அதனை நிர்வகிப்பதிலும் சின்னச்சோதி பெரும்பங்காற்றினார். தலைவர் பிரபாகரனின் சுயசரிதை கூறும் 'ஒரு தீப்பொறி' தொடரில் அவரால் அண்ணா என அழைக்கப் படும் 'போராட்டமுன்னோடிகள்' இக்கட்டுரையில் குறிக்கப்படுபவர்களே.

**மிகுந்த பாதுகாப்புடன் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் சில சமயங்களில் அவர்களையும்மீறி எப்படியோ விபத்துகள் ஏற்பட்டு விடுகின்றன.**

ஈழத்தமிழரின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் 14.02.1987இல் நடந்த நாவற்குளி குண்டு வெடிப்பு மறக்கமுடியாததாகும். இக் குண்டு வெடிப்பில் பொன்னம்மான் வாசு கேடில்ஸ் என முன்னணிப்போராளிகள் ஒன்பதுபேரும் 60 இற்குமேற்பட்ட பொதுமக்களும் கொல்லப் பட்டிருந்தமை இங்கு நினைவூட்டத்தக்கது.

*வருணகுலத்தான் (காலம் இதழில்)*

# கவனம் கழுத்தை வெட்டாதே....!!

மகாஜனாக் கல்லூரியின் மைந்தன் என்பதில் எனக்குப் பெருமிதம் உண்டு. கலைகளில், கல்வியில், விளையாட்டில், இலக்கியத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் நிலையில் விளங்குகின்ற கல்லூரி இது. மகாஜனாவால் பெருமை பெற்றவர்களில் நானும் ஒருவன். அதேபோல மகாஜனாவிற்கு பெருமை தேடிக் கொடுத்தவர்களில் நானும் ஒருவன். இது தன்னம்பிக்கையான வாசகம். அதேசமயம் மகாஜனாவின் பெருமைகளை என் பெருமைகளாகப் பீற்றிக் கொண்டு திரியவும் விருப்பமில்லை எனக்கு.

எமது மகாஜனா தொடர்பான சில கவலைகளைப் பகிரவே இப்பத்தி எழுதுகிறேன். எமது கல்லூரி மைதானத்தின் வடபுறமாக, விடுதி, நடராசர் கோயில் அமைந்த பகுதியில் மூன்று மாடிக் கட்டிடமொன்று எழுந்துள்ளது. அக்கட்டிடத்தை சிங்கள அரசின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயராஜபக்ஷ அவர்கள் சமீபத்தில் திறந்து வைத்தார். அதன் புகைப்படங்களை மின்னஞ்சலின்வழி நண்பர் ஒருவர் அனுப்பிவைத்தார்.

வேறு ஒரு தகவலும் எனக்கு தெரிவிக்கபட்டது. அக்கட்டிடத்தை திறப்பதற்கு இழையை வெட்ட கோத்தபாய கத்திரிக்கோலைத் தூக்கியபோது கல்லூரியின் அதிபர் 'கவனம் கைவிரலை வெட்டிவிடாதீர்கள்' என்றாராம். பெரும் பகிடி ஒன்றைக் கேட்டது போல, கூட இருந்த சில ஆசிரியர்கள் கெக்கட்டம் விட்டு சிரித்தனராம். (கவனம் எங்களுடைய கழுத்தை வெட்டாதே என்று கூறியிருக்கலாம்)

இது எனக்கு கூறிய செய்தி என்னவென்றால், 'நாங்கள் அடிமையாக இருந்தோம். இனியும் அடிமையாக இருப்போம். எமது பரம்பரை அலகில் (Gene) அடிமைச்சாசனம் எழுதப்பட்டிருக்கிறது. நாங்கள் இளிச்சவாயர். நீங்களே ஆள்பவர். எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக. நீங்கள் எலும்புத் துண்டை போடுக. போடாவிட்டாலும் பரவாயில்லை, வாலாட்டி உங்கள் காலடியில் விசுவாசமாக இருப்போம்?

இவைதான் எனக்குக் கிடைத்த செய்தி. இவைதவிர வேறு ஏதும் செய்திகூட உங்களுக்கு கிடைத்திருக்கலாம். சர்வாதிகார ஆட்சி நடக்கும் ஓர் இடத்தில் அப்பாவிப் பொதுசனம் ஆட்சியாளருடன் அனுசரித்துப் போவதை என்னால் விளங்க முடிகிறது.

இது வாழ்க்கை, உயிர் சம்பந்தமான விசயமும் கூட. ஆனால் அடிமையான நடத்தையைக் கொள்ளவேண்டும் என்று என்ன கட்டாயம்? நியாய உணர்வின் உறுத்தலும், கடமை உணர்வின் பாரமும், எம்மை அழுத்த வேண்டாமா? அறத்தின் வழியில் நின்று நாம் இயங்க வேண்டாமா?

'கவனம் கைவிரல்களை வெட்டாதீர்' என்று சொல்ல வேண்டிய கட்டாயம் என்ன? அதற்கு ஏன் இளிச்சவாயர்களாகச்சில ஆசிரியர்கள் அலைந்தனர்? சுமார் 40,000 தமிழ் இரத்த உறவுகளைக் கொன்றொழித்தவனல்லவா அவன்? அதன் கோப உணர்வு நெஞ்சில் குமிற வேண்டாமா? சரி அதை வெளிப்படுத்தத்தான் வேண்டாம். பேசாதிருக்கலாமே? இப்படி பகிடி விடவேண்டும் என்று என்ன கட்டாயம் வந்தது அதிபருக்கு?

74ம் ஆண்டு 9ம் வகுப்பில் நான் இருக்கிறேன். இப்பொழுது கட்டப்பட்ட கட்டடம் இருந்த இடத்தில் இருந்தது அப்பொழுது என் வகுப்பறை. அப்பொழுது உயர்தர வகுப்பு மாணவர்களாக இருந்த பொ.இரகுபதி (பேராசிரியர்), சி.அ.யோதிலிங்கம் (ஊடகவியலாளர்), கலாசசன், விக்னேஸ்வரன், மனோகரன், சரவணபவன், செல்வராஜா போன்றோர் வேட்டிகட்டி வெள்ளை சேட் அணிந்து பாடசாலைக்கு வருவார்கள். தமிழ்த் தேசியத்துக்கான உடை அதுவே என்று அவர்கள் கருதியிருக்கின்றனர். அச்சிறுவயதில் எனக்கு அது புரியவில்லை. அப்படி வந்தது மாத்திரமல்ல, எங்களைப் போன்ற 9ம், 10ம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம், பௌதீகம், இரசாயனம் போன்ற பாடங்களை கற்பித்தும் விட்டனர்.

அஃது அவ்வாறிருக்க, யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் த.பூ.முருகையா அவர்கள் மகாஜனாக் கல்லூரியிலேயே கற்பித்துக் கொண்டிருந்தார். நா.ஸ்ரீகெங்காதரன் முதலான ஆளும் கட்சி ஆதரவாளர்களும் மஹாஜனாவின் பழைய மாணவர்களாக இருந்து ஆளும் கட்சி அரசிற்கு உரிய 'கடமைகளை' ஆற்றிக் கொண்டு இருந்தனர்.

ஒரு முறுகல் நிலை மகாஜனாவில் அதிர்ந்து கொண்டிருந்தது. தமிழ்த்தேசிய உணர்வு பொங்கிக் கிடந்த இடம் அது. பொங்குவதற்குக் காரணம் ஆளும் கட்சியின் அதிகாரத் திமிர். ஆசிரியர் குழுவும் இரண்டாக இருந்தது. இயல்பிலேயே தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான சக்திகளே அதிகம். ஆயினும் ஆளும் கட்சியின் அதிகாரத்துக்கு முன் பெரும்பாலோனோர் மௌனத்தையே தமது மொழியாகக் கொண்டனர்.

இதை இப்பொழுதுதான் எழுதுகின்றேனே ஒழிய அந்தவயதில் அதை உணர்ந்தவன் அல்லன். ஒரு சம்பவம்தான் எங்களை இவற்றையெல்லாம் நினைவுகூர வைக்கிறது. அச்சம்பவத்தைத் சொல்கிறேன்.

கவிஞர் காசிஆனந்தன் அவர்கள் சிறையிலிருந்து வெளிவந்த நேரம். அவரது உணர்ச்சிகரமான பேச்சு இளைஞர்களை உசுப்பிக்கொண்டிருந்தது. சிறையிலிருந்து அவர் வெளிவந்தவுடன் நடந்த முதற்கூட்டமே எனது ஊரான அளவெட்டியில்தான். அதனால் நாமெல்லோரும் புளகித்துப் போயிருந்தோம்.

## இரவி அருணாசலம்

### எழுதுவது என்னவெனில்

இப்பொழுது மகாஜனாக்கல்லூரியில் அவரை அழைத்து ஓர் உரை ஒன்றினை நிகழ்த்த உயர்தர மாணவர் மன்றம் முடிவெடுத்தது. நாளும் குறித்து வேலைகள் நடந்தன. அந்தநாள் வந்தது. பின்னேரம் காசிஆனந்தனின் உரை என்ற அறிவித்தலும் பாடசாலையில் ஒட்டியாயிற்று. சிறுவர்கள் எமக்கு புளுகமோ மிகப்பெரும் புளுகம்.

பின்னேர வெயிலின் சூடு பட்டோ என்னவோ புளுகம் சட்டென அவிந்து போயிற்று. மகாஜனாவின் மண்டபத்தில் காசிஆனந்தன் பேசத்தடை.பிரம்பைச் சுழற்றியவாறு முருகையா மாஸ்ரர் கொக்கரித்தார். மகாஜனா எங்கணும் அதிர்வு அலை தழும்பித் தழும்பிப் பரவிற்று. அதிகம் யோசிக்க அவகாசமில்லை. வேட்டிகட்டியோர் விரைந்து செயற்பட்டனர்.

மகாஜனாவின் மதிற்சுவருடன் ஓர் ஒழுங்கை ஊர்ந்தது. அதன் அயலில் புளியமரம் நிழல்செய்த இடத்தில் மேசைகள் அடுக்கப்பட்டு மேடை தயாரானது.பாடசாலை முடிய ஆயிரக்கணக்கான மாணாக்கரும் அங்கு கூடினர். நெஞ்சு அதிர, கண்ணீர் சொரிய, கால்கள் உதற நான் அந்தப் பேச்சைக் கேட்டேன். தாடிவைத்த காசி ஆனந்தன் பேசிக்கொண்டிருந்தார். '...இப்படியொரு புளியமரத்தில்தான் வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான்...'

38 வருடங்களுக்குப் பிறகு அதே கல்லூரி. சற்று ஏறக்குறைய அதே காட்சி. எனக்கோ நெஞ்சில் பெரிய வலி.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

## கருத்துப் பரிமாற்றமே மொழி

கருத்துப் பரிமாற்றமே மொழி. இந்தப் பரிமாற்றத்தை சைகை மூலமும் குறியீடு மூலமும் செய்யலாம். அது தொடக்க நிலை. நுண்ணிய கருத்துப் பரிமாற்றத்திற்கு வழி அமைக்காது. இன்று மனித சமுதாயம் மொழி என்னும் கருவியைப் பயன்படுத்தி பேச்சாலும் எழுத்தாலும் எவ்வளவோ நுண்ணிய கருத்துக்களை வெளிக் கொணருமளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது, வளர்ந்து கொண்டே போகின்றது.

மனிதன் மட்டுமல்ல வேறு உயிரினங்களும் சைகை குறியீடுகள் மூலம் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளுகின்றன. அவற்றின் செயற்பாடுகளுக்கும் மனிதச் செயற்பாட்டுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. டொல்பின் என்னும் நீர்ப் பிராணிகள் மத்தியில் ஒன்றை ஒன்று பெயர் குறிப்பிட்டு தொடர்பு கொள்ளும் தன்மை அவதானிக்கப் பட்டுள்ளது. ஒருவகைக் குரங்குகள் தம் கூட்டத்திற்கு விடும் எச்சரிக்கை குரல்கள் அவை எதிர்நோக்கும் அபாயத்தை இனம் காட்டக் கூடியதாக 10 வகைகளுக்கு மேல் வேறுபட்டு வருவது அவதானிக்கப் பட்டுள்ளது. வளர்ச்சியில் மனிதனுக்கு அடுத்த இடத்தில் உள்ள வாலில்லாக் குரங்குகள் மனிதரைப்போல் பல சத்தங்களை எழுப்பும் ஆற்றல் பெற்றிருக்காவிட்டாலும் சைககள் மூலம் நூற்றுக் கணக்கான சொற்களைக் கற்கின்றன. அச்சொற்கள், சொற்தொடரும் இலக்கணமும் குன்றியவையாகவே காணப்பட்டாலும் அவற்றைக் கற்கும் திறனை நாம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். அந்த நிலையிலிருந்துதானே மனிதன் இந்நிலைக்கு வந்தான்.

மொழி என்றால் அது குரல்வளையில் இருந்து வரும் ஒலியில் மட்டும் தங்கியுள்ளது என்று எண்ணினால் அது தப்புக் கணக்கு. மேலே நான் குறிப்பிட்ட டொல்பின், வாலில்லாக் குரங்கு ஆகியவைகளைவிட கிளிப்பறவை சொற்களை ஒவ்வொன்றாக உச்சரித்து எம்மைப்போல் தெளிவாகப் பேசுகிறது. இதை வைத்து கருத்துப் பரிமாற்றத்தில் கிளி வளர்ச்சி கூடியது என்றால் அது தப்பு. சொற்களைத் தொடரியல் படுத்தி உள்ளத்தின் எண்ணங்களையும் கருத்தையும் வெளிப்படுத்தப் பேசப்படுவதுதான் மொழி. என்னதான் தெளிவாகக் கிளி பல சொற்களைப் பேசினாலும் அவை எல்லாமே அதன் குரல்வளை ஆற்றலைப் பயன் படுத்தி திரும்பத் திரும்பக் கேட்ட சொற்களை உருவாக்க எற்படுத்தும் ஒரு ஒலி அலையே. மொழி என்று அதை நினைக்கக் கூடாது.

மனித மூளையின் படிநிலை வளர்ச்சியால் (evolution) ஏற்பட்ட படிமலர்ச்சி மாற்றம் அதை எங்கேயோ உச்சிக்குக் கொண்டு போய் விட்டுள்ளது. எடுத்துக் காட்டிற்கு பிறவியிலேயே உடற்கூற்றின் குறைபாடு காரணமாக சொற்கள் என்றால் என்னவென்று செவியால் கேட்டு அறிய முடியாத பிறவிச் செவிடர்கள், அதாவது பேச்சென்றால் என்னவென்று புரியாதவர்கள், சைகை மொழி படித்து பல கருத்துக்களை வெளிப் படுத்துகிறார்கள். பட்டதாரிகளாகின்றனர். இதற்கு காரணம் மனிதனின் நரம்பு மண்டலமும் உடற் கூறு இயல்பும் படிநிலை வளர்ச்சியில் பெற்றுள்ள திசு மரபுப் பிறழ்வு (mutation) மாற்றங்களே.

இரண்டு கால்களால் நடக்க ஆரம்பித்த 25 இலட்சத்திற்கு மேற்பட்ட ஆண்டுகளை ஒரு தொடக்கப் புள்ளியாக வைத்து அதே காலத்தில் வாழ்ந்த மனித உயிர்ச் சுவடு ஆய்வுடன் இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனித உயிர்ச்சுவட்டு ஆய்வை ஒப்பிடும்போது பெரிய வித்தியாசம் தென்படவில்லையாம். ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட திசு மரபுப் பிறழ்வுகாரணமாக எமது மூளை, நரம்பு மண்டலம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றம்தான், எண்ணங்களை உருவாக்கும் ஆற்றல் மூளைக்கு ஏற்பட வழி வகுத்தது. அதுவே ஐம்பதினாயிரம் ஆண்டுகளில் அர்த்தமுள்ள ஒலிகள் உருவாகும் சொற்களை எழுப்பும் ஆற்றலை மூளை பெற வழி வகுத்து மொழிகளின் ஆரம்பத்துக்கு வித்திட்டது.

ஒரு மொழியிலிருந்துதான் இன்று உலகிலுள்ள 100 வரையான மொழிக் குடும்பங்கள் (6,000 க்கு மேற்பட்ட மொழிகள்) தோன்றினவோ அல்லது பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபட்டு உருவான ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளிலிருந்துதான் பல்வேறு குடும்பங்கள் உருவானதோ என்பதைத் திடப் படுத்திக் கூற முடியாத நிலையிலேயே உள்ளது. கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இத்துறை முற்றிலும் விஞ்ஞான மயப் படுத்தப் பட்டுள்ளது. சரியான பதிலை நிச்சயம் தரும். அதுவரை பொறுமையுடன் காத்திருக்கத்தான் வேண்டும்.

- Friday Special -
Thali 12 Items £5.00
£20 க்கு மேல் வாங்கினால் Mutton briyani or kothu rotti FREE...
4 Vadai...... £1
WEDNESDAY SPECIAL OFFER
CHICKEN BRIYANI £1.99
Outdoor catering services
E Mail : rainbow.mitcham@gmail.com
Web: www.rainbowmitcham.co.uk
RAINBOW RESTAURANT
தாயகத்தில் கிடைத்த அதே சுவை....
பிறந்த நாள் திருமண நாள் மற்றும் விருந்துபசாரங்களுக்கு சிறப்பான முறையில் DJ sound system ஒலி அமைப்புக்களும் செய்து தரப்படும்
Italy 25 pieces with sambal & sambaar £10
100 String Hoppers with sothy & sambol Only £9.00
50 String Hoppers...... £6
25 String Hoppers...... £4
205, Streatham Road, Mitcham, Surrey, CR4 2AJ
Call : 020 8640 4230 , 020 8640 1612

Maths, Science and English Classes
- KS1, KS2, KS3 and GCSE
Only from £5 per Subject
- Experienced teachers
- Regular assessments and feedbacks
- Guaranteed improvement (முன்னேற்றத்துக்கு உத்தரவாதம்)
- Personal Licence (மதுபானம் விற்பதற்கான) course (சான்றிதழ் வழங்கப்படும்)
- ESOL with Citizenship course: Pass guaranteed or money back
- for British Citizenship (Naturalisation)
- for Indefinite leave to remain (Permanent Residency)
London College of Management
Tel: 074 0342 7926 / 020 8683 6472
Accessible from Croydon/ Mitcham/ Tooting area

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பிரித்தானியா: | கனடா: |
|---|---|
| Tel: 020 7043 4315 | Tel: 647-724-4188 |
| Fax: 020 7043 4312 | Fax: 416-438-7855 |

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 33 வயது, 5'9", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working as a Manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3885

2. 46 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, Divorced, Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422

3. 32 வயது, 5'9", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, Working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3893

4. 23 வயது, 5'7", Student visa in UK, completed diploma in civil engineering and doing charted accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3899

5. 37 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Assistant manager in a shop, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3890

6. 28 வயது, 5'11", Student visa in UK, working in IT, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3892

7. 29 வயது, 5'10", PSW visa, BSc and MBA holder, working in accounts field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3901

8. 24 வயது, 5'6", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3907

9. 28 வயது, 5'2", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3910

10. 37 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working as a team manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1793

11. 43 வயது, 5'8", Asylumseeker, பட்டதாரி, MBA holder தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3856

12. 31 வயது, 5'6", PSW visa in UK, BA பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3857

13. 31 வயது, 5'7", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3866

14. 31 வயது, 5'10", பிரான்ஸ் நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3867

15. 26 வயது, 6'0", Student visa in UK, Studying BSc Computer Application, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3869

16. 26 வயது, 5'10", Student visa in UK, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3838

17. 25 வயது, 5'5", Student visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3839

18. 34 வயது, 5'5", France, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3840

19. 29 வயது, 5'10", visa in Lithuania, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3842

20. 31 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3844

21. 32 வயது, 5'7", Asylumseeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3845

22. 28 வயது, 5'3", Student visa in UK, Studying BA, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3846

23. 26 வயது, 5'8", Canada, Working in IT industry, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3851

24. 33 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3852

25. 30 வயது, 5'5", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3816

26. 25 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3830

27. 39 வயது, 5'6", Doctor born and brought up in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3831

28. 35 வயது, 5'9", PR holder, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3834

29. 27 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3835

30. 33 வயது, 5'8", Permanent residence, Engineer working in a company, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3836

31. 38 வயது, 5'8", British citizen currently running a business in Dubai, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3605

32. 35 வயது, 5'8", கனடிய நிரந்தர வதிவுரிமை, Land Surveyor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3774

33. 29 வயது, 5'10", Student visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3784

34. 27 வயது, 5'5", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, IT sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3785

35. 31 வயது, 5'8", Asylum, BBA, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3786

36. 26 வயது, 5'6", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3787

37. 28 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3788

38. 29 வயது, 5'6", பிரித்தானிய பிரஜாவுரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3789

39. 36 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3797

40. 37 வயது, 5'8", Stuent visa in UK, Masters degree holder, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3805

41. 31 வயது, 5'8", Stuent visa in UK பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3807

42. 28 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 122

43. 31 வயது, 5'3", பிரித்தானிய பிரஜாவுரிமை, Service industry இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3616

44. 29 வயது, 5'5", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3690

45. 37 வயது, 5'9", Stuent visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3581

46. 29 வயது, 5'8", PSW visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3580

47. 32 வயது, 5'9", பிரித்தானிய பிரஜாவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3574

48. 30 வயது, 5'6", PSW visa in UK, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3352

49. 41 வயது, 5'6" பிரித்தானிய பிரஜாவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 3765

50. 30 வயது, 5'8", Tier-1 migrant, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3766

51. 32 வயது, 5'7", இலங்கையில் வசிக்கும் Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3764

## மணமகன் தேவை

1. 33 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, divorced, பட்டதாரி working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3508

2. 34 வயது, 5'8", Workpermit visa, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3889

3. 38 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Part qualified ACCA, working as an assistant accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

4. 41 வயது, 5'2", Student visa in UK, பட்டதாரி, doing MSc in formulation science தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 899

5. 29 வயது, 5'1", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1378

6. 25 வயது, 5'3", BSc degree in Mathematics and Statistic, living in uk for the past 10 waiting for a permanent visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

7. 22 வயது, 5'0", இலங்கை, A/L Bio Science தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3732

8. 31 வயது, 5'2", அமெரிக்க பிரித்தானிய பிரஜாவுரிமை, Doctor, PhD qualified, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3855

9. 35 வயது, 5'6", அமெரிக்க பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in pharmaceutical company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3865

10. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவுரிமை, Computer degree holder தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3881

11. 34 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3841

12. 31 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, Bio Chemist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3793

13. 35 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3853

14. 28 வயது, 5'6", இலங்கை, பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3803

15. 26 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, Accountant working in a company, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3260

16. 28 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Working in IT field, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3502

17. 22 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working in medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

18. 29 வயது, 5'1", இலங்கை, Working for export firm in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3791

19. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவுரிமை, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3800

20. 31 வயது, 5'3", PSW visa in UK, Masters degree holder, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3806

21. 29 வயது, 5'5", Work permit visa in UK, BSc, MBA degree holder, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3810

22. 26 வயது, 5'3", தென்னாபிரிக்க பிரஜாவுரிமை, Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3569

23. 24 வயது, 5'5", Denmark பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in Medical sector in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

24. 36 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3573

25. 32 வயது, 5'5", Malaysian citizen, Masters in UK, Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3763

26. 27 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

27. 32 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3772

28. Age 37, 5'2", British citizen working in a IT company looking for a suitable groom Ref: 3701

29. Age 28, 5'2", British citizen accountant looking for a suitable groom Ref: 1348

30. Age 32, 5'4", British citizen doctor looking for a suitable groom Ref: 3711

31. Age 25, 5'3", graduate working in a bank in srilanka looking for a suitable groom Ref: 3717

32. Age 31, 5'6", British citizen graduate working in a bank looking for a suitable groom Ref: 3365

33. Age 32, 5'1", graduate working as a accountant in a company in srilanka looking for a suitable groom Ref: 3739

34. Age 33, 5'2", graduate divorced student visa in uk looking for a suitable groom Ref: 3745

35. Age 24, 5'4", Student visa in UK, looking for a suitable groom, Ref no: 3687

36. Age 34, 5'4", British Citizen, Doctor, looking for a suitable groom, Ref no:3694

37. Age 37, height 5'5" Student visa looking for a suitable groom Ref: 3667

38. Age 32, height 5'4" Sweden citizen divorced looking for a suitable groom Ref: 3653

39. Age 27, height 5'6", Canadian citizen student looking for a suitable groom Ref no 3674

40. Age 30, height 5'5", Graduate Teacher in srilanka looking for a suitable groomRef no 3660

41. Age 23, height 5'8" British citizen, graduate working in a company looking for a suitable groom Ref: 3635

42. Age 27, height 5'4" British citizen, a student looking for a suitable groom Ref: 3628

43. Age 29, height 5'2" Student visa looking for a suitable groom Ref: 3631

44. Age 28, height 5'7" British citizen graduate looking for a suitable groom Ref: 3637

45. Age 26 height 5'2" British citizen Doctor ,looking for a suitable groom ,Ref :3627

46. Age 40 height 5'5" working as a Teacher in Srilanka, graduate looking for a suitable groom Ref: 3568

47. Age 26 height 5'0" living in UK in a student visa, graduate looking for a suitable groom Ref: 3585

48. Age 31 height 5'1" in Srilanka a music teacher looking for a suitable groom Ref: 3588

49. Age 28 height 4'9" in Srilanka a graduate looking for a suitable groom Ref: 3590

50. Age 42 height 5'2" in Srilanka working as a Teacher , graduate looking for a suitable groom Ref: 2622

51. Age 26, 5' 3", British citizen, Accountant Looking for a suitable Groom Ref 3539.

52. Age 29, 5' 7", British citizen working in medical sector Looking for a suitable Groom, Ref 722.

53. Age 32, 5' 4", German citizen living in uk working as an Architect in IT Looking for a suitable Groom Ref 3227.

54. Age 28, 4' 8", student visa looking for a suitable Groom Ref 3553.

55. Age 28, 5' 4", British citizen working as a Architect looking for a suitable Groom Ref 3245.

56. Age 27, 5' 1", graduate living in srilanka looking for a suitable Groom Ref 3550.

57. Age 29, 5' 1", British citizen Doctor looking for a suitable Groom Ref 3496.

58. Age 35, 5' 5", graduate living in srilanka looking for a suitable Groom Ref 3558.

59. Age 32, 5' 1", working as a trainee in medical sector living in srilanka looking for a suitable Groom Ref 3557.

60. Age 27, 5' 1", British citizen Doctor divorced looking for a suitable Groom Ref 3556.

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# பனை வளவு



பிறந்த வளர்ந்த தம் வீட்டில், வளவில், ஊரில் மீளக்குடியமரும் நினைப்பில் எம் ஊர்க்காரர்கள். வெளிநாடுகளில் நிலையாகிவிட்ட பலராலும் அங்கே பற்றைக்காடுகள் இன்னும் தொடர்கின்றது. வலி வடக்குப் பிரதேசம் ஆறு மாதங்களுக்கு முன்னர் தான் இராணுவத்தால் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டது. 1990 இலே குடியகன்ற மக்கள் சீமெந்து தொழிற்சாலை அமைந்த இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியான செல்லடிகளால் தாங்க முடியாத வகையிலே பெச்சங்காடு, கொல்லங்கலட்டி, பன்னாலை, அம்பனை என அயல் ஊர்கள் எல்லாமே அகன்று இருந்தது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மீளக் குடியமரும் விடுக்கிலே அந்த ஊரில் ஒரு கலகலப்பு. இயல்பாகவே அங்கேயிருந்த பற்றைக்காடுகளை இப்பொழுது பிரதேசசபையினர் அகற்ற ஆரம்பித்திருக்கின்றனர். உரிமையாளர்கள் இல்லாத காணிகளும் அவர்களால் அகற்றப்படுவதும் அதற்கான செலவு அறவிடப்படுவதுமான நிலைமை தொடர்கின்றது. இந்நிலையில் மீளக்குடியமரும் முனைப்பில் இருக்கின்ற என்னுடைய அண்ணர் தொலைபேசியூடாக இவ்வாறான ஒரு காணி பற்றி இங்கே இன்னொருவருடன் கதைக்கும்படியாக கூறியபோது அந்தப் பனைவளவினுடைய நினைவு நெஞ்சில் படரலாயிற்று.

அது ஒரு பெரும்பரப்பளவைக் கொண்ட பனம்காணி. ஊர் இடம்மாறிய பிறகு பற்றைகளும் இடியுண்ட வீடுகளுமாக மாறிவிட்ட காணி. பாப்பா மாமி, இரத்தினம் மாமி, பூமாச்சித்தி வீடுகளுக்கிடையிலாக பெரு நிலப்பரப்பில் நளவளாபனைவளவோடு ஒட்டியிருந்த பனைவளவு அது. எத்தனையோ செல்லடிகளைக் கண்டும் நிமிர்ந்த நெடுந்தோற்றத்தோடு இன்னும் பனைகளைக் கொண்டு மிடுக்கோடு இருக்கிறது. சென்ற ஆவணி விடுமுறையிலும் அதன் கட்டுக்குலையாத அழகை நேரில் பார்த்து மகிழ்ந்தோம். வடலிகளைக் கொண்டிருந்த நளவளாவளவும் இன்று பனைகளைக் கொண்டதாக பாப்பாமாமி வீட்டு எல்லைப் புளிய மரத்தையும் எழில் தோற்றம் மாறாத அதே செழிப்போடு இருக்கிறது. வீட்டு வளவு மலகூடத்தைக் காணாமல் இருந்த ஒருகாலத்தில் அந்தநளவளாவளவில்தான் இருந்த அடைப்புக்குள் குழி மலகூடம் பாவனையில் இருந்ததாக நினைவு. மூலையில் ஒரு இலுப்பைமரம். மாரிகாலத்தில் நுளம்பை விரட்ட பொச்சுமட்டை மூலம் புகைமண்டலம் கிளப்பப்படும். அப்போது இலுப்பங்கொட்டைகளும் அந்த பொச்சுமட்டை நெருப்புக்குடலுக்குள் அடக்கம் பெறும். அந்தப்புகையிலே ஒரு தனி மருத்துவவாசனை. பொறுக்கிக் குவித்த இலுப்பங்கொட்டைகள் இரவிரவாக உடைக்கப்பட்டு எங்கோ கொடுக்கப்பட்டு எண்ணெயாக வீட்டுக்கு வருவது வழக்கம். கார்த்திகை விளக்கீட்டுப் பந்தங்களுக்கும் அந்த எண்ணெய்தான் பயன்படுத்தப்படும். காலத்திற்குக்காலம் பனம்பாத்திகளையும் அந்தநளவளாக்காணி கொண்டிருக்கும். நீண்ட முருக்கங்காய்களைத் தரும் உலாங்கா முருங்கைகளும் அந்தவளவில் அதிகம். நிறைந்த செறிந்த அன்னமுன்னா மரங்கள் தருகின்ற அன்னமுன்னாப்பழத்தின் சுவையே தனி. எல்லையில் வேலியோடு ஒட்டியிருந்த மாமரம் அதன் பழங்கள் புளிக்குமென்றாலும் கூட அதிலும் ஒரு சுவைதான். இவைகள் எல்லாமே பசுமையையும் குளிர்ச்சியையும் அந்த வளவுக்கு எந்தநேரமும் கொப்பளித்துக்கொண்டிருக்கும்.

நளவளாவை ஒட்டியது அந்தப் பெரும் பனை வளவு. தலைவாசல் மேய, எல்லை வேலிகள் அமைக்க என ஒன்றுவிட்டு ஒரு ஆண்டுக்கு வெட்டப்படும் பனைஓலைகள், அவற்றோடு வெட்டிச் சரியும் நுங்குக் குலைகள், பெட்டி கடகம் இழைக்கவென வெட்டி விழுத்தப்படும் குருத்தோலை எனப்படும் ஓலைச்சார்கள். வெட்டி உலரவிட்ட மறுநாள் மேய்ச்சலுக்கு படிவதற்காக அடுக்கப்பட்ட அந்தப் பனையோலைகளில் மிதிப்பு நடக்கும். சாரைப்பாம்பு போல அது பனைகளுக்கிடையாக ஓடிஓடி மிதித்து மடிக்கப்படும். இவையெல்லாமே ஒரு இனிய நினைவுகள் தான். அந்த வளவின் ஒரு மூலையில் அமைந்திருந்தது வன்னியனுடைய குடியிருப்பு நிலமும் அதனோடு அமைந்த கள்ளுக்கொட்டிலும். அந்தக் கள்ளுக் கொட்டிலை வன்னியனுடைய குடியிருப்போடு அகற்ற பெரும் பேரம் பேசப்பட்டதும், வழக்காடி பின்னர் சிறு தொகை நஷ்டஈடும் கொடுத்து எழுப்பப்பட்டதும் கூட என் சிறுபிராய நினைவு.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

நடுவிலிருந்த சிறுவளவில் எங்கள் சிறுவருக்கான கிறிக்கட் மைதானம். வைரவன், சரவணை, நாகன் என பலரும் காலை மாலை என்று கள்ளுச்சேர்க்க பயன்படுத்திய பனைகளும் அந்த வளவில்தான் இருந்தது. எங்கள் உறவுக்காரப்பெரியவர்களுக்கு போத்தலிலே அவர்களால் இறக்கப்பட்ட கள்ளு வைக்கப்படும். பால் பேணிகளைக் கொண்டு மறுநாள் அப்பம் சுடுவதற்காக கள்ளுப்பெறுவதற்காக நாங்கள் காத்திருப்பதும் அந்தப் பனைமரங்களுக்கு கீழேதான். கருக்குமட்டை, பன்னாடை, காவோலை என விறகுத் தேவைகளை ஈடு செய்வதும் அந்தப் பனைவளவுதான். பனம்பழம் பருவம் வந்தால் போதும் காலைமாலை வேளைகளில் பனம்கொட்டைகளைப் பொறுக்கிக் குவிக்கவேண்டியது எங்களுடைய வேலை.

அந்தப் பெரும் பனைக்காணிக்குள் பனம் பாத்திகள் அமைக்கப்படும். பனங்கிழங்கு வந்ததும் பாத்தியைக் கிண்டி கிழங்கு, 'துவையல், பனங்கிழங்கு என சதா எங்கள் கொறியலுக்குப் பயன்படும். பனம்பழத்தைச் சுட்டுச் சுவைப்பதும் அதில் பாணிபிழிந்து ஓலைப்பாயில் பனாட்டு ஆக்கி பதப்படுத்தி வைப்பதும் அம்மம்மாவின் கைவண்ணம். பனம்பாணியில் பனங்காய்ப்பணியாரம் அடிக்கடி எங்கள் வீட்டு இரும்புச்சட்டி எண்ணையில் பொரியும். அவித்த பனங்கிழங்கு உரலில் உப்பு மிளகாயோடு இடிபட்டு துவையலாவதும் ஒரு தனிருசி. துண்டங்களாக வெட்டிய அவித்த பனங்கிழங்கு புழுக் கொடியல் ஆவதும் பச்சைக்கிழங்கு கிழித்து காயப்போட்டு ஒடியல் ஆவதும் அந்த ஒடியல் மாவில் பிட்டு உணவு ஆவதும் கூட பனம் பயன்களில் அமைந்த பண்டங்கள். கள்ளுப்பானைக்கு சுண்ணாம்பு பூசினால் அதில் சேர்வது கருப்பனீர். வெறிக்காத கருப்பனீர் சின்னவயதில் மாங்காய்த்துண்டங்களோடு குடிக்க தேனாமிர்தமாக இருக்கும். கருப்பனீரில் காய்ச்சப்பட்ட பனங்கட்டி பனையோலைக்குட்டாயில் அடைக்கப்படுகின்ற போதும் அவற்றை சுவைத்துண்பதும் அதன் சுவையே அலாதி.


இவ்வாறாக அப்பனைவளவு வைத்திருப்பவர்களை வாழவைத்த அந்த மரங்கள். அதன் ஒவ்வொரு பாகங்களும் உபயோகப்படுத்தப்பட்ட தன்மை. இதனால்தானோ என்னவோ பனைக்கு கற்பகதரு என்றும் பெயர். போரின் இடர்ப்பாடுகளில் பல்லாயிரக்கணக்கான பனைகள் சாவுண்டதும் ஒரு சோக நிகழ்வுதான். அந்தநாட்களில் மில்க்வைற் கனகராஜா அதிபர் அவர்கள், தொடர்ந்து பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஆகியன பனைவளத்தைப் பெருக்குவதில் கவனம் செலுத்தின. விதைகளை எங்கும் நடுவதற்கு ஊக்கமளித்தது. அந்தப் பாதையிலே தொடர்ந்து எம்மவர்கள் இயங்கினால் அந்த வற்றாத வளத்தை வட பகுதிக்குத் தந்த பனைமரம் தொடர்ந்து அந்தப் பிரதேசங்களில் நிலைக்கும். அந்த அழகான பனைவளவுகள் யாழ்ப்பாண வரைபடத்தை அலங்கரிக்கும்.












தமிழ் சினிமா இயக்குனர்களில் மிக பெரிய ஆளுமை மகேந்திரன். அவர் அண்மையில் வழங்கிய பேட்டியை வாசித்த போது - எனக்குள் உறங்கி கொண்டிருந்த இயக்குனர் மகேந்திரன் குறித்த ஞாபகங்கள் விழித்து கொண்டன. எனக்கு தெரிந்த, நான் பல இடங்களில் மகேந்திரன் குறித்து வாசித்ததை, அவர் படங்களில் ரசித்ததை மகிழ்ச்சியுடன், பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறேன். நிச்சயம், மகேந்திரன் போன்ற கலைஞர்களை பற்றி பேசுவதே கூட பெருமைக்குரிய விஷயம் தான்.

அவரது 'பூட்டாத பூட்டுக்கள்' திரைப்படத்தை பார்த்து - பல நாட்களுக்கு நான் நாயகியின் நினைவாகவே வாழ்ந்து இருந்தேன். அவர் கனவுக்கன்னி என்கிற சராசரி ரசிகனின் பார்வையில் சொல்லவில்லை. எளிமையும், எதார்த்தமும் - அழகும் கூட அதிகமில்லாத பெண்கள் தானே மகேந்திரனின் நாயகிகள். அந்த நாயகியின் துயரம் என் மனதை கசக்கி பிழிந்தது. இப்போதும் கூட நினைப்பேன். அந்த கதை உண்மையாக இருந்தால் - அந்த கதை நாயகி இன்றைக்கு என்ன மாதிரியான வாழ்க்கை வாழுவாள் என்று யோசித்து கொண்டிருப்பேன்.

85லிருந்து 2000 ஆண்டு வரை - அந்தந்த ஆண்டு வெளியான படங்களில் எண்பது சதவித படங்களை பார்த்து விடுவேன். இது போக பழைய படங்கள். பார்த்த இத்தனை பல நூறுபடங்களிலும் - பூட்டாத பூட்டுகள் நாயகியை போல இன்னொருவர் என்னை பாதிக்கவில்லை. அவர் அளித்த பேட்டியில் இருந்து சிறு பகுதி....

"நான் இனனும் நல்லசினிமா எடுக்காத குற்ற உணர்வில் இருக்கிறேன் . இது தன்னடக்கம் அல்ல . நிஜமான என் வாக்குமூலம் !" - சிரித்து ஆச்சர்யப்படுத்துகிறார் இயக்குநர் மகேந்திரன். பல நாடுகளில் இருந்து 'அடுத்த படம் எப்போ பண்ணுவீங்க?' என்று போன்ல கேட்கிறாங்க. நிகழ்ச்சியில் திரையிட்ட ஒவ்வொரு காட்சியையும் ரசிகர்கள் புதுசாய் ரிலீசான படம் மாதிரி நினைச்சுப் பாராட்டுறாங்க. நெகிழ்ச்சியா இருக்கு. அதேசமயம் இவ்ளோ மரியாதை வச்சிருக்காங்களேன் என கொஞ்சம் பயமா இருக்கு. இதோ என் கூட்டைவிட்டு வெளியே வர தயாராகிட்டேன். 'மோகமுள்' கதைக்கு என் பாணியில் திரைக்கதை வடிவம் கொடுத்திருக்கேன் . சீக்கிரமே மகேந்திரன் படைப்புகளை வெள்ளித்திரையில் பார்க்கலாம் !" - அழகாகச் சிரிக்கிறார் மகேந்திரன். தமிழில் எத்தனையோ இயக்குனர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால், மகேந்திரன் மீது மட்டும் ஏன் இத்தனை எதிர்பார்ப்பு. எத்தனையோ இயக்குனர்கள் படங்கள் இயக்காமல் இருந்தால் 'ரெம்ப நல்லது' என்று நினைப்போம்.

ஆனால் மகேந்திரன் மீதான ஆர்வம் - அவர் படங்கள் சரியாக இயக்கி முப்பது வருஷங்கள் ஆகியும், அவர் மீதான எதிர்பார்ப்பு குறையவில்லை. 1981 ம் ஆண்டு தீபாவளி நாளன்று 'மெட்டி' படம் ரிலீசானது. அதற்கு பிறகு மகேந்திரன் இயக்கிய எந்த படமும் மக்களை திருப்திப்படுத்தவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை என்றாலும் - அவர் மீதான, அவர் படங்கள் மீதான எதிர்பார்ப்பு - முப்பத்தி இரண்டு வருஷங்களாய் குறையவில்லையே. மெட்டிக்கு பிறகு வந்த - அழகிய கண்ணே, கை கொடுக்கும் கை, கண்ணுக்கு மை எழுது, ஊர் பஞ்சாயத்து, சாசனம் போன்ற படங்கள் எடுத்திருந்தாலும் - முள்ளும் மலரும் தொடங்கி மெட்டி வரையான படங்களுக்கு நிகராக - தமிழ் திரையுலகில் பிற இயக்குனர்களின் படங்களை ஒப்பிடுவது கடினம். எனக்கு எப்போதும் ஒரு வருத்தம் இருந்து கொண்டே இருக்கும். பூட்டாத பூட்டுகள், உதிரிப்பூக்கள், முள்ளும் மலரும், நெஞ்சத்தை கிள்ளாதே, மெட்டி, நண்டு என்று பொக்கிஷங்களை இயக்கியவர் - ஏன் ஊர்பஞ்சாயத்து போன்ற படத்தை எடுத்து மிக பெரிதாய் ஏமாற்றம் தந்தார். மகேந்திரனின் சில ரசிகர்கள் ஒன்று சேர்ந்து தயாரிப்பாளராகி எடுத்த படம் தான் மகேந்திரன் இயக்கிய 'ஊர் பஞ்சாயத்து' திரைப்படம்.

. இந்த கால் நூற்றாண்டில் மகேந்திரன் மீண்டும் இயக்க போவதாக எத்தனையோ முறை அறிவிப்பு வந்தும் - அது நடக்காமலே போய் உள்ளது. அதனால் தான் மீண்டு வருவாரா மகேந்திரன் என்று தலைப்பிட்டது. ரஜினி நடிக்க '1... 2... 3... 4...' என்கிற பெயரில் மகேந்திரன் இயக்க போவதாக ஒரு அறிவிப்பு வந்தது. 90ல் புதிய பாதை, கேளடி கண்மணி போன்ற படங்களை தயாரித்த விவேக் சித்ரா நிறுவனம் - ரேவதி நடிக்க, மகேந்திரன் இயக்கத்தில் 'புன்னகை என்ன விலை' என்ற பெயரில் ஒரு படம் துவக்கினார்கள். தினசரிகளிலும் விளம்பரம் வந்தது. கடைசியில் எடுக்கப்படவே இல்லை. சில வருஷங்களுக்கு முன் மீண்டும் ஒரு அறிவிப்பு மகேந்திரன் இயக்கத்தில் 'உதிராத பூக்கள்' என்ற பெயரில் ஒரு படம். அதுவும் இல்லை.

ஒவ்வொரு முறையும் அறிவிப்பு வரும் போதெல்லாம், 'இன்னொரு மெட்டி வரப்போகிறதா? இன்னொரு நெஞ்சத்தை கிள்ளாதே வரப்போகிறதா? இன்னொரு உதிரிப்பூக்கள் வரப்போகிறதா?' என்று ஆர்வம் பெருகி ஓடும். ஆனால் பெருத்த ஏமாற்றமே கிடைக்கும். பிற மொழி படங்களை ரீமேக் செய்பவர்களை, பிற மொழி படங்களின் கதையை திருடுபவர்களை பார்த்திருக்கிறோம். ஆனால், தமிழில் வந்த நெஞ்சத்தை கிள்ளாதே திரைப்படத்தையே அப்படி இப்படி மாற்றி - தமிழிலேயே ரீமேக் செய்யப்பட்டு 'மௌன ராகமாக' எடுக்கப்பட்டது மணிரத்னத்தால் - கதை மணிரத்னம் என்று போட்டு கொண்டது தான் கொடுமையான விஷயம்.

ஆனால் மகேந்திரனுக்கு உதிரிப்பூக்கள் படத்தின் கரு புதுமைபித்தனின் 'சிற்றன்னை கதையை வாசித்தத்தில் கிடைத்தது. படத்திற்கும், புதினத்துக்கும் யாதொரு சம்பந்தம் கிடையாது. ஆனாலும் கதை புதுமைப்பித்தன் என்று போட்டார். அதே போன்றே உமாசந்திரனின் முள்ளும்மலரும், பொன்னீலனின் நாவலே பூட்டாத பூட்டுக்கள் ஆனது, சிவசங்கரியின் நாவலே நண்டு திரைப்படம் ஆனது. எந்த கதாசிரியரின் பெயரையும் இரட்டிப்பு செய்யவில்லை. மகேந்திரனிடம் இளைய தலைமுறை கற்று கொள்ள வேண்டியது இரண்டு. ஒன்று... எளிமை. இரண்டாவது... ஒளிவு மறைவின்றி தம் படத்தின் கதாசிரியர் யார் என்று சுட்டிக் காட்டுவதில் இருந்த நேர்மை.

90ல் சராசரி தமிழ் இளைஞர்களுக்கு வரும் சினிமா கனவு வந்து உதவி இயக்குராகும் ஆசையில் கோடம்பாக்கத்தை சுற்றியபோது, மகேந்திரனிடம் பணிபுரிய வேண்டும் என்கிற ஆசை இருந்தது. தமிழ் சினிமாவை பார்த்து பெருமையும், பிறர் பொறாமைப் படும் அளவு ஒரு காவியத்தை மகேந்திரன் படைக்கட்டும்.

*- ஓசை (ஓயாத அலை வலைப்பதிவில்)*

## திரை விமர்சனம்

# The Grey



Action பட பிரியர்கள் அனைவரும் Taken படத்தை அறிவார்கள். படத்தை பார்த்தவர்கள் படத்தின் கதாநாயகர் Liam Neeson ரசிகர்களாக மாறியிருப்பார்கள். Liam Neeson அப்பாவி தந்தை போல் அறிமுகமாகி அடுத்து தன் மகளை கடத்தியவர்களிடமிருந்து மகளை அட்டகாச தந்தையாக காப்பாற்றுவார். ஆமை போல ஆரம்பிக்கும் கதை அடுத்து ஜெட் வேகத்தில் பயணிக்கும். இதில் Liam Neeson தன்னை விட்டு பிரிந்த மனைவி, மகளை எண்ணி கலங்குமிடத்திலும், அடுத்து அதிரடியில் கலக்குவதிலும் அருமையாக நடித்திருப்பார். இதன் பின் இவர் நடித்து பல எதிபார்ப்புகளோடு Unknown படம் வெளியானது. Taken படத்தை போல் படம் ரசிகர்களை கவர வில்லை. Taken படத்தை விருதகிரியில் விஜயகாந்த் சுட்டு எடுத்திருப்பார். தற்போது இவர் நடித்து வந்திருக்கும் படம் The Grey.

அலாஸ்காவில் எண்ணெய் கிணறுகளில் வேலை பார்ப்பவர்களை அங்கே பனிப்பகுதியில் வாழும் ஓநாய்களிடம் காப்பாற்ற ஓநாய்களை வேட்டையாடும் வேலையில் இருப்பவர் நமது கதாநாயகர். ஒரு நாள் வேலை முடிந்து பணியில் இருப்பவர்கள் அனைவரும் விமானத்தில் திரும்பி கொண்டிருக்கும் போது விமானம் பழுதடைந்து விபத்துகுள்ளாகிறது. நிறைய பேர் இறந்து விட Liam Neeson மற்றும் ஆறு ஏழு பேர் மட்டும் உயிர் தப்பிக்கிறார்கள். ஆனால் கடும் பனி கொட்டும் பகுதியில் விபத்துக்குள்ளாவதால் பனியால் உறைந்து சாகாமல் இருக்க அங்கே இருப்பவற்றை எரித்து கிடைப்பவற்றை சாப்பிடுகிறார்கள். ஆனால் அவர்களை வேறொரு பிரச்சனை எதிர்கொள்கிறது. அங்கே வாழும் ஓநாய் கூட்டம் அவர்களை தாக்க ஆரம்பிக்கின்றன.

ஏழு பேரில் ஒருவனை இரவில் காவல் காக்கும் போது கொன்றுவிடுகின்றன. இதனால் இங்கே திறந்த பகுதியில் இருந்தால் எளிதில் நாம் வேட்டையாடபடுவோம் அதனால் அருகே இருக்கும் மரங்கள் இருக்கும் பகுதிக்கு சென்றுவிட்டால் நம்மை பாதுகாத்துகொள்ளலாம் என்கிறார். அங்கே செல்லும் வழியில் பனிபுயலில் நடக்க முடியாமல் ஒருவன் கீழே விழ இவர்களை தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் ஓநாய்கள் கொன்று தின்று விடுகின்றன. இவர்களை ஒரு ஓநாய் படையே விரட்டுகிறது. மீதிப் பேர் எப்படியோ மரங்கள் இருக்கும் பகுதியை அடைந்து விடுகிறார்கள். அவர்களை அங்கேயும் ஓநாய் கூட்டம் சுற்றி வளைக்கிறது.

ஏழு பேரில் ஒவ்வொருவராக அடுத்தடுத்து ஓநாய்களுக்கும் இயற்கைக்கும் பலியாகிறார்கள். இறுதியில் Liam Neeson மட்டுமே மிஞ்சுகிறார். அவரையும் ஓநாய்கள் விட்டபாடில்லை. துரத்திக் கொண்டே இருக்கின்றன. அடுத்து என்ன ஆனது என்பதை படத்தில் பாருங்கள். கொஞ்ச கொஞ்சமாக முதலில் விறுவிறுப்பாக செல்லும் கதை பின் மிக மெதுவாக நகருகிறது. சில இடங்களில் நமக்கு டிஸ்கவரி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் Survivorman நிகழ்ச்சியை பார்ப்பது போல் இருக்கிறது.

படம் எப்ப மீண்டும் சூடு பிடிக்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கும் போது படம் முடிவடைந்துவிடுகிறது. பரபரக்கும் திரில்லர் படமாக இருக்கும் என நினைத்தால் டிராமாவாக முடிவடைகிறது. Action பட பிரியர்கள் படத்தை வேறு படம் எதுவும் பார்க்க இல்லையென்றால் ஒரு தடவை பார்க்கலாம். மற்றபடி Drama படங்களை ரசிப்பவர்களுக்கு இந்தப் படம் பிடிக்கும்.

*- லக்கி*




ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ______

Address: ______

______

______

Postcode: ______

Telephone: ______

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

திரை விமர்சனம்

# அரவான்



தமிழ் சினிமாவில் மிகச் சில இயக்குனர்களே ஒவ்வொரு படத்திலும் வேறு வேறு களத்தை எடுத்து கையாள தைரிய முடையவர்கள். அவர்களில் வசந்தபாலனும் ஒருவர். முதல் படம் காதல் படம். தோல்வி, இரண்டாவது படம், வாழ்க்கையில் தோல்வியடைந்தவனைப் பற்றி, மூன்றாவதாக சரவணா ஸ்டோர் போன்ற கடைகளில் வேலை செய்யும் மக்களைப் பற்றிய கதைக் களன். நான்காவதாய் இப்போது. கள்ளர்களையும் அவர்கள் வாழ்க்கையைப் பற்றியும். அவ்வகையில் இயக்குனரை பாராட்ட வேண்டும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் களவுத் தொழில் செய்து பிழைக்கும் கூட்டத்தின் முக்யஸ்தன் பசுபதி. அவனின் ஊரைச் சொல்லி ஒருவர் ராணி வீட்டு நகையை திருடி விட, அவனைக் கண்டுபிடித்து ராணி நகையை ஒப்படைக்கிறான். திருடியவன் ஆதி என்று அறிந்தும், அவனின் களவாடும் திறமையால் கவரப்பட்டு தன் கூட்டத்தினுள் சேர்த்துக் கொள்கிறான். இதற்கிடையில் ஆதியைப் பற்றி ஏகப்பட்ட கேள்விகள் எழுகிறது. பசுபதியின் தங்கை அவன் மேல் காதல் கொள்கிறாள். களவாடப் போகையில் பசுபதி மட்டும் மாட்டிக் கொண்டு விட அதிகாலையில் அவனை போய் காப்பாற்றிக் கொண்டு வருகிறான். அவர்களின் நட்பு இறுகுகிறது. பசுபதி மஞ்சுவிரட்டில் காயம்பட, அவனைக் காப்பாற்றும் பொருட்டு தான் யார் என்கிற உண்மையை போட்டுடைக்கிறான். ஆதி யார்? அவனுக்கு இந்த ஊருக்குமான உறவு என்ன? கேள்விகளுக்கு விடை திரையில்.

பதினெட்டாம் நூற்றாண்டின் தமிழர்களின் கதை. கதாசிரியர் சு.வெங்கடேசனின் சாகித்ய அகாடமி பரிசு பெற்ற காவல் கோட்டம் நாவலில் ஒரு பகுதிதான் இப் படத்தின் கதை. பசுபதி கூட்டத்தின் களவாடும் முறைகள், அவர்களின் வாழ்க்கை முறை, பேச்சு வழக்கு போன்ற விஷயங்களை நிறையக் கொடுத்திருக்கிறார்கள். படத்தில் நடிக்கும் ஒவ்வொரு நடிகர்களையும் தமிழர்களின் நிறத்தில் தேர்தெடுத்திருப்பதும், காலத்திற்கேற்ற உடையலங்காரங்களும் அருமை. பசுபதியும், ஆதியும் சரியான தேர்வு. படம் முழுக்க அவர்களின் உழைப்பு பாராட்டத்தக்கது. ஆரம்பக் காட்சியிலிருந்து இடைவேளை வரை கிட்டத்தட்ட கதையின் நாயகனாய் பசுபதியே தெரிகிறார். சிலாகித்து பாராட்டப்பட வேண்டிய நடிப்பு. ஆதியும் தன் பங்கிற்கு கடும் உழைப்பை கொடுத்திருக்கிறார். கிட்டத்தட்ட வில்லன் கேரக்டராய் வரும் கரிகாலன். ஆதியின் தாய், பசுபதியின் மனைவி, ஆதியின் நண்பனின் மனைவி. ஆதியை சந்தேகப்படும் மாமா. பாளையக்காரன், பாளையக்காரன் அந்தப்புர அரவாணி, என்று சின்னச் சின்ன கேரக்டர்கள் கூட பார்த்து பார்த்து தெரிந்தெடுத்து செதுக்கியிருக்கிறார்கள்.

இசை பாடகர் கார்த்திக். பின்னணியிசை கொஞ்சம் ஒட்டவில்லை. பாராட்டப் படவேண்டியவர்களில் முக்கியமானவர் ஆர்ட் டைரக்டர் விஜய் முருகன். 18 ஆம் நூற்றாண்டை கண் முன் விவரித்தவிதத்தில் அபாரமான உழைப்பு. டெக்னிக்கல் சொதப்பல் என்றால் அது சிஜியில்தான். சின்னச் சின்ன குறும்படங்களுக்கே அருமையாய் சிஜி செய்யும் காலத்தில் படு சொதப்பலான சி.ஜி வேலை. அதுவும் மாடுகளை வைத்து பசுபதியை தப்பிக்க வைக்கும் காட்சி படு செயற்கை. கதை வசனம் சு.வெங்கடேசன். சாகித்ய அகாடமி பரிசு பெற்றவர். அக்காலத்தில் இருந்த வட்டார வழக்கை மிக இயல்பாய் நம்மிடையே உலவ விட்டிருக்கிறார். அவரது காவல் கோட்டத்தில் வரும் சிறு பகுதி என்றாலும் அந்த காட்சிகளை தன் வசனத்தின் மூலமாய் மிளிரச் செய்திருக்கிறார். கூடுதல் கதை, திரைகக்தை இயக்கம் வசந்தபாலன்.

இவ்வளவு ஆத்தமான உழைப்பு வெறும் கண்காட்சி வேடிக்கையாய் போனதன் காரணம் திரைக்கதை. கதை களவாணிகளைப் பற்றியதல்ல. தவறாக குற்றம் சாட்டப்பட்ட ஊருக்காக பலி கொடுக்கப்பட இருந்தவனின் வாழ்க்கை. தான் நிரபராதி என்று நிருபிக்க போராடும் போராட்டம். அப்படியிருக்க, முதல் பாதி முழுவதும், பசுபதியின் கூட்டம், ஊர், அவர்களின் களவாடும் முறைகள், ஆதிக்கும் அவருக்கும் ஏற்படும் நட்பு, ஆதியின் மேல் ஏற்படும் சந்தேகம் என்று போய்க் கொண்டிருக்கும் போது, திடீரென கதை இடைவேளைக்கு பிறகு பாதை மாறி முழுவதும் ஆதியின் மீது பயணிக்கிறது. அவன் தன் ஊருக்குள் பத்து வருடங்களுக்கு நுழைய முடியாதவனாய் தலைமறைவாக வாழ வேண்டியவன். அப்படிப்பட்ட ஒருவன் எப்படி தினம் எல்லா ஊர் சந்தையில் மிகச் சுலபமாய் சுற்றியலைவான்?. தினவெடுத்த ஜாலியான இளைஞனாய் வலம் வருவான்? ஊர் காவல்காரனான அவன் எதற்காக களவாட வேண்டும். அதுவும் தனி ஆளாய் போய்?. யாருக்காக அவன் கொள்ளையடிக்கிறான்?. இக்கதை ஆதியின் பத்து வருட தலைமறைவு வாழ்க்கையாய் விவரித்து, பசுபதியின் பகுதியை அவன் கடந்து வந்த வாழ்க்கையில் ஒரு முக்கிய பகுதியாய் அமைத்து, இதற்கு முன்னால் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு, தன்னை காப்பாற்றிக் கொண்டவன் நட்பிற்காக தானே முன்வந்து மாட்டிக் கொள்கிறான் என்று சொல்லும் போது ஆதியின் மீது நம் மதிப்பு ஏறியிருக்கும். அப்படி ஏறியிருக்கும் நேரத்தில் இவர்கள் காட்டும் ஏசு கிறிஸ்து பாணி சித்ரவதைகள் நம் கண்களில் கண்ணீரை வரவழைத்திருக்கும். தவறான குற்றச்சாட்டினால் பத்து வருட தலைமறைவு வாழ்வில் ஒன்பது வருடங்கள் கழிந்தவனின் உள் மனப் போராட்டம், நம்மையும் உருக்கியிருக்கும். ஆனால் அப்படி இல்லாததால் அந்த க்ளைமாக்ஸ் காட்சி வரும் போது.. 'சரி ஓகே.. அவ்வளவுதானே' எனும் அளவிற்கு அமைவதற்கு காரணமாகிவிட்டது.

மரணதண்டனைக்கு எதிரான வாசகங்கள் வரும் போது இன்னும் அழுத்தமாயிருந்திருக்கும். எனக்கென்னவோ வரிவிலக்கிற்காக எழுதப்பட்டதாகவே தோன்றியது. உயிர் பலி விதிக்கப்பட்ட ஆதிக்கு பதிலாய் அவரது நண்பனை பலி கொடுத்த பிறகு எதற்காக கரிகாலன் குழு தேட வேண்டும்? அப்படியென்ன பகை ஆதிக்கும், கரிகாலனுக்கும். எதற்காக சொந்த ஊர் மக்களே ஆதி மீண்டும் அவனை பலி கொடுக்க வேண்டும் என்று முடிவெடுக்க வேண்டும் என்பதற்கெல்லாம் பதிலில்லை. எது எப்படி இருந்தாலும் இப்பெரும் முயற்சிக்கு பாராட்டுக்களும், ஆதரவும் வசந்தபாலனுக்கு கொடுத்தே ஆகவேண்டும்.

- *அகிலன்*

# சினித்துளி

## கோச்சடையானில் நாகேஷ்!



ஆரம்பிக்கபட்ட நாள் முதலே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ரஜினியின் கோச்சடையான் திரைப் படத்தினைப்பற்றிய புதியதொரு செய்தி எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. அது மறைந்த நடிகர் நாகேஷ் இப்படத்தில் நடிக்கவுள்ளார் என்ற செய்தி தான் அது. படத்தில் வரும் இரண்டு ரஜினிக்கும் இரண்டு நாகேஷ் நண்பாராகத் தோன்றவுள்ளாராம். இதற்கென காதலிக்க நேரமில்லை, பஞ்சதந்திரம் போன்ற படங்களில் இடம்பெற்ற நாகேஷினை உருவாக்குகிறார்கள்.

இப்படித்தான் ராணா என்றொரு அனிமேஷன் படத்தை ஆரம்பித்தார்கள். பிறகு ஊத்தி மூடினார்கள்! படத்தை எடுக்குறார்களோ இல்லையோ, இப்படி பில்ட் அப் மட்டும் செய்திகளாகக் கசிய விடுகிறார்கள்!

## 'மங்காத்தா'வுக்கு விருதுகள்!



சிங்கப்பூரில் நடந்த சர்வதேச தமிழ் திரைப்பட விருதுகள் விழாவில் வெங்கட் பிரபுவின் மங்காத்தாவுக்கு பல விருதுகள் கிடைத்துள்ளது. ஐ.எம்.என் பத்திரிகை ஏற்பாடு செய்திருந்த சர்வதேச தமிழ் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா கடந்த 3ம் திகதி சிங்கப்பூரில் நடந்தது. அந்த விழாவில் பல படங்கள் கலந்து கொண்ட போதும் சிறந்த படம் சிறந்த இயக்குனர் சிறந்த ஒளிப்பதிவு உட்பட அதிகபட்சமாக பல விருதுகளை அள்ளிக் குவித்துள்ளது.

## சந்தானத்துடன் கூட்டணி!



அமீர்கான் தயாரிப்பில் வெளிவந்த முழு நீள நகைச்சுவைத் திரைப்படம் 'டெல்லி பெல்லி'. இப்படம் இந்தி திரைப்பட ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இதனையடுத்து இந்த படம் தமிழில் ரீமேக் ஆகிறது. படத்திற்கு ஹிரோவாக 'சிம்பு' நடிக்கிறார். இந்த படம் காமெடிக்கு முக்கியத்துவம் இருப்பதால், படத்தில் சந்தானம் நடிக்க உடன்பட்டது படக்குழு. ஏற்கனவே சந்தானம்-சிம்பு கூட்டணி, பல படங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில் அத்திரைப்படத்தில் சிம்புவை வெளியேற்றி கார்த்தியை நடிக்க வைக்கவும் விரும்புகின்றனர் படத்தயாரிப்பாளர்கள். சிம்பு-சந்தானம் கூட்டணியை விட கார்த்தி-சந்தானம் கூட்டணி தான் அண்மையில் அனைவரையும் கவர்ந்திருப்பது தான் முக்கிய காரணமாம்.

## 'வழக்கு எண் 18/7'...



'காதல்', 'கல்லூரி' ஆகிய படங்களைத் தொடர்ந்து தற்போது 'வழக்கு எண் 18/7' என்ற படத்தை இயக்கி வருகிறார் பாலாஜி சக்திவேல். இப்படத்தில் முற்றிலும் புதுமுகங்கள் நடித்து இருக்கிறார்கள். 'வழக்கு எண் 18/7' படம் முடிவடைந்து பல நாட்கள் ஆகியும் பல் வேறுபட்ட சர்ச்சைகளால் எப்போது வெளியாகும் என்று படக் குழுவினருக்கே தெரியாமல் இருந்தது. இந்நிலையில் இப்படத்தினை மார்ச் 30ம் தேதி வெளியிட தீர்மானித்து இருக்கிறார்கள்.

'காதல்', 'கல்லூரி' படங்களைத் தொடர்ந்து பாலாஜி சக்திவேல் இயக்கத்தில் வெளிவருவதால் இப்படத்திற்கு பெரும் எதிர்ப்பார்ப்பு நிலவி வருகிறது.

எல்லாளன் இப்பொழுது உங்கள் அருகாமையில்..

ELLALAN SUPER MARKET



- Off Licence
- மீன் வகைகள்
- பலசரக்கு வகைகள்
- இறைச்சி வகைகள்
- இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள்
- மரக்கறி வகைகள்

020 8681 7485
Group of Spice Land
234-236, London Road, Croydon CRO 2TF



Discover the world with....
Serendib Lanka Travels Ltd

Colombo Special
Srilankan £515.00 Emirate £477.00
Gulf Air £605.00 Etihad £454.00

Very popular Destination Special
Only on Srilankan Airlines
Colombo £515.00

Popular Destination Special
Sydney £855.00
Melbourne £650.00

JET AIRWAYS Brand new Boeing 777-300 ER Flights
Colombo: £545.00 Baggage: 32 k.g + 7 k.g
Chennai: £ 475.00 Baggage: 46 k.g + 7 k.g

All fares mentioned are low seasons including taxes



LEWISHAM : 020 8318 7775 Mob : 07983437835
15 Marischal Road, Lewisham, London SE13 5LE
E.Mail : info@serendib-lanka.co.uk
IATA

# GT MOBILE

**Pay less talk more**

# £10 Free Credit

## with £20 top-up



**Sri Lanka Landline**

# 7p /min

**Mobile 11p /min**

No connection charge

| Top-up | £5 | £10 | £20 |
|---|---|---|---|
| FREE minutes & texts* GT to GT | 100 | 300 | 750 |



| | Landline | Mobile |
|---|---|---|
| UK | 3p /min | 9p /min |

www.gtmobile.co.uk For more information: 020 7132 0303 Top-up available: Sainsbury's Costcutter BOOKER

# Southall Travel

## *Redefining Travel*

### *Why travel with* **Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

### ஏன் **சவுத்ஹோல் டிராவல்** மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்


*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

# கேள்விகளும் பதில்களும்




## எனது ஒலிபதிவுப்பெட்டி இதில் இயங்குமா?

ஏப்பிரல் 2012 க்குப் பின் உங்கள் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் பெட்டி VCR அல்லது DVD இலக்க ரீதியானதாக இல்லாவிட்டால் நீங்கள் ஒரு அலைவரிசை நிகழ்ச்சியைப் பதிவுசெய்து கொண்டிருக்கும் போது இன்னுமொரு அலைவரியையைப் பார்க்க முடியாது. இவ்வாறான வசதியை டிஜிட்டல் ரீவி பதிவுப் பெட்டி (digital TV recorder) மாத்திரமே பதிவுசெய்யும், ஒரு டிஜிட்டல் ரீவி பதிவுப்பெட்டி உங்கள் தொலைக்காட்சியை இலக்கரீதியாக(டிஜிட்டலாக)ரீவி ஆக மாற்றிக் கொடுக்கும்.

## எனது தொலைக்காட்சி வானலை வாங்கி (ஏறியல்) என்ன ஆகும்?

நீங்கள் பிறிவியூ(Freeview)-ஐ தெரிவுசெய்திருந்தால் மட்டும் வானலை வாங்கி தேவை. இப்போது தரமான படங்கள் தெரிந்தால் புதிய வானலை வாங்கத் தேவையில்லை.

## நான் அடுக்கு மாடி வீட்டில் வசித்தால் என்னவாகும்?

நீங்கள் அடுக்கு மாடி வீட்டில் குடியிருப்பவராக இருந்தால் உங்கள் தொலைக்காட்சி சமிக்கைகளை எல்லோருக்கும் பொதுவான வானலை வாங்கி (ஏரியல்) மூலம் வருவதாக இருக்கும். உங்கள் குடியிருப்பு மேற்பார்வையாளரிடமிருந்து அங்குள்ள வானலை வாங்கி பாவனைக்குத் தயாராக உள்ளதா என்பதை அறிந்து வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு எமது அறிவுரை தருபவருடன் ஆங்கிலத்தில் அல்லது எந்த மொழியில் நீங்கள் பேசுகிறீர்கள் என்பதைத் தெரியப்படுத்தி 08456 50 50 50 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும். இவ்விவரம் பற்றிய செய்திகளை digitaluk.co.uk/languages என்ற இணைய தளத்தில் கிடைக்கப்பெறும்.

get set for digital

# லண்டன் தொலைக்காட்சி இலக்கரீதியாக (டிஜிட்டல்) மாற்றப்படப்போகிறது.

**தற்போது பாவனையிலுள்ள தொலைக்காட்சி–TV சமிக்கைகள் சில கிழமைகளுக்குள் நிறுத்தப்பட உள்ளன. இதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இலக்க ரீதியாக (டிஜிட்டல்) TV முறைமை குறித்து நேயர்களுக்கு விசேட அறிவூட்டல்கள் மற்றும் வழிகாட்டல்கள் TV –முதன்மையான நிலைமாற்ற நிறுவனத்தால் வழங்கப்பட உள்ளன.**

2012 ஆண்டு ஏப்பிரல் மாதம் லண்டன் ரீவி–TV இலக்க ரீதியாக மாற்றப்படுகிறது. பழைய அலைவரிசைகள் நிறுத்தப்பட்டு பலம் வாய்ந்த இலக்கரீதியான அலைவரிசைகள் கொண்டுவரப்படும். இவை மேலதிக அலைவரிசைகளை முதன் முறையாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் வீட்டிற்குக் கொண்டுவரும்.

## நான் என்ன செய்ய வேண்டும்?

- உங்களிடம் ஏற்கனவே இலக்கரீதியான பிறிவியூ (Freeview, BT vision or TopUp TV) தொலைக்காட்சி (TV) அல்லது பெட்டி இருந்தால் உங்கள் தொலைக்காட்சி (TV)-யை **2012 ஏப்பிரல் 4–ம் 18–ம்** திகதிகளில் மறுபடி சமப்படுத்தி விடவும்

- உங்களிடம் தனிய ஐந்து ரீவி–TV அலைவழி(சனல்ஸ்) பார்க்கும் வசதி மட்டும் இருந்தால் நீங்கள் உங்கள் ரீவியை இலக்க ரீதிக்கு மாற்ற வேண்டும். இலக்க ரீதியாக இல்லாத எந்த தொலைக்காட்சியும் (TV) அல்லது இலக்க ரீதிக்கு மாற்றப்படாத தொலைக்காட்சியும் (TV) ஏப்பிரல் மாதத்திற்குப் பின் செயல்பட மாட்டாது.

- உங்களிடம் ஸ்கை (Sky). வேர்ஜின் (Virgin) அல்லது பிறிசட் (Freesat) தொலைகாட்சி (TV) இருந்தால் நீங்கள் ஏதும் செய்ய வேண்டியதில்லை.

## இந்த மாற்றம் எவ்வாறு நடைபெறும்?

இது இரண்டு படிநிலைகளில் நடைபெறும். உங்களிடம் இலவசமாகப் பார்க்கும் பிறீவியூ (Freeview) இருந்தால் ஒவ்வொரு படிநிலையிலும் தனித்தனி சமநிலைப்படுத்த வேண்டும்.

## படிநிலை ஒன்று – 4 ஏப்பிரல்

பழைய பிபிசி (BBC) இரண்டு, சமிக்கை நிறுத்தப்படும். இதற்கு முன் இலக்க தொலைக்காட்சியைப் பெற முடியாத வீட்டினர் பிபிசி இலக்க அலைவரிசைகளைப் பார்க்க முடியும்.

## படிநிலை இரண்டு –18 ஏப்பிரல்

பழைய பிபிசி ஒன்று (BBC1), ஐரிவி (ITV), சனல் 4–ம் (Channel 4) சனல் 5–ம் (Channel 5) ஆகியனவற்றின் தொலைக்காட்சி சமிக்கைகள் நிறுத்தப்பட்டு இலக்கரீதியான சமிக்கைகளுக்கு மாற்றி அமைக்கப்படும். ஏனைய இலக்கரீதியான அலைவரிசைகளும் பாவனைக்குக் கிடைக்கும்.



## நான் எவ்வாறு இலக்க ரீதியான தொலைக்காட்சியைப் (digital TV) பெறலாம்?

இலக்கரீதியான தொலைக்காட்சியைப் பெறுவதற்கு நீங்கள் பிறீவியூ(Freeview), சற்லைட் (satellite), அல்லது கம்பி வழி (கேபிள்) சேவைகளைப் தெரிவு செய்து பயன் படுத்தலாம். அல்லது இலக்கரீதியான தொலைக்காட்சிப் (digital TV) பெட்டியை வாங்கவும்.

இவ்வாறான சேவைகளை அளிக்கும் சிலர் உதாரணமாக பிறீவியூ (Freeview ) மற்றும் பிறீசற் (Freesat) ஆகியன ஒரு தொகைப் பணத்திற்கு தமது சேவையை அளிப்பார்கள். ஏனைய சேவை அளிப்பவர்களான ஸ்கை ரீவி (Sky TV) மாதந்தக் கட்டணம் வதூலிப்பார்கள்.

மேலதிக தகவல்களுக்கு எமது அறிவுரை தருபவருடன் ஆங்கிலத்தில் அல்லது எந்த மொழியில் நீங்கள் பேசுகிறீர்கள் என்பதைத் தெரியப்படுத்தி 08456 50 50 50 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும். இவ்விவரம் பற்றிய செய்திகளை digitaluk.co.uk/languages என்ற இணைய தளத்தில் கிடைக்கப்பெறும்.

get set for digital

# மறுபடி சமநிலைப்படுத்துதல்

உங்களிடம் பிறீவியூ இருந்தால் நீங்கள் உங்கள் தொலைக்காட்சியை ஏப்பிரல் 4-ம் திகதி மறுபடி சமநிலைப்படுத்தவும். திரும்பவும் ஏப்பிரல் 18-ம் திகதியும் இதைச் செய்யவும்.

மறுபடி சமநிலைப்படுத்துவதற்கு உங்கள் தொலைஇயக்கியைப் (றிமோர்ட்) பயன்படுத்தவும். எவ்வாறு என்பதைக் கீழே பார்க்கவும்.

1. உங்கள் பிறீவுயூவை ரீவி அல்லது பெட்டியை இயக்கவும். உங்கள் தொலைஇயக்கியில் உள்ள பட்டியலை அழுக்கவும்.
2. அதில் உள்ள செற்அப் ('set up') அல்லது இன்ருலேசன்-அமைப்பை('installation') தெரிவுசெய்யவும், அல்லது உங்கள் றிமோர்ட்டில் படஅறிகுறி இருந்தால் ஸ்ற்ரலைட் டிஸ் அல்லது கருவிப் பெட்டியைத் தெரிவு செய்யவும்.
3. உங்களை குறியீடு செய்யும்படி கேட்டால் 0000 அல்லது 1234 எனும் இலக்கங்களை குறியீடு செய்து சமநிலைப்படுத்துவதைத் ('full retune') தெரிவு செய்யவும், இதைச் சில சமயம் முதல் முறை இணைத்தல் ('first time installation'), கம்பனியில் அமைத்தபடி('factory reset'), முன்னிருப்பு அமைப்பு ('default settings') அல்லது ஏற்றுமதிக்கென அமைத்தபடி ('shipping conditions'), என அழைப்பர். அலைவரிசைகளைப் புதுப்பித்தல் 'channel update' அல்லது அலைவரிசைகளை மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளுதல் 'add channels' ஆகியனவற்றைத் தெரிவுசெய்ய வேண்டாம்.
4. உங்கள் எல்லா அலைவரிசைகளையும் அழிக்கும்படி கேட்டால் ஓகே-'OK' என இருக்கும் பொத்தானை அழுக்கவும்.
5. அலைவரிசைகள் தாமாகவே மறுபடி நிறுவப்படும். சில சமயம் உங்கள் தொலைக்காட்சி (ரீவி) நின்று திரும்பவும் ஆரம்பிக்கும்.



இவ்வறிவுறுத்தல்கள் ஒரு கையேடு மட்டுமே.

குறிப்பிட்ட ஆக்கப்பொருளுக்கான அறிவுறுத்தல்களை நீங்கள் digitaluk.co.uk/retuning என்ற இணையத்தளத்தில் காணலாம்.

# மேலதிக உதவி



**நீங்கள் 75 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால் அல்லது ஏதாவது இயலாமை உள்ளவராக இருந்தால் உதவித் திட்டத்தின் கீழ் நீங்கள் உதவி பெறலாம். இத்திட்டம் பிபிசி–BBC ஆல் நடத்தப்படுகிறது.**

### நீங்கள் பெறக்கூடிய உதவி.

- சுலபமாக இயக்கும் கருவி
- கருவிகளை உங்களுக்கு அளித்து இயக்கச் செய்வதற்கு ஒரு உத்தியோகத்தவர் வந்துதவுவார்
- இக்கருவிகள் பொருத்தப்பட்டபின் பன்னிரண்டு மாதங்களுக்கு அதற்கான உதவியும் அதை சமநிலைப்படுத்தவும் உதவுவார்கள்.

இச்சேவையை அளித்துதவுவதற்கு £40 ஆகும், நீங்கள் நல உரிமை பெறுபவராக இருந்தால் இது இலவசம் ஆகும். உதவி அளிக்கும் திட்டத்தினர் உங்களுக்குக் கடிதம் எழுதுவார்கள். ஆனால் நீங்கள் இலவசமாக 0800 40 85 900 என்ற தொலைபேசி எண்ணில் அழைத்து ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவியை நாடலாம்.

### மேலும் விவரம் அறிய

**0800 40 85 900*** என்ற தொலைபேசி எண்ணில் அழைத்து ஆங்கிலத்தில் ஒரு அறிவுரை தருபவருடன் பேச வேண்டும் எனக் கேட்கவும், அல்லது ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம் தொடர்பை ஏற்படுத்தி உதவி தேவை எனக் கேட்கவும். மேலதிக தகவல்களுக்கு நீங்கள் ஆங்கிலத்தில் உள்ள இணைய தளத்தைப் பார்க்கவும் **helpscheme.co.uk**



BBC The Switchover Help Scheme is run by the BBC

switchover help scheme